சித்திரை - 2022 நன்கொடை 30

# கண்ணாமூச்சி

மண்சார் இலக்கிய இதழ் தனிச்சுற்று ஆடல்:1 பாடல்:2



# சன்மேன்

டெய்லர்ஸ்

எண்:9, அரிசிக் கடைத் தெரு, மன்னார்குடி.

உரிமை: கோ.அருணகிரி

செல்: 9976052585

பறவைகள்
உயரத்தில் மிதப்பது
சாதனை அல்ல
அதுவே
அதன் இயல்பு
கண்ணாமூச்சிக்கு வாழ்த்துகள்...













# வீடு வந்து சேர்ந்த வெள்ளாமை

பேசியவர்கள் பேசாதவர்கள் பேச நினைத்து பேசாமல் போனவர்கள் பேச வேண்டாம் என்றே நினைத்த அவர்கள் எல்லோரையும் நோக்கி கைநீட்டி வருகிறது கண்ணாமூச்சி.

முதல் இதழை நேர்படுத்தி கொண்டு சேர்ப்பதில் பெரும் பாய்ச்சல் காட்டிய கலை பாரதி, பாலகுமரன் பரிதி, த.ரெ.தமிழ்மணி உள்ளிட்ட ஆசிரியர் குழுவினருக்கு நெகிழ்வும் மகிழ்வும்.

இந்தப் பயணத்திற்கும் அதே வீரியத்தோடு அவர்களது பங்களிப்பை வேண்டி நிற்கிறேன். முதல் இதழ் போன்று இல்லை என்று பலர் பாராட்டியதற்கு வடிவமைப்பு ஒரு காரணமாக இருந்தது. வடிவமைப்பை மிகவும் நேர்த்தியாக ஒழுங்குபடுத்திய நண்பர் விடாரண்யத்திற்கு அன்பும் நன்றியும்.

பேசும் புதிய சக்தி மாத இதழில் கண்ணாமூச்சிக்கான அறிமுகம் வெளியிட்ட ஆசிரியர் குழுவினருக்கு நன்றிகள்.

கண்ணாமூச்சி குறித்த பரந்துபட்ட கவன ஈர்ப்பு இருப்பதால் மிகுந்த கவனத்தோடு இந்த இதழும் நெய்யப்படுகிறது. அறிமுக இதழ் என்றும் பாராமல் எங்கள் மீது நம்பிக்கை கொண்டு படைப்பு பங்களிப்புச் செய்த பேராசிரியர் சு.இராமசுப்பிரமணியன், எழுத்தாளர் இரா. மோகன் ராஜன், சொல்லாய்வர் ஆ.அரிமாப்பாகன், பாவலர்கள் இலரா.மோகன், கோ கலியமூர்த்தி முதலானோருக்கு வணக்கமும் அன்பும்.

முகநூல், கட்செவி, கடிதங்கள் மூலமாக உரையாடல் நிகழ்த்தி எங்களை உற்சாகப்படுத்திய தோழமை உறவுகளுக்கு நன்றி என்பதையும் கடந்து உணர்ச்சிப் பெருக்காய், கைகோர்த்துப் பயணிப்போம். "சின்ன புள்ளைங்க வெள்ளாமை வீடு வந்து சேராது"என்ற பழமொழியும் எங்கள் மண்ணில் உண்டு. எங்களது இந்த வெள்ளாமை பல வீடு சென்று சேர்ந்திருக்கிறது. எங்கள் உழுகுடிகளில் பெரும்பாலும் அந்தி சமையல்தான். அந்த அந்தி உலையாய் பொங்கி நிற்கிறது எங்கள் உள்ளமும்!

பாமணியாற்றுப் படுகையிலிருந்து...

அன்பின் ஈரங்களுடன்,

**கோ.அருணகிரி**

ஆசிரியர்.

**கண்ணாமூச்சி**
மண்சார் இலக்கிய இதழ்
தனிச்சுற்று
திருவள்ளுவர் ஆண்டு 2053
சித்திரை - 2022

நிறுவனர்
ப. பரிதிபாண்டியன்

ஆலோசகர்
அம்ரா பாண்டியன்

ஆசிரியர்
கோ.அருணகிரி

ஆசிரியர் குழு
கலை பாரதி
த.ரெ. தமிழ்மணி
சா. தமிழ்ச்செல்வன்
'ஞா.ஜெயக்குமார்
சா.சிவகுமார்
க.தங்கபாபு
பாலகுமரன் பரிதி
ப.மணிவண்ணன்

இதழ் வடிவமைப்பு
விடா பப்ளிகேஷன்ஸ்

தொடர்பு முகவரி
சன்மேன் டெய்லர்ஸ்
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம்.
கைபேசி: 9976052585, 9655480092

படைப்புகளை அனுப்ப
வாட்ஸ் அப் எண் 9659335462
மின்னஞ்சல்
kannamochi.mannai@gmail.com

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

கட்டுரை :

**காதல் நன்மரம்**
- சு. இராமசுப்பிரமணியன் | 14

சிறுகதை :

**கருவாடு**
- த.ரெ.தமிழ்மணி | 25

கவிதை :

**தமிழர் வேர்களைத் தேடி**
-இலரா மோகன் | 33

சிறுகதை :

**ஊர்முழு வேட்டி**
- அண்டனூர் சுரா | 37

மண்ணின் கதைகள் மக்கள் மொழியில்:

**மகமாயி நீ இருந்தா கேளு**
- கோ.அருணகிரி | 48

சந்தா விவரம்:
**தனி இதழ். 30**
**ஆண்டு சந்தா 150**
அஞ்சல் செலவு உட்பட
**மூன்றாண்டு சந்தா. 450**
அஞ்சல் செலவு உட்பட

சந்தா, நன்கொடை வளர்ச்சி நிதி தொடர்புக்கு
**கூகுள் பே 9659335462**



# டூரிங் டாக்கிஸ்:
# ஒரு கருப்பு வெள்ளை நினைவுகள்..

## இரா.மோகன்ராஜன்

சினிமாவுக்கு போறதே ஒரு கொண்டாட்டம்னு சொன்னா இந்த தலமொற மொறப்பா பாக்குது. பாவம் அதுங்களுக்கு வீட்டு நடுகூடத்துலலேயே எல்லாம் கெடச்சாலும் கொண்டாட்டமான மனநிலை கெடைக்குதான்னு பாத்தா சொல்லிகிறாப்போல ஒண்ணுமில்லே.

யாரும், யாருகூடயும் பேசிக்காமே கைபேசிய நோண்டிட்டுருக்குங்க... டி.வி ஒரு பக்கம் ஓடுது. நொறுக்குத் தீனி காலியாகிட்டே இருக்கு. செல்லப்பிராணிங்க கொட்டாவி விட்டுட்டே காலடில படுத்து, வீட்டு மக்க மனுசங்க தன்ன திரும்பிப்பாப்பாங்களான்னு ஏக்கப் பெருமூச்சு விட்டுட்டு குட்டித் தூக்கம் போடுதுங்க... நம்ம டூரிங் டாக்கீசுனா அப்படியா ஈ, எறும்பு எல்லாத்துக்குமே கொண்டாட்டம்தா.

டாக்கீசுல பஸ்ட்ரெக்கார்டு மோளக்கச்சேரில காரகுறிச்சி வாசிச்சு முடிச்சு சரவண பொய்கை ஆரம்பிச்சதுமே வீடு பரபரப்பாகிடும். அக்கா, தங்கச்சி ஊருக்கு வந்துருக்குற அத்தை சரசரன்னு தலைபின்ன ஆரம்பிச்சிடுவாங்க... சின்னகுட்டியை பயணப்படுத்தி விடலெனா ரெகளை ஆகிடும்.. ‘மருதமலை மாமணியே..னு’ மதுரை சோமு குரலெடுக்கிறாரோ இல்லியோ.. அந்தாப் போட்டுட்டான் மருதமலை.. வார் ரீலு இன்னெரம் போட்டுருப்பான் என்று பொண்டுகள் பாய், தண்ணீர் ஜக்கு, காபி தம்ளர், வெத்திலை பாக்கு போடுபவர்கள் என்று சரசரன்னு கிளம்பி ஓட்டமும் நடையுமாவார்கள்.

செகண்ட் சோ இரவு காட்சி என்றால் இத்தனை ஆர்ப்பாட்டம் இருக்காது. குசுகுசு என்று இரவுக்கேயுரிய ரகசியத்துடன் கிளம்பிப் போவார்கள், நண்டு, சிண்டுகள் முழிச்சிகிட்டு ஊடே கிளம்பிவிடும். பகலெல்லாம்

களையெடுத்து தொழுவம் கழுவி வீடுவாசல் பெருக்கி, சமைத்து குமைத்து சாயங்கால மஞ்சள் வெயிலில் குளித்துவிட்டு தலை சாய்க்கும் வூட்டு பொம்பளைங்களுக்கு சினிமாவும் டூரிங் டாக்கீசும் இல்லைனா அடுப்படி நரகமாத்தான் போயிருக்கும்.

ஊரு சுத்திட்டு வார ஆம்பளைங்களுக்கு ஆயிரம் பொழுது போக்கு. பொம்பளைங்களுக்கு குஞ்சாரம், கோழிக்கூடு, கழனிப்பானை, மாட்டுத் தொழுவத்த சுத்தி சுத்தி வந்தாலும் ஒரு மயிர்காலும் தேறா.

டூரிங் டாக்கிசுல, கருப்பு வெள்ளையில அசையிற பேசுற, பாடுற ஆடுற காட்சிகள்தா அவங்க வாழ்க்கையில் ஒரு கலர கொடுத்துச்சு.

எத்தனையோ சரோசா தேவிங்க, தேவிகாங்க, சாவித்திரிங்க, சீதேவிங்க பேருல மட்டுமில்ல அடுப்புக்கூடத்துலேயும், அழுக்கேறின சுவத்துல, ரசம்போன கண்ணாடில தங்கள அவங்களா நெனைச்சு அழகுபாத்தும், பழிப்புக்காட்டியும் வாழ்க்கையில வண்ணத்தக் கூட்டிருக்காங்க.

ஆம்பளைங்க மட்டும் என்னா அவங்களுக்குனு ஒரு ஸ்டைலு, பேச்சு, நடைக்குனு கதாநாயகங்க இருந்தாங்க.

அவங்க அவங்க கதாநாயகன், நாயகி படம் போடுற அன்னிக்கு விசேசமா அலங்கரிச்சு கிளம்புவாங்க...

சினிமா கொட்டக தொலைவ பொருத்து அவங்க ஓட்டமும் நடையும் இருக்கும். சினிமா கொட்டக ரெக்காடு இப்ப போல அப்போ வாகன எறச்சல் கெடையாததால உத்தேசமா ஒன்றறை கிலோமீட்டருக்கு கூட கேட்குமாக்கும்.

''தேவரின் குலம் காக்கும் வேலய்யா... ''ஏய் அன்ன நடை நடக்காமே வெறசா போங்கடி அந்தா ரெக்கார்டு முடிய போகுது.'' நா முந்தி நீ முந்தி என்று கொட்டகை வாசலைத் தொட்டு, எவ்வளவு அவசரமுன்னாலும் நாலு முழம் மல்லிகைப் பூவை சுற்றி தலையில் வைச்சுகிட்டு டாக்கிசுக்குள்ள போறதுதான் மரியாதை.

பூ விக்கிற பையன் ''அக்கா நேத்து மத்தியான ஆட்டத்துக்கு வந்திங்க போலம்பான்.. இல்ல. ரெண்டாவது ஆட்டத்துல பாத்தனா ஆங் நெனைப்புல்லியேம்பான்... அம்மாவோ, பாட்டியோ மொறைப்பாங்க அத்தைய..''

''இல்லண்ணி... எதித்தவிட்டு கனகா அக்கா கூப்பிட்டா. கோயிலுக்கு போயிட்டு அப்படியே போயிட்டம்னு மென்னு முழுங்குவா.."

'' அவ கூட ஆட்டத்துக்கு போகதெனு எத்தனை தடவ சொல்லிருக்கன்.

வெளக்கமாரு. நாதான் முனுக்குனா உன்னைய அழைச்சுக்கிட்டு வாறேன்ல அப்பறமென்னனு காதை கடிப்பா அம்மா...''

பூக்காரனுக்குக் காதுல மெலிசா விழுந்து மெல்ல சிரிச்சுக்குவான்.

இன்னைக்கும் மல்லிகை, அரும்பு வாசத்தை கண்ணை மூடி அனுபவிச்சா டூரிங் டாக்கிசு வாசல்தான் நெனைப்புல ஆடும்.

சின்னபுள்ளைங்க நாங்களாம் லேடிசு வரிசையில் அம்மா, அக்கா, அத்தைங்களோடதான் டிக்கெட் எடுத்துட்டுப் போறது. சின்னப் புள்ளைங்களுக்கு டிக்கெட் கெடையாது அதால அவங்க டிக்கெட்ட வாங்கி நாங்க சட்டபைல வெச்சிக்குவோம். எடவேளையில் கொட்டகை ஆளுங்க நெனைச்சாப்போல டிக்கெட்ட காமிக்க சொல்லி பாத்துட்டுப் போவாங்க. நம்ம ஆளுங்க சில பேரு டிக்கெட் எடுக்காது. அதால அப்படி. பெரும்பாலும் ஆம்பளைங்க சைடுதான் அப்படியான ஆளுங்க இருப்பாய்ங்க.

மறுநாளு பசங்களோட ரோஸ் கலர் டிக்கட்டை வெச்சு சினிமா வெளயாட்டுக்குத் தோதா எங்ககூட சினிமா பாக்க வந்தவங்க டிக்கெட்டலாம் வாங்கி பத்திரப்படுத்திக்குவாங்க புள்ளைங்க.

ஒரு படத்தை 3, 4 ஆட்டம் பாத்ததா சொல்லிக்கிறதே பெருமன்னாலும், டிக்கட்ட கமிச்சா அதுக்கு கெடைக்கிற மரியாதையே வேற...

ஆனா சில பேரு இருப்பாய்ங்க.. சாராயக்கடையில கெடக்குறாபோல டூரிங் டாக்கிசே பலின்னு.. அங்கேய சின்ன சின்னவேலய பாத்துகிட்டு.. தரடிக்கட்டு மணல்ல குப்பை கூளம் அள்ளிக்கிட்டு... இப்படி ஒரம் ஒதுங்கி சினிமாவும் பாத்துகிட்டு அங்கனயே எடுபுடி வேலயும் பாத்துகிட்டு...

நாதன்னு ஒருத்தன் இருந்தான். அவன் அண்ணன் டூரிங்ல கோலி சோடா விப்பான். அவனோட இவனும் போவான்.. எதுக்கு அப்படியே கொஞ்ச நேரம் படம் பாத்துட்டு வரத்தான். அவன் பாக்குறது என்னவோ அஞ்சு நிமிசம் அதயே ரெண்டு மணி நேர படமா ரீல் விடுவான். அது மட்டுமா..

அண்ணன் கோலி சோடா விக்கிறப்போ... ஆம்பளங்க சைடு கூப்பிட்டு அவங்களுக்குப் புடிச்ச பொம்பளங்களுக்கு தாவணி, பொடவ கலரு சொல்லி ஸ்பெசல் கலர் சோடா கொடுக்கச் சொல்லி காசு கொடுத்துடுவாங்க. அவனும் கரெக்டா அவங்க ஆளுகிட்ட சோடாவ ஒடச்சு கொடுத்துட்டு ஆம்பளங்க சைடு பாத்து அந்த ஆளு பதிலுக்கு தலையாட்டுறானானு கவனிச்சு ஒரு நக்கலு சிரிப்போட... "சோடா... கலரேய்ய்ய்!"ன்னு நகருவான்.

செல சமயம் கலரு மாறிபோயிரும். அப்போ படம் முடிஞ்சு காசு எடுத்து வைடா, யாருக்குடா கொடுத்தேனுலாம் சண்டை வரும். அப்போலாம் நாதன் அண்ணன் சளைக்காம சண்டை போடுவான் பதிலுக்கு, ‘‘நீங்க சொன்ன ஆளு அப்படி, வாங்கிக்கிட்டாதானேனு சத்தம் போடுவான்...’’

கொட்டகை தரை டிக்கட்டு இருபத்தி அஞ்சு பைசா, சேர்னா அம்பது காசு. வெள்ள வேட்டி கட்டுனவங்க ஆபிசருங்களாம் சேர் டிக்கட்டுக்கு வருவாங்க... அவங்க சைடு முறுக்கு விக்காது சோடாதான்...

முறுக்கு, பொரிச்ச கல்ல இதலொம் தரை டிக்கெட்டு பக்கம்தான். தரைன்னா மணலு. அதுல ரெண்டாவது ஆட்டம் படுத்துகிட்டே பாக்குறது அறத பழசு சினிமாவவிட ஒசத்தியானது.

புடிச்சா பாக்கலாம். இல்லே தூங்கலாம். படம் முடிஞ்சு யாராச்சும் எழுப்பிவிடுவாய்ங்க.

ஆம்பளைங்க சைடு பொங்களைங்க சைடு நடுவால ஒரு சவுக்கு தடுப்பு இருக்கும். பெரிய மரப்பெல்லாம் கெடையாது. தடுப்புக்கு பக்கத்துல எடம் புடிக்கிறதுல ஆம்பளைங்ககிட்ட பெரிய அடிதடியெல்லாம் நடக்கும். அது எளவயசாளுங்களுக்குப் புரியும்.

எடவேள படம் நிப்பாட்டுறப்போதான் லைட் போடுவாய்ங்க...பெறவு ஆப் பண்ணிடுவாய்ங்க. நம்ப ஆளுங்க பொரிச்ச கடல பேப்பர் குச்சிய ராக்கெட் செஞ்சு பொம்பளங்க பக்கம் விடுவாய்ங்க. இல்ல.. எம்.ஜி.ஆர். பின்னாடி மறஞ்சு மறஞ்சு கத்தியால குத்தவாற நம்பியார காட்டி கொடுக்குறதுக்காக எம்.ஜி.ஆர் முதுகுல விட்டு திரும்பி பாக்கச் சொல்லி கத்துவாய்ங்க...!



பொம்பளைங்க வல்லிசா கெட்ட வார்த்த சொல்லி பேசுறத டூரிங்லதான் கேக்கலாம்...! நம்பியாருக்கும் எம்.ஜியாருக்கும் தள்ளு முள்ளு வந்து கொதிக்கிற தண்ணியோ, மலை உச்சியோ... நடக்குற சண்டையில் தாய்க்குலங்க பொங்கி எழுந்துடுவாங்க!

ஒலகத்துலயே அதிகமா பொம்பளய்ங்க கிட்ட திட்டும் தூசணமும் வாங்கின ஒரே ஆளு யாருனா நம்ம நம்பியாராத்தான் இருப்பாரு.

சித்தமல்லி, இந்த பக்கம் அம்மளூரு, தம்பிக்கோட்டைன்னு அக்கம்பக்கம் உள்ள ஊருலேந்து சாயங்கால ஆட்டத்துக்கு ஆளுங்க வண்டி கட்டி, தெருவாசிங்க

அது போக குடும்பம் குடும்பமா வந்து எறங்குவாங்க.

எங்க வூரு லெட்சுமி டாக்கிசுக்கு எதுத்தாப்லதா எங்க ரைசுமில்லு. அது வாசமுற்றத்துல அம்பது அறுபது மாடும் வண்டிகளும் அவுக்கலாம். மொத ஆட்டத்துக்கு வந்து எறங்குற வண்டிகள வேடிக்கை பார்க்கறது சினிமாவவிட பெரிய சுவாரசியமா இருக்கும்.

புதுப்படம் போடுற அன்னிக்கு (புதுப் படம்னா ரெண்டுமாசம் கழிச்சுதான் வரும்) பொங்கலு, தீபாவளி, ரம்ஜான்னு கொஞ்சம் புது படம் போடுவாய்ங்க. அன்னிக்கெல்லாம் மில்லு முற்றம் பாரவண்டி, கொடை வண்டி, வில்லுவண்டியால நெறைஞ்சிருக்கும்.

வண்டி ஓனருங்க, இல்ல மாட்டுவண்டி உரிமைக்காரங்க படம் பார்க்க பிடிக்கலேனா எங்களோட ஆட்டம் முடியுற வற பீடி வலிச்சிக்கிட்டு கத பேசுவாங்க இல்ல வண்டில வைக்கல பரப்பி அது மேல எட்டுப்பட்டி ராசா கணக்கா ஒரு தூக்கம் போடுவாங்க.

எப்படின்னாலும் வண்டிக்கு கீழ ஒரு அரிக்கேன் விளக்க தூண்டி வச்சிருப்பாங்க.. கொசுக் கடினா என்னனு கேக்குற காலம் அது.

நல்லா கத உள்ள படம்னா மில்லுல ஒக்காந்தே டாக்கிசுல ஓடுற படத்தோட ஒலிச்சித்திரம் கேட்போம். பாத்த படம்னா காட்சி மனசுக்குள்ள ஓடும்.

ஒரு தீபாவளிக்கு உரிமைக்குரல் படம் வந்துச்சு. கிட்டதட்ட ஒரு மாசம் எங்க டாக்கீசுல அத ஓட்டித் தீத்தாங்க. சனங்களும் அலுக்காம பாத்து தீர்த்தாங்க.

உரிமைகுரல், அப்றம் 16 வயதினிலே இந்தப் படம் ஓடுறப்பலாம் ஆம்பளை சைடு டிக்கெட் கவுன்டருக்கு போலீசுலேந்து ரெண்டு கான்ஸ்டபிளை போட்டுருந்தாங்க. கொஞ்சம் புதுப்படம் அப்றம் பண்டிகை நாள்ள போலீசுகாரங்கதான் கவுன்டர ஒழுங்கு படுத்துவாங்க.

எங்க லெட்சுமி டாக்கீசுல கவுன்டருங்கறது மூங்கி தட்டில இருக்கும். அதுபோக அந்தக் கவுன்டருக்கு வெளில பெரிய எலந்த மரம். யாரும் சைடால டிக்கெட் எடுத்துற முடியாது அந்த எலந்த முள்ளு கொக்கி போட்டு இழுக்கும்.

சண்டன்னா சட்ட கிழியுறது சகஜம். டிக்கெட் எடுக்குறதும் அப்படித்தான்.

டிக்கெட் கவுன்டருல நாமுந்தி நீ முந்தினு உள்ளே பூந்து டிக்கெட் எடுக்க அசகாயசூரர்கள் நெறயவே இருந்தாங்க. அவங்க சாகசம் எந்த சினிமா கதாநாயகனுக்கும் கொறஞ்சதில்ல. அவனுங்க டிக்கெட் எடுக்குற கத சினிமா கதய விட சுவாரசியமா இருக்கும்.

வலிப்பு வந்தாப்ல கீழ விழுந்து நடிச்சு ஊர்ந்து போய் டிக்கெட்டு எடுத்துட்டு வந்து குடுத்தவய்ங்கள்ளாம் நம்மகிட்ட வந்து சிரிக்க சிரிக்க சொல்றப்ப சிரிப்பாணில வயித்துவலியே வந்துடும்.

டாக்கீசு ஓரமா எங்களுக்கு ஒரு தென்னந்தோப்பு இருந்துச்சு. காசு கொடுத்து படம்பார்க்க முடியாதவங்க, பொழுது போவாதவங்கள்ளாம் அந்தத் தோப்புல கூடி ஓசி படம் பாப்பாங்க..எப்டினா டாக்கீசு சைடு தெர தோப்புக்குள்ளாற நல்லாத் தெரியும்.. அதுக்கு தோதா வந்து படம் பாக்க ஒரு கூட்டம் எப்பவும் இருக்கும். புதுப் படம்னா டாக்கீசு காரங்க மில்லுல கூப்பிட்டு சொல்லுவாங்க, சைடுல படம் பாக்க விடாதீங்கன்னு.

செலசமயம் அவங்க தோப்புக்குள்ள வந்து அந்தக் கூட்டத்த கலஞ்சு போக சொல்வாங்க.. சிரிப்பா இருக்கும்..

பெரும்பாலும் மேட்டினி படம் பகல் ஆட்டம் அமிதப்பச்சன், தர்மேந்திரா படம் ஓடும். அது போக தென்னாட்டு ஜேம்ஸ்பாண்ட் ஜெய்சங்கர் படம்தான். ஏனோ தானோனு ஓட்டுவாங்க.

ஒரு தடவ அடிமைப்பெண் படம் போட்டாங்க கரண்ட் கட்டாயிட்டு. அப்போ ஜெனரேட்டர் வசதியெல்லாம் கெடயாது. கரண்ட் வந்ததும் வாங்க.. இல்லே. அப்படியே தரையில படுத்து தூங்குங்கன்னு சொல்லிட்டாங்க. விடியகால 3 மணிக்கு கரண்டு திரும்ப வந்துச்சு. வீட்டுக்கு திரும்பி போனவங்க அடிச்சு பிடிச்சு எடுத்த டிக்கட்ட திரும்ப காமிச்சு படம் பாத்தாங்க. விட்ட

எடத்துலேந்து எம்.ஜி.யாரு ஜெயலலிதாவ காப்பத்த சிங்கத்தோட சண்டை போட ஆரம்பிச்சாரு.

அம்பது காசு கொடுத்து சேர்ல ஒக்காந்து மூட்டபூச்சி கடியோட படம் பார்க்கிறத விட, இருபத்து அஞ்சு பைசா கொடுத்து தரையில படுத்துக்கிட்டே படம்பாக்குற புடிச்ச கதாநாயக, நாகிய ரொம்ப கிட்டபார்க்குறதுல வராது. ஒசரமான ஆளுங்க நமக்கு முன்னாடி ஒக்காந்துட்டா தெர சரியா தெரியாது. மண்ணை மேடாக்கி வச்சு அது மேல ஒக்காந்து படம் பார்க்கலாம். கைகால விரிச்சு போட்டு தோதா ஒக்காரலாம். ஆனா புதுப்படம்னா அப்படி முடியாது.

படம் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே வார் ரீல் போடுவாங்க. ரொம்ப முன்னாடி வார்ரீல் போட்டதால அதுக்கு பேரு அப்படி. பெரும்பாலும் அரசு சாதனை வெளம்பரமாதான் அது இருக்கும். எடவேளயில ஸ்லைடு போடுவாங்க. டாக்கீசுல எப்பவும் ஒரு ஓவியரு நிரந்தமா இருப்பாரு. அவரு சினிமா போஸ்டர் எழுதுறதுலேர்ந்து, இப்படி ஸ்லைடு எழுதுறது வரைக்கும் அவருக்கு வேலை இருக்கும்.

உள்ளூரு கடைங்க, நிறுவனங்க விளம்பரம் ஸ்லைடு ஷோவா பத்து நிமிசம் காமிப்பாங்க.

ஓவியர பழக்கம் புடிச்சு தேய்ஞ்சு போன ஸ்லைடும், ஆபரேட்டர்கிட்ட மிஞ்சிய படரீலையும் வாங்கிட்டு வந்து வீட்டுல பூதக்கண்ணாடி வச்சு படம் போடுவோம். டிக்கட்டுக்கு டாக்கீசுக்கு பின்னாடி எங்க தோப்ப ஒட்டி ஒரு குப்பத் தொட்டி இருக்கும் அங்க டிக்கட்டோட அடிக்கட்டை கொட்டி வச்சிருப்பாங்க. அதப் போய் அள்ளிக்கிட்டு வந்துடுவோம். அதான் எங்க டாக்கீசு டிக்கெட்டு.

கொஞ்ச லேட்டா போனா அவ்வளவுதான். அந்தக் குப்பத் தொட்டிக்கினே கழுதைங்க சுத்திக்கிட்டு இருக்கும்.

நைட்ஷோ இல்லேனா பகல் காட்சிக்கு தோதா ரசிகர்ங்க கைதட்டுறப்பவோ, பலமா சிரிக்கிறப்பவோ அதுங்களும் சைடுல நின்னு கர்ரார்ர்புரார்னு கத்தி உற்சாகத்துல சேர்ந்துக்கும். செலசமயம் காட்சி ஏறுமாறா அபத்தமா சத்தம் வைக்கும். இதெல்லாம் சேர்ந்துதான் டூரிங் சினிமா.

நாயுங்க குறுக்கும் மறுக்குமா அலையும். படம்பாக்கறவங்க போடுற மிச்சம் மீதிக்காக அப்படி செய்யும். செல கோபக்கார நாயுங்க புள்ளைங்க கையில இருக்குற திண்பண்டங்கள புடுங்கிடும். அதட்டினா சில நாயுங்க வல்லுசா கடிச்சு வெச்சுடும். படம் பார்க்க வாரவங்களோட வீட்டு நாயுங்களும் தெரிஞ்சோ, தெரியாமலோ கிளம்பி வந்துடும். இது கொட்டகையே கதின்னு சுத்திக்கிட்டுத் திரியுற, நாயுங்களுக்கு போட்டியா தெரியும். முக்கியமான சினிமா கட்டம் நடக்குறப்போ அதுங்க சண்டை போட்டு ஆளுங்க மேல சமயத்துல தெரகிட்ட அடிச்சு பெறலுங்க. அப்போ வீட்டுக்காரங்க வந்து அந்த நாய வீட்டுக்குத் தொரத்தினாத்தான் போகுங்க.

சினிமாடாக்கீசுன்னாலே அது கீத்து கொட்டகதான். அந்தக் காலத்துல கண்ணம்மா நடிச்ச கண்ணகி படம் ஓடுற டாக்கீசுங்க தீ புடிச்சு எரியுறதா பொறளிங்க கெழம்பினுச்சு.

1975-76 நெனப்பில அந்த வருசம் தூத்துக்குடில ஒரு கீத்து கொட்டகை(டாக்கீசுதான்) தீ பிடிச்சு படம்பாத்தவங்க நெறய பேரு கருகி செத்தாங்க அதுக்கு அப்பறம் எம்.ஜி.ஆர் ஆட்சில டாக்கீசுக்கு நெருக்கடி ஆகிடுச்சு.

லைசென்சுல ஏகப்பட்ட கெடுபிடி. பகல் காட்சி மொதல்ல ரத்தாகிச்சு. அப்பறம் படிப்படியா கீத்துக் கொட்டகைக்கு மாத்தா ஆஸ்பெஸ்ட்டாஸ் போட சொன்னாங்க. டாக்கீச நடத்துறதே யானைய கட்டி மேய்க்கிறதா இருந்த காலத்துல அது நடக்கிற காரியமா இல்ல...

எத்தனையோ சொல்லலாம். சினிமா பாட்டு போடுறப்பலாம் தவறாம லெட்சுமி டாக்கீசும் மறக்க முயாத பழைய நினைவுகளும் கறுப்பு வெள்ளையா மனசுக்குள்ள ஓடினாலும், அது ஒரு வண்ணமயமான காலங்குறத மறக்க முடியாது.

●

சிறுகதை

# கலையாக் கனவு

அம்ராபாண்டியன்



**காலை**

"என்ன மாமா கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?

"என்னய்யா அவரு கிட்ட கேட்டுகிட்டு இருக்கீங்க.. ஒன்னு ஒன்னு ரெண்டு தான்னு புரிஞ்சிக்க வேண்டியதுதான்"

''அவரே சோகத்துல இருக்காரு"

"என்ன இருந்தாலும் பாப்பா கீழத்தெரு பையனோட ஓடி இருக்கக்கூடாது''

'நம்ம சாதி என்ன... அவனுங்க சாதி என்ன? இதையெல்லாம் இப்படியே விட்டுட்டு இருக்க முடியாது"

''நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம். அதான்... காலையில் சேதி கேட்டதும் அடிச்சு புடிச்சு ஓடி வந்து நிக்கிறோம்..''

''ஊம்னு ஒரு வார்த்தை சொல்லுங்க. எங்கருந்தாலும் ரெண்டு பேரையும் தூக்கிட்டு வந்துடறோம்"

"என்ன நாங்க எல்லாம் ஒன்னா சேர்ந்து ஒரு முடிவோட வந்திருக்கோம். நீங்க ஒரு வார்த்தை பேச மாட்டேங்கிறீங்க"

"மதினி,. நீங்களாச்சும் பேசுங்க. சும்மா அழுது கிட்டு இருந்தா ஒன்னும் ஆகாது''

"கலையரசி மட்டும் போச்சா? இல்ல போறப்ப நகை எதுவும் எடுத்துட்டுப் போச்சா?"

"கல்யாணத்துக்கு சேர்த்து வைச்சிருந்த நகையெல்லாம் பத்திரமா இருக்கா?"

''சரி நீங்க ரெண்டுபேரும் எதுக்கும் கவலப்படாம இருங்க. நாங்க இங்க 10 பேர் இருக்கோம். எங்க இருந்தாலும் சுத்தி அலைஞ்சு நகையோட ரெண்டு பேரையும் கொண்டு வந்து சேர்க்றோம்.''

''என்ன சரிதானே? கம்முனு இருந்தா என்ன அர்த்தம்? செலவுக்கு எதாச்சும் பணத்தைக் கொடுத்து விடுங்க''

''கையில இப்ப எதும் பணம் இல்லையா? நேத்துதானே உழவோட்ட பரமசிவம் அண்ணன் கிட்ட பணம் வாங்கிட்டு வந்திங்க... அதை எடுத்துக் கொண்டு வாங்க.''

''என்னது உழவு ஓட்டணுமா? அதுவா இப்போ முக்கியம்? நம்ம சாதி ஆளுங்க தீயா கொதிக்கிறானுங்க... ஏதாச்சும் பண்ணாதான் அவனுங்க

அசமடங்குவானுங்க. செலவுன்னு பாக்காம கொடுத்து விடுங்க''

''நம்மாளுங்க பூரா காலைல சேதி கேட்டதிலருந்து பச்ச தண்ணி பல்லுல படாம கிடக்கிறானுங்க. எல்லாருக்கும் சரக்கு வாங்கி கொடுத்தா தான் சுறுசுறுப்பா செயல்படுவானுங்க.''

''சரி பரவாயில்லை. இப்போதைக்கு இதை வச்சு பார்த்துகிடறோம். பத்தலனா மறுக்க வாரோம் நீங்க ரெண்டு பேரும் தைரியமா இருங்க. நல்ல செய்தியோட வாரோம்''

**மாலை**

''பாப்பா... நாங்க தான் பயப்படாம கதவைத் திற"

"நம்ம பசங்க எல்லாம் ரோட்டுப் பக்கம் டீக்கடையில் இருக்கானுங்க நாங்க ரெண்டு பேரு மட்டும் இடத்தை விசாரிச்சுகிட்டு வந்து சேர்ந்தோம்"

"எப்படி இடம் தெரிஞ்சுதுனு கேட்கிறியா?

கீழத்தெரு போயி சித்தார்த்தன் சோக்காளி ரமேசைப் புடிச்சோம். அவந்தான் நீங்க இங்க தான் வந்திருப்பீங்கனு சொன்னான்"

''அப்பா அம்மா உன் மேல ரொம்ப கோவமா இருக்காங்க. நம்ம சாதிகாரங்களும்தான். எல்லாத்தையும் நாங்க கவனிச்சுக்கிறோம். என்ன கொஞ்சம் செலவாகும். நீங்க ரெண்டு பேரும் பயப்படாம இருங்க"

''ஊர்ல நடக்காததயா பண்ணிட்டிங்க? போகப்போக எல்லாம் சரியாயிடும்.''

"நாங்க நீங்க இருக்கறத யாருகிட்டயும் சொல்ல மாட்டோம். நீயும் நாங்க வந்ததை சொல்லிறாதே.''

"வரும்போது நகை எதுவும் எடுத்துட்டு வந்தியா? நகைய குடுத்தா காதும் காதும் வச்ச மாதிரி கொண்டு போய் அம்மாகிட்ட சேர்த்துடறேன்"

"என்னது.. நகை எல்லாம் எதுவும் எடுத்து வரலையா?, கட்டுன துணிமணியோட புறப்பட்டு வந்தீங்களா?

"சரி... அத விட்டுத்தள்ளு... இப்ப நம்ம ஆளுங்கல்லாம் காலைலேர்ந்து பச்சை தண்ணீ பல்லுல படாம கிடக்கிறானுங்க... எதாச்சும் கவனிச்சு வுடு"

"கைல 1300 தான் இருக்கா? பரவாயில்ல அத குடு பத்து பேரும் சமாளிச்சுகிடுறோம்''

"நீங்க ரெண்டு பேரும் இப்போதைக்கு அந்தப் பக்கம் வந்துராதீங்க. அப்பா கொல வெறில இருக்காப்ல."

**முன்னிரவு**

''நல்ல பையன் தான். படிச்சிருக்கான். கை நெறய சம்பாதிக்கிறான். ஒரு கெட்ட பழக்கம் இல்லை. அவன கல்யாணம் பண்றதுல எங்களுக்கும் இஷ்டம்தான். ஆனா நம்ம சாதிக்காரங்க ஒத்துக்க மாட்டாங்களேமா"

"நீ சொல்றதும் சரிதான்... இங்க இருந்தா நிம்மதியா வாழ விடமாட்டானுங்க''

''ஊரடங்குனதும் ராவோட ராவா புறப்பட்டுடுங்க. கல்யாணத்த முடிச்சிட்டு டவுனுல நீங்க பார்த்து வச்சிருக்க... வீட்டுல சந்தோஷமா வாழ ஆரம்பிங்க. இங்க நாங்க எல்லாத்தையும் சமாளிச்சுக்குறோம்"

''ஊரக் கூட்டிப் பண்ணுனா தான் கல்யாணமா? இஷ்டப்பட்ட ரெண்டு பேரும் பெத்தவங்களுக்குக் கஷ்டம் தராமல் பண்றதும் கல்யாணம் தான். நாம பார்த்தா செய்வினை கொடுப்பினைனு ஏகப்பட்ட செலவிருக்கு. பத்தாததுக்கு நம்ம சாதி வழக்கப்படி கல்யாணத்தை வேற நாம தான் செய்யணும். கடனை வாங்கி செலவு பண்ணனும். பிற்பாடு அத அடைக்க காலம் பூரா நாக்கு தள்ளி சாகணும்"

''வாழப் போறது அவதானே? அவளும் படிச்சவதானே? அவ என்ன சின்ன புள்ளையா? அவளுக்கு நல்லது கெட்டது தெரியும். நம்ம பொண்ணு கல்யாணத்துக்கு சேர்த்து வச்சிருக்க பத்து பவுனை எடுத்து அது கிட்ட கொடு. கலை... இப்பவே கௌம்புமா... அம்மா, நான் ரெண்டு பேரும் இங்க இருந்தே வாழ்த்தறோம் தவம் இருந்து பெத்த புள்ள. எங்களுக்கு உன் சந்தோசம் தான் முக்கியம்'' ●

கவிதை

# இன்னமும்

இன்னமும் சேவல்கள் கூவித்தான்
பொழுது விடிகிறது.
இன்னமும் வீட்டு வாசலில்
சாணம் தெளிப்பதும் கோலம் போடுதலும் நடக்கிறது.

இன்னமும் சிலர் வேப்பங்குச்சிகளாலேயே
பல் துலக்குகிறார்கள்.
இன்னமும் டீக்கடைகளில் சத்தமாக 'தினத்தந்தி' வாசிப்பதும்
'சிந்துபாத்' தொடர் படிப்பதும் இருக்கிறது.

இன்னமும் எங்காவது ஒரு பெண்
'ராரிக்கோ... ராரி மெத்த... என்
ராமக்கோ... பஞ்சு மெத்த...' என
தாலாட்டுகிறது கேட்கிறது.



இன்னமும் பெண்கள் ஏழாங்காய் ஆடுவதும்
தாயம் ஆடுவதுமாக மதியப்பொழுதைக் கழிக்கிறார்கள்.
இன்னமும் மரத்தடிகளில்
'ஆடுபுலி' ஆட்டம் நடைபெறுகிறது.

இன்னமும் பெண்களிடம் நாணம் மிச்சமிருக்கிறது
ஏதாவது ஒரு காதலும் தொடர்ந்த சச்சரவுகளும்
பஞ்சாயத்துகளும் இருந்து கொண்டிருக்கின்றன.

அகால இருளில் அவலமான ஒப்பாரி கேட்கிறது.
ஏதோ... ரகசியம் கூறுவதுபோல உடுக்கை சத்தம் கேட்கிறது.

இன்னமும் சில வீடுகளில் விற்றுவிட மனசின்றி
நினைவுச் சின்னம்போல பத்தாயம் இருக்கிறது.
நெல்காய வைத்த ஆளோடி இருக்கிறது.

இன்னமும் சில 'சார்'கள் சைக்கிளில்தான்
'பள்ளிக்கொடம்' வருகிறார்கள்.
டீச்சர்கள் குடைபிடித்து வருகிறார்கள் போகிறார்கள்.

இன்னமும் கொடி ஏற்றும் நாள்களில்

ஆரஞ்சுமிட்டாய் தருகிறார்கள்.

'மம்மிடாடி' பள்ளிக்கூட வேன்கள்
பிள்ளைகயைப் பிடித்துச் சென்றாலும்
இன்னமும் கறவைகளும் கன்றுகளும்
'அம்மா' என்றுதான் கத்துகின்றன.

இன்னமும் சில இருக்கின்றன
சில காணாமல் போய்விட்டன.

நகர நாகரீக நெருக்குதல்களையும் மீறி
இன்னமும் சில, கிராமங்களாகவே இருக்கின்றன
சிரமத்துடன் மூச்சுவிட்டுக் கொண்டு.



**ப.பரிதிபாண்டியன்**

---

# கீழடித் தொன்மம் நீயடி!

*எப்போதாவது*
*உன்னை மீண்டும்*
*சந்திக்க நேர்ந்தால்*
*உன்னிடம் திருப்பித்தர*
*நீ அப்போது தந்த*
*ஒத்த ரூபாய்*
*இப்போது செல்லரித்து!*

*பேருந்து பயணமொன்றில்*
*உனக்காக*
*நான் எடுத்த*
*பழசாகிப்போன*
*பயணச் சீட்டொன்று!*

*சுற்றுலா*
*சென்றபோது*
*மற்றவர் அறியாமல்*
*மரத்தின் கீழமர்ந்து*
*நாமெடுத்துக் கொண்ட*
*புகைப்படமொன்று!*



*இறுதியாக*
*உனது திருமணத்தை*
*எனக்கு*
*அறிவித்த*
*திருமண அழைப்பிதழொன்று!*

*செல்லரித்த பணமும்*
*பழசான பயணச்சீட்டும்*
*மங்கலான புகைப்படமும்*
*என் மனமொடித்த*
*திருமண பத்திரிக்கையும்*
*உன்னிடம்*
*திருப்பித் தந்தாலும்...*

*எப்போதும்*
*அவை*
*எனக்குள்*
*கிழடித் தொன்மமாய்!*

**சா.தமிழ்ச்செல்வன்**

கட்டுரை

# காதல் நன்மரம்

## சு. இராமசுப்பிரமணியன்

இன்றும்கூட நம் தமிழ்த் திரைப்படங்களில் பொதுவாக, காதலர்கள் ஒரு மரத்தின் அடியில் நின்று பேசுவதுபோன்ற காட்சிகள் இருக்கும். அவர்கள் ஓடிப்பிடித்து, ஆடிப்பாடி மகிழ்வதும் ஒரு மரத்தைச்சுற்றியே இருக்கும்.

சங்ககாலத் தலைவன், தலைவிக்கும் அப்படி ஓடிப்பிடித்து விளையாடவும், அமர்ந்து கதைகள் பேசவும் மரங்களே துணைசெய்திருக்கின்றன.

நெய்தல் நிலத்தில் புன்னை மரங்கள் காதலர்களுக்குப் புகலிடமாக இருந்திருக்கின்றன. அடர்த்தியான, பசுமையான இலைகளோடு குளிர்ச்சி பொருந்திய நிழல் தரும் மரமாகப் புன்னை இருந்ததும் அதற்கு ஓர் காரணமாக இருக்கக்கூடும்.

அப்படி ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு தலைவனும், தலைவியும் ஒரு புன்னை மரத்து நிழலுக்கு வருகிறார்கள். தலைவன் தலைவியை நெருங்குகிறான். தலைவியோ நாணுகிறாள். நாணம் காரணமாக விலகிச் செல்கிறாள். தலைவன் காரணம் கேட்கிறான்.



‘சிறு வயதில் தோழியருடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு புன்னங்கொட்டையை (விதையை) மணலில் புதைத்து வைத்தேன். பிறகு அதனை நான் மறந்துவிட்டேன். முளைத்துச் செடியாகிய அந்தப் புன்னையை என் அன்னை மறக்கவில்லை. அதற்கு நீரும், பாலும் ஊற்றி வளர்த்தாள். அப்படி வளர்த்த அந்த புன்னையை எனது தங்கை என்றும் சொல்லிவைத்தாள். அது இந்த புன்னை மரம்தான். தங்கையின் முன்பு காதலுனுடன் கூடுதல் கூடுமோ?’ என்று காரணம் சொல்லி, கடற்கரையில் வேறு புன்னை மரங்கள் நிறைய உள்ளன. அவற்றில் ஒன்றை நாடிச் செல்லலாம் என்று தலைவனிடம் உரைக்கிறாள்.

இந்தக் காட்சியை நம் கண்முன் கொண்டுவருவது,

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி” என்று தொடங்கும் 172வது நற்றிணைப்பாடல்..

ஆனாலும், 272வது புறநானூற்றுப் பாடல், ‘நொச்சியை’ காதல் நன்மரம் என்று கூறுகிறது. ஏன் அப்படிக் கூறுகிறது?

**“மணி துணர்ந் தன்ன மாக்குரல் நொச்சி**
**போதுவிரி பன்மர னுள்ளும் சிறந்த**
**காதல் நன்மரம் நீ, நிழற் றிசினே!**
**கடியுடை வியன்நகர்க் காண்வரப் பொலிந்த**
**தொடியுடை மகளிர் அல்குலும் கிடத்தி,**
**காப்புடைப் புரிசை புக்குமாறு அழித்தலின்**
**ஊர்ப்புறம் கொடாஅ நெடுந்தகை**
**பீடுகெழு சென்னிக் கிழமையும் நினதே’**

(புறம் 272: மோசி சாத்தனார்)

நொச்சி பூத்திருப்பதைப் பார்த்ததுண்டா? அத்தனை அழகாக இருக்கும்.

பெரும்பாலும், நொச்சி மரத்தை வேலியில் வைத்து வளர்த்திருப்பார்கள் சாதாரணமாக நாம் பார்ப்பது வெள்நொச்சி. கருநொச்சியும் உண்டு. கருநொச்சியின் அடியில் உள்ள மண்ணும் கருமை நிறத்திற்கு மாறிவிடும் என்று சொல்லப்படுவதுண்டு. நொச்சி இலைகள் மருந்தாகவும் பயன்படக்கூடியவை.

அந்த நொச்சியைத்தான், பன் மரங்களுக்குள்ளும் நன்மரம் என்கிறார். மோசிசாத்தனார் என்னும் புலவர். காதல் நன்மரம் என்றும் சொல்கிறார். அதற்கான காரணம் என்ன?

வேலியில் மணிகள் கோர்த்தது போல அழகாகப் பூத்திருக்கும் நொச்சி, நெருக்கமாக அமைந்து, நிழலும் தந்து, காதலர்கள் கூடி மகிழ்வதற்கான மறைவிடமாக இருந்திருக்கிறது. பருவப்பெண்ணின் இடையாடையாகவும் நொச்சி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மதிலைக்கடக்க முயலும் மாற்றானைத் தடுத்து வெற்றிகொள்ளும் புகழ்மிக்க ஆண்மகனின் (வீரனின்) தலையிலும், வெற்றிச்சின்னமாக அணியப்பட்டிருக்கிறது. ("எயில் காத்தல்' 'நொச்சி' - பழம்பாடல்)

இத்தனை சிறப்புகள் வாய்ந்த நொச்சி மரமே நன்மரம். அதுவும் காதல் (அன்பு) நன்மரம் என்று புலவர் புகழ்ந்துரைக்கிறார்.

நொச்சிபூத்த வேலி ஓரம், நிழலில் காதலர்கள் கூடிக்களித்ததும், வீரம்மிகுந்த ஆண்மகன் நொச்சியைத் தலையில் அணிந்ததும் நமக்கு வியப்பேற்படுத்தவில்லை. ஆனால், பருவப்பெண்டிர் நொச்சி இலையை, தங்களது இடையை மறைக்கும் ஆடையாக அணிந்தனர் என்னும் செய்தி உண்மையில் நமக்கு வியப்பேற்படுத்தவே செய்கிறது. அதற்கு நொச்சி இலையின் மருத்துவக் குணங்கள் காரணமாக இருக்கக்கூடும்.

அந்தக்காலங்களில், குலுக்கைகளில் (குதிர்களில்) நெல்லை சேமித்து வைக்கும்போது, நெல்லுடன் நொச்சி இலைகளையும் போட்டு வைப்பது வழக்கம். நொச்சி இலை, அந்துப்பூச்சி போன்ற சிறிய பூச்சியினங்களை விரட்டியடிக்கும் குணம்கொண்டவை என்பதே அதற்குக் காரணம், மன்னை அரசுக்கல்லூரி மாணவர்கள் ஆண்டுதோறும் 'மரவிழா' நடத்துவதும்கூட சங்ககாலத்தொடர்ச்சிதான் போலும்!

(கட்டுரையாளர் இயற்பியல் பேராசிரியர் பணிநிறைவு)

# கவின் கான்

தூவெண் அருவி
தேங்கமழ் வளி வீசும்
அடர்தரு பைம்பொழில்
உள்நுழை வழிகெட்டு
விழி பிதுங்கும்
ஞாயிறும் திங்களும்
பூம் பெயல் உகுத்த
தீம்பழ படுக்கையில்
துயிலும் மந்தி
செயிர் தீர் குவளை
எற்றிசை மணமொழுக
தள்ளாடும் தும்பி
திருநுதல் வரை கண்டு
இதழ் தடவும் கார் முகில்



சங்கச் சொற்கள் இமை வருட
இடறி எழுகிறேன்
வெறும் கற்களால்
முற்றுபெற்ற இன்றைய கான்

**-கோ. கௌதமன்**

அகழ்தல்

# காய் காய் காய்!

## ஆ. அரிமாப்பாமகன்

"அத்திக்காய் காய் காய்
ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்காய் காயாதே
என்னைப்போல் பெண்ணல்லவோ? - நீ
என்னைப்போல் பெண்ணல்லவோ?
*(கண்ணதாசன், பலே பாண்டியா)*

*****

*கண்ணதாசன் பாடலுக்குப் பின்புலமாய் அமைந்த தனிப்பாடல்.*

''அத்திக்காய் காய்காய்காய்!
ஆலங்காய் வெண்மதியே!
இத்திக்காய்க் காய்ந்துனக் கென்னபயன்?
சற்றுமென்மேல்
பற்றற்ற வரைக்காய்! பாவைக்காய்க்
கோவைக்காய்!
சொற்றக்காய் தூதுளங் காய்!"

** காய் = சுட்டெரி, காய்ச்சி எடு*

*அ(த்) + திக்காய் = அந்தத் திசையில்; ஆலம் = நஞ்சு: பற்று அற்றவரை; பாவை;*

கோவை = *அரசனை; சொல் + தக்காய்; தூது + உளம்.*

''பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே!
கள்வனோ என்கணவன்?
கள்வனோ, அல்லன்.
கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணுமிவ் வூரென்றது
ஒருகுரல்!"

*(சிலப்பதிகாரம், துன்பமாலை: 50–53).*

*உரை: 'சுடுகின்ற கதிரையுடைய செல்வனாகிய ஞாயிறே! பாய்கின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த இந் நிலவுலகத்தின்கண் தோன்றுகின்ற பொருள்கள் அனைத்தையும் நீ கண்கூடாகக் கண்டறிவாய் அல்லையோ? நீயே இதனையும் காண்பாயாக!*

*என்னுடைய கணவன் இப் பாண்டிய மன்னன் அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்த கள்வனோ?' என வானத்தை நோக்கிக் கண்ணகி வினவினளாக, அப்பொழுது, 'கரிய கயல் போலும் கண்ணையுடைய நங்காய்! நின் கணவன் கள்வன் அல்லன் காண்! நின் கணவனைக் கள்வன் என்று கூறிய இந்த மதுரையை ஒளியுடைய நெருப்பு உண்ணாநிற்கும்!' என்று வானத்தினின்றும் ஒரு குரல் எழா நின்றது!*

"காய் சினத்த கதிர்ச் செல்வன்
தேர் பூண்ட மாஅப் போல"
*(பட்டினப்பாலை: 122–123).*

வெம் - வெம்மை - வெய் - வெயில் வெய்யோன் = *கதிரவன் :*

''என்றனன் வெய்யோன்; இலங்கு ஈர்
வளைத் தோளி
நின்றிலள் நின்ற சிலம்பு ஒன்று கை ஏந்தி:
'முறை இல் அரசன் தன் ஊர் இருந்து
வாழும்
நிறை உடைப் பத்தினிப் பெண்டிர்காள்!
ஈது ஒன்று:''
*(சிலப்பதிகாரம், ஊர்சூழ்வரி : 1–4).*

''வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி
சோதியின் மறைய
பொய்யோ எனும் இடையாளோடும்
இளையானோடும் போனான்
மையோ, மரகதமோ, மறிகடலோ,
மழைமுகிலோ!
ஐயோ இவன் வடிவென்பது ஓர் அழியா
அழகுடையான்"
*(கம்பராமாயணம், கங்கைப்படலம்–1)*

"வானம் மூழ்கிய வயங்கு ஒளிநெடும் சுடர்
கதிர் காய்ந்து எழுந்து அகம் கனலி
ஞாயிற்று
வைகுறு வனப்பின் தோன்றும்
கைதை அம் கானல் துறைவன் மாவே!"
*(நற்றிணை 163:9-12)*

''வெயில் காய் அமையத்து இமைக்கும்
அத்தத்து
அதர் உழந்து அசையின கொல்லோ
ததர் வாய்"
*(மேலது, 279:8-9)*

*சூரியன் காய்கிறது என்பர்.*
*நிலவும் காய்கிறது என்பர்.*
*'நிலா காயுது நேரம் நல்ல நேரம்*
*(திரைப்படப் பாடல்)*

*காய்தல் பெரும்பான்மையும் கதிரவன் வெப்பம் உமிழ்வதையும், அதிகச் சூடாவதையுமே குறிக்கும்.*

*'எள் தான் எண்ணெய்க்குக் காய்கிறது; எலிப் பிழுக்கை எதற்குக் காய்கிறது?'' என்பர்.*

*காயவைத்தல் = உலர்த்துதல், உணர்த்துதல்.*

*'ஒடம்பு ஒ(உ)ணந்து போச்சு' என்பது மக்கள் வழக்கு.*

*நெல் காயவைத்தல், துணி காய வைத்தல் - சூரிய வெப்பத்தில் உலர்த்துவது.*

*பால் காய்ச்சுதல் அடுப்பு வெப்பத்தில் காய்ச்சுவது, சுடவைப்பது, சுண்டக் காய்ச்சுவது. புளிக் காய்ச்சல்.*

*'உலை காய்ந்துவிட்டதா' = உலைநீர் கொதிக்கிறதா? எனப் பொருள்.*

*உடம்பு காய்கிறது = காய்ச்சல், பழுக்கக் காய்ச்சுதல் = அதிகச் சூடாக்குதல்.*

*'இன்றைக்கு வெயில் நன்றாகக் காய்கிறது' என்பர்.*

'காயாத கானகத்தே நின்றுலாவும்
நற்காரிகையே ஏ.ஏஏ..ஏ..ஏ..
மேயாத மான் - புள்ளி
மேவாத மான்!
*(தஞ்சை இராமையாதாசு, கூண்டுக்கிளி).*
*(சீவள்ளி என்றொரு படம்!*

*அதற்கும் முன்பே கொடுமுடி சுந்தராம்பாள் கிட்டப்பா மேடை நாடகம் மூலமாக மிகப் பரவலமான வள்ளி திருமணக் கதை! ஆனால், படமாக வந்த போது உச்சம் தொட்ட காயாத கானகத்தே என்ற பாட்டும் இதில் தான்!*

*நாடகத்துக்குச் சங்கரதாசு சுவாமிகள் எழுதிய தொகையறாவும், இதனுடன் திரைப்படத்துக்காகப் பாபநாசம் சிவன் எழுதிய முடிப்புகளும் சேர்ந்த பாடல் எனப்படுகிறது.*

*நீர்ப் பசையற்ற நிலை,*

*'மண்டை காஞ்சி போச்சு' - வறுமை.*

*'தொண்டை காஞ்சி போச்சு' - வறட்சி*

*'வயிறு காஞ்சவன்' - வறியவன்.*

*'காஞ்ச மாடு கம்புல விழுந்த கதை'*

*'காஞ்சும் கெடுக்குது, பேஞ்சும் கெடுக்குது'*

''பச்ச உருள மஞ்ச
பத்தன்கட கொத்துமஞ்ச,
காஞ்ச உருள மஞ்ச
கன்னான்கட கொத்துமஞ்ச"
*(நாட்டுப்புறப் பாடல்)*

* *'காய்ந்த'-காஞ்ச.*

*கணவனை இழந்த ஒருத்தியின் ஒப்பாரிப் பாடல்:*

'காஞ்சமஞ்ச சட்டியிலே - நான்
கன்னியொரு மூலையிலே!-எனக்கு வாச்ச
கர்ணரும் பாடையிலே!
கர்ணரும் போய் மறைய - நான்
கன்னி இருந்து மங்கணுமே...

நெனைப்பேன் திடுக்கிடுவேன் -
நான் வாந்த சாமி
நெனவு வந்த நேரமெல்லாம்

அசந்து திடுக்கிடுவேன் - ஒங்க
அளகு வந்த நேரமெல்லாம்

மறந்து திடுக்கிடுவேன் - ஒங்க
மச்சம் வந்த நேரமெல்லாம்
அந்தி நெணல் சாஞ்சிட்டா - நான் வாந்த
சாமி
அருகிருக்கத் தேடுறேனே

கோடி நெணல் சாஞ்சிட்டா - உங்களைக் கூடியிருக்கத் தேடுறேனே

சிங்கமுகத் திண்ணையிலே - நான் வாந்த சாமி
நம்ம சேர்ந்திருப்ப தெக்காலம்?
குருதை முகத் திண்ணையிலே - நான் வாந்த சாமி
நம்ம கூடியிருப்ப தெக்காலம்?"

** காஞ்ச = காய்ந்த, வாச்ச = வாய்த்த, வாந்த = வாழ்ந்த, நெணல் = நிழல், அளகு= அழகு, குருதை = குதிரை.*

*'காய்ச்சி எடுக்கிறான் = திட்டித் தீர்க்கிறான்!*

*உல் – உலர் – உள் – உண் – உண்ணம் (உட்ணம்) – உணங்கு – உணங்கல் (கருவாடு)*

''தீத் திறத்தார் பக்கமே சேர்க என்று காய்த்திய
பொன்தொடி ஏவப் புகை அழல் மண்டிற்றே"

*(சிலப்பதிகாரம், வஞ்சினமாலை:55–56),*

**காய்த்துதல் – காய்த்திய = எரியூட்டிய.*

*காய்தல் = எரிந்துவிழுதல் – வெறுத்தல்,*

''காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றாதது ஆகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்."

*(அறநெறிச்சாரம் 42).*

*கால், காலுதல் = வெளிப்படல்.*

*ல › ய*

*கால் – காய், காய் = பூவிலிருந்து வெளிப்படல், காய்த்தல்!*

*காய் = கதிர் வெளிப்படல், காய்தல்!*

''அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகிப்
பகல் கான்று, எழுதரு பல் கதிர்ப் பருதி
காய் சினம் திருகிய கடுந்திறல் வேனில்"

*(பெரும்பாணாற்றுப்படை: 1–3).*

** கான்று = கதிர்ஒளி வெளிப்பட.*

''பகல் உரு உறழ நிலவு கான்று விசும்பின்
அகல் வாய் மண்டிலம் நின்று விரியும்மே"

*(அகநானூறு 122: 10-11).*

*கான்று = வானத்தில் பகல் போல் ஒளியை விரித்துக்கொண்டு நிலா காயும்.*

''பங்குனி மாதத்தில் ஓரிரவு,
பால் போல் காய்ந்தது வெண்ணிலவு!
தங்கத்தில் மிதந்தது மண்ணழகு! - அங்கு
தனியே தவித்தது பெண்ணழகு!"

*(வாலி, தாழம்பூ)*

*• காய்தல் = ஒளி விரித்தல்.*

*ல › ர*

*குடல்–குடர்*

*சீலை–சீரை*

'சீரை சுற்றித் திருமகள் பின் செல'

*(கம்பராமாயணம் 1835:1).*

*சல்–சர், விரைவுக் குறிப்பு.*

*சுல் – சுள் – சுர் – சுறுசுறு, சுவைக்குறிப்பு,*

*ய › ற › ர*

*(அம்பு) எய் – எறி = வீசு.*

*ஈ(யகர ஒலியில் இறுதல்) –*

*ஈர் = இரண்டாக்கு.*

*நீ(ய்) – நீர் = நீயிர் – நீவிர் – நீரு › மீரு, (தெலுங்கு)*

*வாய் – வாய்தல் – வாய்த்தல் › வார் – வார்தல் (ஒழுகுதல்) – வார்த்தல் (நீர்மப் பொருளை ஊற்றுதல்)*

*எண்ணெய் வார்த்தல், பால் வார்த்தல், கூழ் வார்த்தல்...*

''நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரை
யோநீ மடக்கொடி யோய்என''

*(சிலப்பதிகாரம், வழக்குரை காதை: 48– 49).*

''அவதி இல்லாச் சுவைக்கூழ் - பனவப்
பேய்க்கு வாரீரோ''

*(கலிங்கத்துப்பரணி 565).*

வாயினின்றும் வார்வது – வருவது – வார்க்கப்படுவது வார்த்தை. பேசத் தொடங்கும் குழந்தை சொள்ளொழுகும் – சொல் ஒழுகும் – சொல் வார்ந்து வார்த்தை ஆகும்.

வாயினின்றும் வாய்க்க வருவது வா(ய்)க்கு – வாக்கு. வாக்கு + இயம் = வாக்கியம்,

கால் – காய் (வெப்பம் /உறைப்பு) – கார் – காருதல் – கார்ப்பு – காரம்.

கதிரவன் போலச் சுள்ளெனல் காரம்!

சுள்ளி – சுள்ளிக்காய் – மிளகாய்

சுள் – சுர் – சுருக்கு – சுருக்கெனக் குத்துதல்–சுள்ளான்.

சுருக்கெனக் குத்தப் பயன்படும் கருவி (சுருக்கி) சுளுக்கி = முனையில்

முட்களோடு கூடிய ஈட்டி / வேல் கம்பு. இதைச் 'சுளிக்கு' எனவும் சொல்வர்.

தஞ்சை மாவட்டத்தில் அக்கம்பக்கத்து அடிதடியில், இசகுபிசகாகச் சிக்கிக்கொண்டவரைச் சுளுக்கியால் குத்திவிடுவர். உருவும் போது சதையைப் பிய்த்துக்கொண்டுதான் வரும்.

இச் சுளுக்கி முயல், காட்டுப்பூனை வேட்டைக்குப் பயன்படுத்தப்படுவது உண்டு.

''புலி குத்தின சூரி என்று கையில் எடுத்தாலும் போதும்; பூனை குத்தின சுளுக்கி என்று கையில் எடுத்தால் பெருமையா?"

க›ப என்பது தமிழில் இயல்பான திரிபு.

வாணிகம் › வாணிபம்.

கசிதல் › பொசிதல்.

காம்பு பாம்பு = மூங்கில்.

சக்கரம் › சப்பரம்.

இருக்க › இருப்ப

(s)corch > parch.

காய் – காய்தல் › hot!

காய் › கார் › (scorch - bum, make diy!
காய் › (s)corch › parch - dry!

scorch, parch, hot இம் மூன்று சொற்களுக்கும் மூலம் தெரியவில்லை எனப்படுகிறது.

scorch (v.)

"to burn superficially or slightly, but so as to change the color or injure the texture," early 14, perhaps an alteration of scorrenenn "make dry, parch" (c. 1200), itself a word of obscure origin, perhaps from Old Norse skorpna "to be shriveled," which is cognate with Old English scrimman "to shrink, dry up." Or perhaps from Old French escorchier "to strip off the skin," from Vulgar Latin excorticare "to flay." from ex- (see ex-) + Latin cortex (genitive corticis) "cork;" but OED finds this not likely

parch (v.)

late 14c., "to roast or dry" (peas, beans, corn, etc.), a word of uncertain origin. Klein and OED reject derivations from Old North French perchier (Old French percer) "to pierce" and Latin persiccare "to dry thoroughly." Century Dictionary, The Middle English Compendium, and Barnhart suggest it could be from Middle English perchen, a variant of perishen "to perish" (see perish). Klein "tentatively" suggests a back-formation from parchment. A surname Parchecorn is attested from mid-14c. Meaning "to dry with excessive heat, expose to the strong action of fire but without burning" is from mid-15c

hot (adj.)

Old English hat "hot, flaming, opposite of cold," used of the sun or air, of fire, of objects made hot; also "fervent, fierce, intense, excited," from Proto-Germanic *haita-(source also of Old Saxon and Old Frisian het, Old Norse heitr, Middle Dutch and Dutch heet, German heiß "hot," Gothic heito "heat of a fever"), of uncertain origin, perhaps related to Lithuanian kaisti "to grow hot;" both could be from a substratum word. ●

# கலைபாரதியின் கண்டது மொழிதலும் நானும்...

## முனைவர் கு.கோபாலகிருஷ்ணன்

அண்ணன் கலைபாரதி அவர்கள் எழுத்து வேட்கை கொண்டவர். பெரியாரிய பற்றுகொண்டவர். கம்யூனிச சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டவர். அம்பேத்கர் காண்பித்த வழியில் தன் பயணத்தைத் தொடர்பவர். கலைபாரதியாகவே மட்டும் எனக்கு அறிமுகமானவர். மண்ணின் பாவலர் கலைபாரதி. இயற்பெயர் என்னவென்று ஒருபோதும் கேட்கத் தோன்றா மயக்கத்தில் மூழ்கடித்த விடுதலைக் குயில்களின் கூட்டத்தில் குயில்களோடு குயில்களாய் பயணிக்கையில் இவர் அறிமுகம்.

கீழ்வெணிமணிக்கு நினைவு அஞ்சலி செலுத்தப்போகும் இன்னும் நெருக்கமான பாசக்குயில் அது. சமூகக்காதலன். கண்டதையெல்லாம் சிலாகித்துப் பேசும் இளகிய குணம் படைத்தவர். கண்டதையெல்லாம் பேசுவோருக்கு இடையில் கண்டதை எல்லாம் மொழிந்து ஆவணப்படுத்தி இருக்கிறார்.

நான் முகநூலில் கண்டது மொழிதல் நூலை அண்ணன் பரிசளிப்பது போல் ஒளிப்படம் பார்த்தேன். ஆனாலும் 'கண்டது மொழிதல்' என்னும் சொல் என்னை ஏதேதோ செய்தது. இவர் எதை முன்மொழிந்து இருப்பார் என அறிந்துகொள்ள ஆவல். பின்னாளில் அம்பேத்கரின் 130ஆவது பிறந்த நாளில் அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு வரலாம் என்று ஓர் அழைப்பு வந்தது. எதிர்முனையில் அண்ணன் கலைபாரதி. இல்லத்திற்கு வரச்சொன்னார்.

எனது கையில் கண்டது மொழிதல் நூலைக் கொடுத்தார். வாங்கிப் பார்த்தேன். தூக்கணாங்குருவிக் கூட்டை ஒரு குருவி கட்டி முடித்த திருப்தியில் வானில் எத்தனிக்கத் தயாராவதுபோல், அது ஓர் அழகியல் நிறைந்த குறியீடாய்த் தோன்றியது எனக்கு. கண்டிப்பாய் ஏதோ கண்டது மொழிதலில் கட்டி முடித்திருக்கிறார் என்று நினைத்தேன். அண்ணலுக்கு மாலை அணிவித்து விட்டு, வீட்டுக்குச் சென்று, அன்றே இதை ரசித்து படித்துவிட்டு, நான் உறங்கச் செல்லும்போது மணி அதிகாலை 2.15. அண்ணன் கலைபாரதி என்னை உறங்கவிடவில்லை,

அவரது எழுத்து என்னை ஏதோ செய்து கொண்டிருந்தது. மண் தொடங்கி எல்லாவற்றையும் எழுத்தாக்கியிருக்கிறார். ஒவ்வொரு தலைப்பும் ஏதோ ஓர் அற்புதக் கவிதையாய் நிற்கிறது. மண்ணின் பாவலர் கலைபாரதி சிலபொழுதுகளில் கண்ணில் படுகிறார்.

'மண்ணாகிப் போகும் மண்' இப்படி ஒரு தலைப்பை கலைபாரதி அவர்களால் மட்டுமே இட முடியும். ஏனெனில் அவர் ஒரு விவசாயி. விவசாயக் காதலன். ஆகையால்தான் கந்தசாமி அண்ணன் போஸ் கலப்பையால் உழவு செய்தால் சும்மா 'அல்வா துண்டாட்டம்' சேறு மணந்து குழைந்து கிடக்கும், என்று சேற்றை இரசிக்கிறார்.

நான் எத்தனையோ முறை நினைத்ததுண்டு. வயல்வெளி பாடல்கள்; விடுகதைகள்; மண்வெட்டியைச் சுற்றி நடவு செய்து முறைமாமனிடம் புடவை கேட்பது; இரட்டை வெற்றிலை மடித்துக் கொடுத்து புடவை கேட்பது என்றெல்லாம் கேலியும் கிண்டலுமாக விளையாடிக் கொண்டு வாழ்ந்த காலத்தை அசைபோட வாய்ப்பளித்தது இந்தக் கட்டுரை. விவசாயத்தை மூச்சாகக் கொண்ட பொழுதுகள் எல்லாம்

நவீனகால எந்திரங்களால் தொலைந்து போய்விட்டது என்று நினைப்பதுண்டு. அதனையெல்லாம் நினைவுகூர்ந்து அசை போட்டு இருக்கிறார்.

அப்படி நடவு வேலை செய்தவர்கள் நிலை குறித்தும் பதிவு செய்கிறார். வயல் வேலை செய்தவர்கள் இன்று வயலிலிருந்து வெளியேற்றப்பட்டு கட்டிட வேலைத் தளங்களில் சிலேடைப் பேச்சுகளால் கூனிக்குறுகி நிற்கின்றனர், என்று நடவு செய்தவர்களில் ஒருவராய்க் கூடு பாய்ந்து நிற்கிறார்.

ஆடு மாடுகளைப் போன்று வெளியூர்களுக்கு வேலைக்கு கொண்டு செல்வதாய்ப் பதிவு செய்திருக்கிறார். சொந்த மண்ணில் ஓர் அகதி வாழ்வு வாழ்கிறார்கள் என்று அழகாய்ப் படம்பிடித்துக் காட்டுகிறார். இந்தப் பதிவு என்னை வலிகொள்ளச் செய்தது.

'காந்தி' என்ற தலைப்பில் காந்தியைப் புதிய பரிமாணத்தில் மிக நெருக்கமான தோழனாக்கிச் செல்கிறார். 16 காமராசர் நகர் என்ற பதிவில் ''மலரு... பாரதி வந்திருக்கிறான்...'' என்று இராசேந்திரன் ஐயா மனைவியிடம் சொல்லும் வரிகள் பாசத்தின் பரிதவிப்பை சொல்கிறது.

மகனுக்கு திலீபன் என்று பெயர் வைத்தற்கான விளக்கம் நெகிழச் செய்தது. மாண்பமை மனிதரை இறப்பிற்குப் பின்னும் நினைவுகளால் தேடி வாழ வைத்திருக்கிறார்.

எங்கள் கண்முன் தொலைந்துபோன இளமைக் காலத்தைக் கண்முன் நினைத்துப் பார்க்கத் தோன்றியது இந்தக் கட்டுரை. கண்ணாமூச்சி, ஓடிப்பிடிச்சி, ஒளிஞ்சி பிடிச்சு விளையாண்டு, பிள்ளைகளோடு பிள்ளைகளாய் ஆணும் பெண்ணுமாய் ஆடிவந்த பொழுதுகள் எல்லாம் அசைபோட முடிந்தது. இதில் படைப்பாளர் எங்களுக்கான காலமும், களமும் இப்போதைய பிள்ளைகளுக்கு வாய்க்கவில்லை. அவர்கள் அலைபேசியோடும், தொலைக்காட்சி அலைவரிசையோடும் மாற்றி மாற்றி ஆட்டம் காண்பிக்கின்றனர் என்று அவர்களது இன்றைய நிலைப்பாட்டை முன்வைக்கிறார்.

மரப்பாச்சியோடு விளையாண்ட காலமெல்லாம் டெடிபியர்கள் மறைத்து போட்டுவிட்டது. ஆற்றில் மரம் ஏறி குதித்து விளையாடும் விளையாட்டு சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுப் பாடலோடு ஒப்பிட்டுப் பார்ப்பது அருமை. இவரின் சங்க இலக்கிய நுகர்ச்சி தெரிகிறது.

''காணாமல்போன பூனைக்குட்டியும் கண்டடைந்த ஜெயக்குமாரும்'' என்ற பதிவில் வள்ளலாரின் வாரிசாய் ஜெயக்குமார் அவர்களை காட்சிப்படுத்துகிறார். பூனையறைச் செய்தி புதுமையாக இருக்கிறது. ஒரு காட்டை அழித்து பூனை கிடைத்தாயிற்று. இறுதியில் பூனைக்குடடி கிடைத்துவிட்டால் காளவாய்க்கரை முருகன் கோயிலில் மாலை கட்டி போடுவதாய் வேண்டிக் கொண்டது மெய்சிலிர்க்கச் செய்தது.

அவரது, ''அப்பா இல்லாத தீபாவளி'' என் நெஞ்சை நெகிழச் செய்தது. இருட்டிற்கான உவமை அருமை. இருட்டு ஒரு மரவட்டை போல சுருண்டு இருக்கும் என்கிறார். அப்பாவின் நினைவுகளை




நூலின் பெயர் : கண்டது மொழிதல்
ஆசிரியர் : கலைபாரதி
பக்கங்கள் : 96 வகை : கட்டுரை
வெளியீடு : தமிழாதன்
நிகழ் பதிப்பகம், கடைத்தெரு
இந்தியன் வங்கி அருகில்
நீடாமங்கலம்-614404,
திருவாரூர் மாவட்டம்
பேசி-9786102329
விலை : ரூ.130

தழும்பச் செய்கிறார். வானொலி விழாக்காலங்களில் இருக்கும் நிலையைத் தருகிறார். எல்லா வீட்டு ரேடியோவிலும் ஒரே பாட்டுதான். பட்டாசைச் சுட்டுச்சுட்டுப் போடட்டுமா?...

'சின்னப்பயலே எழுந்திருடா' என்று எழுப்பி விட அப்பா இல்லை என்ற வரிகள் சங்காலப் பாரி மகளிரின் நிலையைப்போல நெஞ்சில் தைத்தது.

ஆறு உடைத்து நான் பார்த்ததில்லை. 'தொடரும் தோழமை'யில் ஆறு உடைப்பெடுத்து வெள்ளம் வர நான் நீந்தித் தப்பித்து வந்தேன் என்கிறார். அதிலேயே மின்சாரமற்ற இருள் குடித்த ஊர்'' என்ற வரி அருமை. வெள்ளத்தால் பாதித்தவர்களுக்கு சோறு சமைத்து போட்டிருக்கிறார்கள். அது ''கையேந்தி நின்ற வாழ்வு'' என்கிறார். நீ வரிசையில் நின்று சோறு வாங்கி விட்டாயா? என்று கேட்டது பொறுக்கமாட்டாமல் 'வாங்கிட்டேன்' என்று தன்மானத்தோடு பொய் சொல்வதாய்ச் சொல்கிறார். "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து'', என வள்ளுவர் கூற்றை நியாயப்படுத்துகிறார்.

இந்த நேரத்தில் தானாக முன்வந்து அரிசியும் அம்மாவுக்கு வெற்றிலைச் சீவலையும் தந்ததாக உள்ளம் நெகிழ இவர் நினைவு கூறுகிற ஆசிரியர் தமிழ்ச்செல்வன் இவர் நெஞ்சில் நீங்கா இடம்பெறுகிறார்.

''அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்துவிட்டுப் போகட்டும்'' என்ற கட்டுரையில் தீண்டாமை சுவர் இடிந்து விழுந்து அழிந்த குடும்பத்தில் இறந்துபோன இதயங்களில் ஒன்றாய்க் குமுறுகிறார். தீண்டாமைச்சுவர் என்கிற சொல்லுக்குப் பதிலாக 'காணாமை சுவர்' என்று பதிவு செய்திருப்பது கவிஞரின் தமிழ் தாகம் புலப்படுகிறது. இதில் ''அவர்களைப் பார்க்கவேக்கூடாது என சுவர் எழுப்பியவன் சமூகத்தில் உயர்ந்தவன். மறைந்த பின்னரும் கண் மூலமாக யாரையேனும் நான்கு பேரையாவது பார்க்கட்டும் என்று சிந்தனை கொண்டவர். தாழ்த்தப்பட்டவர் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்துவிட்டுப் போகட்டும்'', என்பது அருமை.

'பிரிதல் என்னும் பெருங்கொடை'யில் ஒரு வாழ்வின் அர்த்தத்தை பிரிவினால் வரும் ஏக்கம் தூக்கம் வரவிடாமல் செய்யும். ஆகவே பிரிவு பெருங்கொடைதான் என ஆசிரியர் ஆணித்தரமாகக் கூறுகிறார். உதிர்தலும் அழகு. சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று பிரமிளுக்கு காவியம் ஆகிப்போகின்றது. சிலரின் மரணம்கூட பொறாமைப்பட வைக்கிறது. தோழர் முத்துக்குமார், தங்கை செங்கொடி, ஆசிரியர் மன்னை இராசேந்திரன், பேரவைத் தோழர்கள் அண்ணன் காமராசு, ஐயா ஏ.ஜி.கஸ்தூரிரங்கன் என நீளும் பட்டியலில் இடம்பெற ஆசை கொள்கிறது மனது என்கிறார்.

இறந்தால் நான் இவர்களைப்போல பெயர்கொள்ள இறக்க வேண்டும் என்ற ஆசையும், பொறாமையும் கொண்டிருந்தேன். அதைக் கவிஞர் நினைவூட்டிருக்கிறார். பாரதியின் பெயரை கலையில் சேர்த்து இருக்கிறார் அல்லவா! பாரதி கூறுவதைப் போல சாதல் இனிது.. சாதல் இனிது.. எனச் சொல்லத் துடிக்கிறார். இறப்பில் பொறாமை கொள்ளும் பெருந்திமிர் இவர் திமிர்!

'அட.. கடுதாசி எழுதுவோமா' கட்டுரையில் தொண்ணூறுகள் வரை கடிதம் எழுதி அனுப்பிக் கொண்டும் அஞ்சல் அட்டைகளில் வாழ்த்துக்கள் சொல்லிக் கொண்டு திரிந்த ஞாபகங்களை அசை போட்டிருக்கிறார். கோமளா அக்காவின் கடிதம் என்னை இளமைக் காலத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டது. ''நிற்க என்றவுடன் நின்றுகொண்டே படிக்காமல் உட்கார்ந்துபடி என்ற அக்காவின் வரிகளை படித்துவிட்டு 'வாய்விட்டு சிரித்த நாட்கள் இனி வாய்க்கப் போவதில்லை'', என்கிறார். எங்களுக்கும்தான். குறிப்பையும் காதல் கடிதங்களையும் எல்லாவற்றையும் ஒப்புவித்து ஒளிவுமறைவு இல்லாத நல்லவராய் காட்டிக்கொண்டு, முடிவில் மாட்டிக் கொண்டதை நினைக்கையில் சராசரி மனிதனின் அடையாளம் தெரிகிறது. அன்புள்ளம்கொண்ட அம்மாவுக்கு பாடலை ரசித்திருக்கிறார், பதிவு செய்திருக்கிறார். கட்டுரையின் முடிவில் அட இனி கடிதாசி எழுதுவோமா கேள்வி கேட்கிறார். இனி

கண்டிப்பாக நாம் கடுதாசி எழுதுவோம். எழுதத் தூண்டுகிறார்.

''ஊருக்குள்ள உன்னையும் பத்தி என்னையும் பத்தி அட என்னமோ சொல்லுறாங்க.. எனக்கு மிகவும் பிடித்த பாடல். இந்தக் கட்டுரையை அதே பாடல் வரிகளில் ஆரம்பித்திருக்கிறார். இந்தப் பாடல் கவிஞருக்கும் பிடித்திருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறார். ஆசிரியர் கவிஞர் அல்லவா? இந்தக் கட்டுரையில் கவிஞராகி எட்டிப் பார்க்கிறார். அந்தப் பழுப்பேறிய நினைவுகள் மனசுக்குள் பசலையாய் அப்பிக் கிடக்கும்'' வரிகள் அருமை. மெல்லிசைப் பாடலாயினும் திரை இசைப்பாடலாயினும் மனம் வருடும் கவிதை வரிகளால் நிறைந்து இருப்பின் ரசிக்கலாம். ரசிக்க வேண்டும் என்பதை எதார்த்த நடையில் சொல்கிறார்.

கள்ளியில் கீறி பெயர் எழுதிப் பார்க்கும் ஆசை தங்கர்பச்சானின் 'அழகி' பட சண்முகத்தைப் போலவே எனக்கும் ஆசை உண்டு, நடந்திருக்கிறது. கலைபாரதிக்குள்ளும் இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.

''உனது பெயர்
எழுதி பக்கத்திலே
எனது பெயரை
நானும் எழுதி வெச்சேன்.
அது மழையில் நனையாமல்
குடை பிடிச்சேன்
மழை விட்டும்
நான் நனைஞ்சேன்...''

கலைபாரதி நல்ல ரசிகன். அடுத்தவர்களுக்காகக் காதல் கடிதம், கவிதை எழுதித் தந்த பெருமை எனக்கும் உள்ளது. ஆனால் நான் ஆசிரியரைப் போல மாட்டிக் கொள்ளவில்லை. கட்டுரை அருமை. நிகழ்வு கண்முன் நிற்கிறது.

பரிதி என்னும் பாட்டுப் பறவை இந்தக் கட்டுரை இன்னொரு நல்ல முகம். பரிதி பாண்டியன் என்னும் பாட்டுப் பறவை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற கவியரங்க மேடையில் நடுவராக எனக்கு அறிமுகம். ஆனாலும் கவிஞர் கலைபாரதி அவரை முற்போக்குவாதியாக அடையாளப்படுத்துகிறார். பேருந்தைத் தவறவிட்ட மாணவனை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் பரிதி, அவரை இரவு தங்குவதற்கு அனுமதிக்கிறார் விடிந்ததும் அவர் அம்மா. ''அந்தப் பையன் என்ன சாதிப்பா...?'' இவர் சொல்கிறார் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர். அம்மா சொல்கிறார்'' ஐய்யயோ முன்னமே சொன்னா என்னடா...?'' என்று பாயை தண்ணீர் தெளித்துச் சுருட்ட, அதைப் பிடுங்கி கிணற்றுக்குள் தூக்கிப்போட்டு இருக்கிறார் பரிதி. ''கிணறும் தீட்டுபட்டு விட்டது. இனி வாழ்நாள் முழுவதும் இந்த கிணற்றுத் தண்ணீரைக் குடிங்க'', என்று சொன்னாராம். இதை அழகாய் பதிவு செய்திருக்கிறார் கலைபாரதி.

பரிதி இறக்கும்பொழுது ஒரு கவிதை எழுதி இருக்கிறார். நினைக்கையில் உண்மையில் உயிர் வலிக்கிறது.

''அலைபேசி
அடித்துக் கொண்டே இருக்கிறது
யாராவது எடுத்து
நேற்றிலிருந்து
நான் இல்லை என்று
சொல்லி விடுங்கள்''

என்று எழுதியிருந்தாராம். இயல்பாய் சொல்லிப் போன பதிவிற்கு உயிர் கொடுத்திருக்கிறார். வாழ்க.!

''மாயவலைக்குள் சிக்கி மூச்சுத் திணறும் ராட்சசி.'' ராட்சசி படத்தை பற்றிய ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார். ஆசிரியரே நல்ல திரைப்பட ரசிகர் என்பதைப் பார்க்க முடிகிறது. தமிழ்மணிக்கும் ஆசிரியருக்குமான மாண்பமை எதேச்சையாக அமைந்திருந்தாலும், நினைவுகொள்ளத்தக்கது. இன்குலாப்பையும் அறிவுமதியையும் உள்வாங்கி திரிந்த நாட்கள் ஆசிரியரின் எழுத்தில் நிழலாடுகிறது.

தோழர் எஸ்.ஜி.எம். இந்த கட்டுரையில் தான் இவரை நான் அடையாளம் கண்டேன். அடையாளப்படுத்தியதற்கு நன்றிகள். தன்னலம் பார்க்காத பொதுநலத் தலைவர். வெகுசன மக்களின் உருவாய் இருந்திருக்கிறார். எஸ்.ஜி.முருகையன் குறித்து எனக்கு ஒரு துளியும் தெரியாது. எவரும் போதிக்கவில்லை. ஆனால் அவரின் போராட்டங்களும் தியாகங்களும்

ஈடு இணையற்றது கலைபாரதி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பொன்னுசாமி வீட்டுத் திருமண நிகழ்வு பெரும் நிகழ்வு. தொண்டர் மீது வைத்த பாசத்தால் திருமணத்திற்குத் தேதியும் சொன்ன எஸ்.ஜி.எம். சொன்ன சொல்லைக் காப்பாற்ற இரவு 7 மணிக்கு வருகிறார். உயர்ந்த மனிதர். இவர் மீதுள்ள நம்பிக்கையில் பொன்னுசாமி எஸ்.ஜி.எம்.மையே மிஞ்சிவிட்டார். இரவு 7 மணி வரை தாலி கட்டாமல் பார்த்துக் கொள்கிறார். இந்தக் கட்டுரைக்குப் பொன்னுசாமி என பெயர் வைத்து இருக்கலாம். பொன்னுசாமியைப் பார்க்க தூண்டுகிறது மனசு.

இலட்சுமணன் என்ற கட்டுரையில் கலைபாரதிக்கும் மாணவருக்குமான உறவு குறித்து எழுதி இருக்கிறார். அவருடைய மாணவர் லட்சுமணனை எழுத்தில் மரியாதை செய்திருக்கிறார். இலட்சுமணனிடம் பாய் சோடி என்ன விலை என்று கேட்க அவர் 300 ரூபாய் என்கிறார். 'ஏய் நான் உனக்கு பாடம் நடத்தின வாத்தியாருடா 200 ரூபாய்க்கு கொடுக்கக்கூடாதா?' எனக் கேட்க, நீங்கள் நாற்காலியில் அமர்ந்துகொண்டு கேட்கிறீர்கள். நான் சைக்கிளை மிதித்து விக்கிறேன் என்று கேட்ட அதே இலட்சுமணன்,

திருமணம் நடந்த பிறகு மனைவி மகேசுவரியுடன் தொலைபேசியில் ஆசிரியருடன் பேசுகின்றனர். பேசும்பொழுது அப்பா.. அப்பா... என்று பேசுகிறார்கள். அது ஆசிரியரை என்னமோ செய்கிறது. வீட்டிற்கு கட்டாயம் அழைக்கிறார்கள். ஆசிரியர் லட்சுமணனுக்கும் மகேசுவரிக்கும் தகப்பனாய் மாறுகிறார். ஆசிரியர் மாணவர் உறவில் தகப்பன்சாமியாய் உயர்ந்து நிற்கிறார்.

கண்டவற்றை மொழிந்திருக்கிறார். ஆனால் அது வரலாறாய் நிற்கிறது. பதிவில் சந்தித்தவர்களை எல்லாம் எழுத்தில் உயிர் கொடுத்திருக்கிறார். கண்டதையும் அழகாய்ச் சொல்கிறார். இன்னும் சொல்ல வாழ்த்துகள். ●


## நூலங்காடி



விலை ரூ.30




விலை ரூ.100

பதிப்பு : த.ரெ.தமிழ்மணி, பாவாணர் பதிப்பகம், வேலங்குடி, கீழப்படுகை( அஞ்சல்), திருவாரூர் வட்டம் 610 109

பேசி 98 420 11 3 44

லயோலா கல்லூரி
மாணவரின்
கவிதைத் தொகுப்பு.




விலை ரூ.80
இ.முகில் வேந்தன்
7200171379

சிறுகதை

# கருவாடு

## த.ரெ.தமிழ்மணி



''ம்மா... வலி தாங்கலம்மா!'' மல்லாந்து படுத்திருந்த அருள், புண்ணில் வீழ்ந்து விடாமல் ஒருக்களித்துப் படுத்தான்; முகத்தில் வேதனைச் சுருக்கம்.

''கொஞ்சம் பொறுத்துக்க ராசா, சாப்பிட்டு மாத்ர போட்டா வலி கொறஞ்சிடும்'' என்றபடி கண்ணீரைத் துடைத்துவிட்டாள் முத்தம்மா.

''படகுலேயே செத்துருக்கலாம் போலிருக்கு. தப்பிச்சா போதும்னு குண்டடிபட்ட காயத்தோட நீஞ்சி வந்தது, அதைவிட கொடுமையா வலிக்குது''

தோள்பட்டையில் போடப்பட்டிருந்த கட்டிலிருந்து இரத்தமும், ஈந்தண்ணியும் ஒரு கோடு மாதிரி கசிந்தது.

''அப்படியெல்லாம் பேசக்கூடாதுய்யா. நீயும் உங்கப்பா மாதிரி என்னவுட்டு போயிட்டா நா உசுரோட இருப்பேன்னு நெனச்சியா?'' பேசிக்கொண்டே, முதுகில் கைவைத்துப் படுத்திருந்தவனை நிமிர்த்தி உட்கார வைத்தாள்.

''நல்லவேளை, பீச்சாங்கையில குண்டடி பட்டுச்சி. இல்லேன்னா எம்புட்டு கஷ்டப்படுவியோ?'' என்றவள், தட்டில் இட்லியை வைத்து மீன்குழம்பை ஊற்றி அவன் மடியோரம் வைத்தாள். அதைப் பிட்டுக் குழம்பில் நனைத்து மெல்ல வாயில் போட்டான். இத்தனை நாளாக மருத்துவமனை வாடையில் அவதிப்பட்டவன், ஒரு வாய் மென்றவுடன் பட்ட காயமெல்லாம் ஆறியதாக உணர்ந்தான். ஆனால் அடுத்த கணமே, உயிர் தப்பிய அந்த மரண நொடிகள் நினைவில் வந்து பீதியை ஏற்படுத்தின.

அன்னக்கூடையில் இருந்த கருவாட்டை சணற்பையில் கொட்டி அதன் வாய்ப்பகுதியை இறுக்கிக் கட்டி முடிச்சுப் போட்டாள்.

''ஏமா... அந்த ஏனத்துலேயே எடுத்திட்டு போவ வேண்டியதுதானே?'' வாயில் குதக்கிக் கொண்டே கேட்டான்.

''திருவாரூரு போறமுட்டும் ஏர்றவங்க இறங்கறவங்கெல்லாம் முகம் சுளிப்பாங்க. சாக்குப் பையில எடுத்துப்போனா, வாசம் கொஞ்சம் கொறையுமுல்ல''

சொல்லிக்கொண்டே வெந்நீரில் துண்டை நனைத்து முகத்தைத் துடைத்து விட்டாள்.

''ஒண்ணுக்குகின்னுக்கு போறனும்னா நீ பாட்டுக்கு எட்டி போயிராத. வீட்டோரமா போப்பா. உங்கூட ஒத்தாசையா இருக்கணும்னு நெனப்பு. ரெண்டு வாரமா சந்தக்கி போகல; கருவாட்ட காய வக்கயும் முடியல, வீணா போயிடும்ல''

சோற்றுப்பானையையும் குழம்பு சட்டியையும் அவனருகில் வைத்துத் தட்டை போட்டு மூடினாள், அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்தவனின் வாயை முந்தானையால்

துடைத்துவிட்டு சாப்பிட்ட ஏனங்களைப் பங்கிடு பண்ணினாள். மாத்திரைகளை அவன் வாயில் போட்டு தண்ணீரை ஊற்றி மடமடக்கென்று விழுங்கச் செய்தாள்.

கட்டை மேல் இருந்த மருந்தை எடுத்துப் பிதுக்கி, அவனுடம்பில் ஏற்பட்ட சிராய்ப்புகளில் தடவியவாறே சொன்னாள்.

''நான் கிளம்புறன்ய்யா... புண்ணு ஆறறவரக்கிம் கொஞ்சம் வெளிநடமாட்டத்த கொறச்சுக்கய்யா''

பாதையில் கிடந்த பழைய வலைகளை ஒண்ட ஒதுங்க வைத்தாள். நரைத்த கூந்தலை அள்ளி முடித்து கருவாட்டு மூட்டையைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாள்.

''நீ கௌம்பிட்ட. நான் கடலுக்குப் போக போட்டு இல்லையேம்மா...'' கண்கள் மோட்டுவளையை வெறித்திருக்க வெறுப்பாய்ப் பேசினான்.

''அதுக்கென்ன ராசா... ஆண்டவன் கொடுத்த கைகாலு இருக்கு.. பொறவு சம்பாதிச்சு வாங்கிக்கலாம்.. அள்ளிக் கொடுக்க நமக்கு கடலம்மா இருக்கா. நீ ஏன் கவலைப்படுற? நீ உயிரோட வந்ததே எனக்கு போதும். கலங்காதய்யா... தேற்றிவிட்டு மறுபடியும் புறப்பட்டாள்.

நாகப்பட்டினம்.

கூட்டமில்லாத பேருந்து ஒன்றில் ஏறி, பின்இருக்கை அடியில் கருவாட்டு மூட்டையைத் திணித்தாள். உள்ளே தள்விவிட்டதில் மூட்டையின் வாய்க்கட்டு அவிழ்ந்து கருவாடு எட்டிப் பார்த்தது. முன் இருக்கைகளில் அமர்ந்தவர்கள் முகச்சுளிப்போடு திரும்பிப் பார்த்தனர். வண்டி நகரவும் நடத்துநர் முன் படிக்கட்டில் தொற்றினார். காந்தத்தில் இரும்புத்துகள்கள் ஒட்டுவதுபோல சடசடவென்று ஏறினர். பின்வழியே ஏறியவர்கள், முத்தம்மாவையும், கால்களுக்குக் கீழே இருந்த மூட்டையையும் பார்த்துவிட்டு, உட்காராமல் முன்பக்கம் சென்று கம்பியைப் பிடித்தபடி நின்றார்கள்.

''டிக்கெட்... டிக்கெட்...''

பணத்தை வாங்குவதும், விரலிடுக்கில் இருந்த சீட்டோடு சில்லறை கொடுப்பதுமான வேலையில் மெதுவாகப் பின்னோக்கி வந்து கொண்டிருந்தார் நடத்துநர். வேகம் எடுத்த பேருந்து அந்தணப்பேட்டையைக் கடந்து கொண்டிருந்தது.

திடீரென எழுந்த நடத்துநரின் குரலில், பேருந்து குலுங்கி நின்றது. கருவாட்டு மூட்டையை உருவி படிகளில் உருட்டி விட்டார். சாலையோரம் விழுந்த அதிலிருந்து கருவாடுகள் சிதறின.

''மருவாத கெட்டுப் போயிடும் பாத்துக்க. எதுக்குடா ரோட்டுல வீசுன? பஸ்ச எப்படி எடுக்கறன்னு பார்க்குறேன்''

பொங்கினாள் முத்தம்மா.

''யாரக் கேட்டுக்கிட்டு கருவாட்ட ஏத்துன? நாத்தம் கொடல புடுங்குது. முதல்ல கீழே எறங்கு!''

''யார கேட்டு ஏத்தனும்? பஸ்சு என்னா கொப்பன் வூட்டு சொத்தா? கொடல புடுங்குதாமே.. நாக்கு தொங்க போட்டுத் திங்கிறப்ப புடுங்கலயா'' திட்டிக் கொண்டிருக்கும்போதே முத்தம்மாவின் கையைப் பிடியை விலக்கி தள்ளிவிட்டான். படிக்கட்டில் நொடித்து, கீழே வீசப்பட்ட மூட்டை மேல் விழுந்தாள். தள்ளி விட்ட குற்ற உணர்ச்சியோ விழுந்தவள் மீது பரிவோ இல்லாமல்

''கேக்காம ஏத்துனதுமில்லாம திமிர் பேச்ச பாரு... ரை...ரை...''

விருட்டென்று அந்த இடத்தைக் கடந்தது பேருந்து.

''படுபாவி... நீ நல்லா இருப்பியாடா? ஒன்ன மாதிரி சனங்களோட வயித்துப் பாட்டுக்குத்தானே கருவாடு எடுத்துட்டு போறேன். அங்கன மீன்புடிக்க கூடாதுன்னு சுடுறானுவோ, இங்கன கருவாடு விக்கப்போனா பாடாப்படுத்துறானுவோ'' கத்திக்கொண்டே தடுமாறி எழுந்தாள்.

''யாருடா நாத்தம்? வேசம் போடுற நீங்கதாண்டா நாத்தம்... த்தூ'' எனப் பேருந்து போன திசை நோக்கி காறித்துப்பினாள். சிதறிக் கிடந்த கருவாடுகளைப் பொறுக்கி மூட்டையில் போட்டுக் கட்டி தலையில் தூக்கி வைத்துக்கொண்டு விடுவிடென்று நடந்தாள்.

●

# கிரிக்கெட்டும் அப்பாவும்

## பாலகுமரன் பரிதி



நான் சிறுவனாக இருந்தபோது மன்னார்குடி பிருந்தாவன் நகரில் குடியிருந்தோம். அங்கு இருக்கும் இளைஞர்களுடன் அப்பா கிரிக்கெட் விளையாடுவார். அப்பாவுக்கு கிரிக்கெட் பிடிக்கும்.

எனக்கு இன்னமும் ஞாபகம் இருக்கிறது. நான்கடி ஓடிவந்து லாவகமாக பந்தை வீசுவார். அப்பா விக்கெட்டை வீழ்த்தா விட்டாலும் இலக்கு நோக்கி சரியாக செல்லும் பந்து.

கிரிக்கெட் பற்றி நிறைய விஷயங்களை அப்பாதான் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அப்பாவும் நானும் கிரிக்கெட் பைத்தியம் என்று கூட சொல்லலாம்.

அப்போதெல்லாம் எங்கள் வீட்டில் டிவி கிடையாது. அப்பா எங்கேயோ பர்னிச்சர் கடையில் சீட்டு கட்டினார். குலுக்கல் முறையில் ஒரு போர்ட்டபிள் டிவி கிடைத்தது.

நீங்கள் பார்த்திருப்பீர்கள், அந்தமாதிரியான டிவிக்கு ரிமோட் கிடையாது. வேறு சேனல் மாற்றுவதற்கு டிவியில் டீயுனர் இருக்கும் அதை திருக வேண்டும். அடிக்கடி உடைந்து போகும் காசு கொடுத்து வாங்க வேண்டும். அப்பா அதற்கு மாற்று கண்டுபிடித்தார். திருகுவதற்கு கொறடு ஒன்றை பயன்படுத்த ஆரம்பித்தார். கொறடுதான் எங்களது ரிமோட்,

டிவி இருந்தால் மட்டும் போதுமா கேபிள் கனெக்சன் கொடுக்கணும் அது எதுக்கு செலவு என சித்தப்பாவிடம் இந்த பழைய ஆண்டனாவை எடுத்துவந்து ஏதேதோ ஒயர்களை முறுக்கி வீட்டின் மொட்டை மாடியில் ஆண்டனாவை நிறுத்திவிட்டார். புள்ளி புள்ளியாகத் தான் தெரியும். தூர்தர்சன் ஏதேனும் மொழியில் ஏதோ ஓடும் என்னவென்று தெரியாமலே வாய்பிளந்து பார்த்து உட்கார்ந்து இருப்பேன்.

ஒருநாள் ஏதோ ஒரு கிரிக்கெட் போட்டி மறு ஒளிபரப்பு செய்யப்பட்டது. அப்பா என்னை அருகில் அழைத்து உட்கார வைத்து ஒவ்வொன்றாகச் சொல்ல ஆரம்பித்தார். இப்படி சென்றால் நான்கு ரன், இப்படி சென்றால் ஆறு ரன், இது நோபால், இது வைய்ட் என கிரிக்கெட் பற்றி அவருக்குத் தெரிந்த அனைத்தையும் எனக்கு சொல்லிக் கொடுத்தார்.

அப்பாவிற்கு அரசு ஊழியர் குடியிருப்பில் வீடு கிடைத்தது. அங்கு குடி வந்த பிறகு கேபிள் கிடைச்சாலும் கிடைச்சது நிறைய கிரிக்கெட் பார்க்க ஆரம்பித்தேன்.

நான் அப்போது அர்பன் பாங்கு பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். இந்தியா விளையாடும் கிரிக்கெட் போட்டி இருந்தால் இந்திய நேரப்படி மதியம் 2 மணிக்கு போட்டி தொடங்கும். அப்பா அவரது பள்ளியில் விடுப்பு சொல்லிவிட்டு நேராக எனது பள்ளிக்கு வந்து தலைமையாசிரியரிடம் “பையன ஊருக்கு அனுப்பணும் அழைச்சிட்டு போகவா?” என அனுமதி வாங்கி என்னையும் அழைத்துச்செல்வார்.

இருவரும் வீட்டுக்குச் சென்று கிரிக்கெட் பார்க்க ஆரம்பிப்போம். கிரிக்கெட் பார்க்கும் போது உட்கார்ந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். ஒரு பந்து கூட தவற விடக்கூடாது என டிவி பார்த்துக்கொண்டே இருப்பேன். நான் சேரை விட்டு எழுந்து விட்டால் இந்திய அணி தோற்று விடும் என்ற மூடநம்பிக்கை இருந்தது அதைச் சொல்லி அப்பா கிண்டல் செய்வார்.

நான் பள்ளிக்குச் சென்று வர சிரமமாக இருப்பதால் மீண்டும் வீட்டை காலி செய்துவிட்டு ஆதி விநாயகர் கோயில்

தெருவிற்குக் குடி போனோம். மறுபடியும் ‘கேபிள் கட், 1999 கிரிக்கெட் உலக கோப்பை தொடங்கியது. செய்தித்தாளில் வந்த போட்டி அட்டவணையை கட் செய்து வீட்டுச் சுவரில் ஒட்டினார் அப்பா. இந்தியா முதல் போட்டியில் தென் ஆப்பிரிக்காவை எதிர்கொள்கிறது. இங்கிலாந்தில் நடைபெறுவதால் இந்திய நேரப்படி மதியம் தான் போட்டி தொடங்கும்.

காலையிலேயே அப்பா ஆன்டனா மெக்கானிசம் செய்ய ஆரம்பித்தார். ஏதேதோ புதுப் புது ஒயர்களை வாங்கி வந்தார். பூஸ்டர் ஒன்றைப் பொருத்தினார், ஆண்டனாவை தூக்கி நிறுத்தினார். டிவி போட்டு பார்த்தேன் புள்ளி... புள்ளி.. புள்ளி ஒன்றுமே தெரியவில்லை. மீண்டும் ஆண்டனாவை கழட்டி பரபரப்பாக வேலை செய்தார். மீண்டும் புள்ளி புள்ளி... புள்ளி... பொறுமை இழந்த அப்பா ஆண்டனாவை கழட்டி வீசிவிட்டு வாடா என சைக்கிளை எடுத்தார்.

ஆத்தா வீட்ல போயி கிரிக்கெட் பார்ப்போம் எனப் புறப்பட்டோம். அங்கே கேபிள் கனெக்சன் இருந்தது. ஆனால் ஸ்டார் சேனல் கிடைக்கவில்லை. என்ன செய்வதென்றே தெரியாமல் மன்னார்குடி கடைத் தெருவில் சைக்கிளில் என்னை வைத்துக்கொண்டு சுற்றி வந்தார் அப்பா.

தேரடியில் தேருக்கு அருகே சைக்கிளை நிறுத்தி விட்டு நீண்ட நேரம் யோசித்தார்,

“என்னடா இன்னைக்கு கிரிக்கெட் பார்க்க முடியாது போலயே” என்றார்.

எனக்கு அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

“இருடா, சைக்கிள்ள ஏறு” என என்னை சமாதானப்படுத்தி, பந்தலடி தாண்டி ஏதோ ஒரு தெருவிற்கு அழைத்து சென்றார். ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அது அப்பாவின் தாய் மாமா வீடு. கதவைத் திறந்த அப்பாவின் மாமா ஏதோ ஆகிவிட்டது எனப் பதறிப்போய்,

“என்ன பாண்டி, என்னாச்சு?” என கேட்டார்.

“இல்ல பாஸு (பாஸ்கரன்) கிரிக்கெட் பாக்க வந்தோம்“ என்றார் அப்பா.

அப்பாவை மேலும் கீழும் பார்த்தவர், “உள்ள வாங்க” என கூப்பிட்டார். மதிய உணவு அவங்க வீட்ல தான், இரவு உணவும் அங்கேயே. போட்டியில் இந்திய அணி தோல்வி கிரிக்கெட் வீரர்களைத் திட்டிக்கொண்டே வேகமாக சைக்கிளை மிதித்தார் அப்பா. வீடு வந்து சேர்வதற்குள் நான் தூங்கி விழ ஆரம்பித்தேன்.

எங்கள் ஊரில் கிரிக்கெட் போட்டிகள் நடக்கும். எங்க தெரு கிரிக்கெட் டீம் பேரு ‘டேஞ்சர் பாய்ஸ் நிறைய இடங்களுக்குச் சென்று பரிசுகளை வெல்வோம்.

அப்பா கேட்டார் “எவ்வளோடா பரிசு?”

“பர்ஸ்ட் பிரைஸ் 5000 ரூபாய்” என்றேன்.

“அடேயப்பா” என்றார்.

“நீங்க விளையாடும் போதெல்லாம் பரிசு எவ்வளவு?” என்று கேட்டேன்.

“அப்ப ஏதுடா பரிசெல்லாம், கிரிக்கெட் போட்டி எல்லாம் நடக்காது. பக்கத்து தெரு கூட போட்டி வச்சிப்போம். தோற்றுப்போன தெரு கேப்டன் ஜெயிச்ச தெரு டீம்கிட்ட இந்த தெருக்கிட்ட நாங்கள் தோற்றுவிட்டோம் என எழுதி கையெழுத்து போட்டுக் கொடுப்பான் அதுதான் எங்களுக்குப் பரிசு” என்றார். இந்த தகவல் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

கிரவுண்ட் எதிரே அப்பா கடை வைத்திருந்ததால் போட்டிகள் நடக்கும் போது வேடிக்கை பார்ப்பார். நான் எப்படி விளையாடுகிறேன் என்று நண்பர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வார்.

20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் பிரபலமடைந்த பிறகு அப்பா கிரிக்கெட் பார்ப்பதைக் குறைத்து விட்டார். நாளடைவில் கிரிக்கெட் பார்ப்பதையே நிறுத்தி விட்டார்.

ஒரு கிரிக்கெட் பார்ப்பதற்காக பள்ளிக்கு விடுப்பு எடுத்து வந்தவர், கிரிக்கெட் பார்ப்பதற்காக ஒவ்வொரு வீடாக அலைந்து திரிந்தவர், எப்படி கிரிக்கெட்டை ஒரேயடியாக வெறுத்தார் எனத் தெரியவில்லை. செய்தித்தாள்களில் வரும் கிரிக்கெட் செய்திகளைப் படிப்பதைக் கூட தவிர்த்தார். அப்பாவுக்கும் எனக்கும் இடையே கிரிக்கெட் பற்றிய உரையாடல்கள் நின்றுபோயின.

“நீங்கள் ஏன் கிரிக்கெட் பார்ப்பதை நிறுத்திவிட்டீர்கள்?” என கடைசிவரை அப்பாவிடம் நான் கேட்கவே இல்லை. ●

சிறுகதை

# துடியானசாமி

## சு.இராமசுப்பிரமணியன்

நெல்லுக்காடு ஓர் அழகியசிற்றூர். விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் ஊர். விவசாயமும்கூட குளத்துப் பாசனம் தான். ஊருக்கு வடக்கெல்லையில், ஊரைக்காக்கும் அம்மன் கோயில். அருகில், கம்பீர மாக நிற்கும் சுடலை மாடசாமி. ஊரில் பலசாதியினர் வசித்தாலும், அம்மனும், சுடலையும் அனைவருக்கும் பொதுவான தெய்வங்கள்.



இப்போதெல்லாம், சுடலை மாடன்களை மண்டபம் கட்டி சிறைப்படுத்தி விட்டார்கள். முன்பெல்லாம் திறந்தவெளியில், கையில் அறுவாளுடனும், முறுக்கிய மீசையுடனும், சுட்டெரிக்கும் விழிகளுடனும் வீரம் கொப்பளிக்க நின்றுகாவல் தெய்வமாகக் காட்சியளித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

அம்மனுக்கு ஆடியில் செவ்வாய்க் கிழமைகளிலும், சுடலைக்குப் பங்குனி, சித்திரையில் வெள்ளிக்கிழமைகளிலும் கொடை நடத்துவது வழக்கம். ஒவ்வொரு கொடைக்கும் சுடலை அருள் வந்து சாமியாடும். கோமரத்தாடி குத்தாலிங்கம் என்னும் முதியவர் இறந்தபிறகு சில காலம் சுடலைக்குக் கொடை நடக்கவில்லை.

சில இளைஞர்களின் முன்முயற்சியில் ஊர்மக்கள் ஒன்றுகூடிப் பேசி, சுடலைக்குக் கொடை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. கொடைக்கான நாளும், கொடைக்காக ஒவ்வொரு வீட்டிலும் எவ்வளவு வரி பிரிக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்தார்கள்.

கொடை நிச்சயிக் கப்பட்ட வெள்ளிக்கு முந்தியவெள்ளி, நல்லநேரத்தில் பந்தல்கால் நாட்டப் பட்டது. வழக்கமாக சுடலைக்கு ஆடுபவருக்கு அன்று அருள்வந்து ஆடுவார். கோமரத்தாடி குத்தாலிங்கம் இறந்த பிறகு நடக்கும் முதல்கொடை என்பதால், சுடலை அருள் யார் மீது வரும் என்னும் எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது. வழக்கமாக கோமரத்தாடியின் வாரிசுகளுக்கே, சுடலை அருள் வந்துவிடும். குத்தாலிங்கத்திற்கு வாரிசுகள் இல்லை என்பதால், பந்தல்கால் நாட்டும் அன்று யார் மீதும் சாமி வரவில்லை. யாரும் உரிமை கோரவில்லை என்றும் சொல்லலாம்.

ஒருசில ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் கொடைவிழா என்பதால், வெளியூரிலிருந்து உறவினர்கள் வந்து குவிந்து விட்டனர். அருகில் உள்ளவர்களில் இருந்து ஏராளமான நண்பர்களும் வந்திருந்தனர்.

கொடைக்கு முதல்நாள் மாலை குடியழைப்பு கோலாகலமாகத் துவங்கியது. நையாண்டி மேளம், கும்பாட்டம், கணியான்மேளம், வில்லுப்பாட்டுடன் கொடை விழா துவங்கிவிட்டது. சமஞ்ச கொமரிகள் எல்லாம் கோயிலைச் சுற்றியுள்ள வீடுகளில் மறைந்திருந்து கொடைவிழாவைக் கண்டுகளித்தனர். ‘‘பார்வை ஒன்றேபோதுமே, பல்லாயிரம் சொல்வேண்டுமா?’’, என்று அவர்களது கடைக்கண் பார்வைக்காக, சில இளவட்டங்களும் காத்திருந்தனர். சிறுவர்கள், அவர்களே தயாரித்த சர்பத்துகளுடன் கடை விரித்திருந்தனர். அப்போதெல்லாம் கொடைவிழா என்றால், ராட்டினம் கண்டிப்பாக வந்துவிடும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை இரவு ‘சாமக்கொடை’ அதுதான் கொடைவிழாவின் உச்சநிகழ்வு. நள்ளிரவு 12 மணிக்கு சாமி காடுசுத்தக் கிளம்பும். சாமி காடுசுத்தி வந்த பிறகுதான் ஆடு வெட்டுதல், கோழி அறுத்தல் என்று அனைத்து சடங்குகளும் நடக்கும்.

குத்தாலிங்கம் சாமியாடி இறந்த பிறகு நடக்கும் முதல் கொடை என்பதாலும், பந்தல்கால் நாட்டும் அன்று யார் மீதும் சுடலை அருள் வராததாலும்,

சாமக்கொடைமிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

சுடலை அருள்வருவதற்கான வாய்ப்புள்ள இறந்துபோன கோமரத்தாடி குத்தாலிங்கத்தின் நெருங்கிய உறவினர்களைத் தெரிவு செய்து, அவர்களது மேலாடைகளைக் கழட்டி, மேனியெங்கும் சந்தனம் பூசி நிற்க வைத்தனர். கொட்டும் குழலும் உச்சத்தில் முழங்கின. அவற்றால் பயனில்லை என்ற பிறகு, மேளம் நிறுத்தப்பட்டு கணியான் மேளம் ஆரம்பமானது.

சுடலைக்கொடையில், கணியான் கூத்து முதன்மையானதாகும். சுடலை கொடை விழாக்களில், கணியான்கூத்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கணியான் பாடும்போது பார்த்துக் கொண்டு இருப்பவர்களுக்கே ஆட்டம் வரும். ஊர்மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் நின்றிருந்த வேளையில், திடீரென தொடர்பே இல்லாத கீழத்தெரு சடையன் சுடலை அருள் வந்து ஆடத்தொடங்கினார். பெண்கள் அனைவரும் குலவையிட்டனர்.

அடுத்து சுடலை அருள்வந்தவர் காடுசுத்த போகவேண்டும். முன்பெல்லாம் சாமியாடி சுடுகாட்டிற்குச் சென்று எரியும் பிணத்தின் குடலை எடுத்து மாலையாக அணிந்து வருவார் என்று ஊர்ப்பெரியவர்கள் கதை சொல்வார்கள்.

அதன் பிறகான காலத்தில், சாமி ஊரின் நான்கு எல்லையைச் சுற்றிவிட்டுத் திரும்பிவிடும். சில பயந்த சாமிகள், துணைக்கு மற்ற சாமிகளை அழைத்துச் செல்வதும் உண்டு. ஆனால் சடையன் தனியாகவே காடு சுத்தப் புறப்பட்டு விட்டார்

சல்லடம்மாட்டி, குல்லா வைத்து, இடதுகையில் திருநீற்றுக் கொப்பரையும், வலது கையில் அறுவாளும், இடது கக்கத்தில் எண்ணை விட்டு எரியும் தடித்தத் தீவெட்டியும், வழியில் எதிர்ப்பட்டு மறிக்கும் வாதைகளுக்குக் கொடுக்க இடுப்பில் பச்சைக் கோழிமுட்டைகளும் கட்டி நின்ற சடையன், அந்த சுடலை மாடனே, பீடத்திலிருந்து இறங்கி வந்ததுபோல காட்சியளித்தார்.

வேட்டைக்குப்போன சாமி, கோயிலுக்குத் திரும்பி வருவதற்குள் படப்புப் போட்டு முடிக்க வேண்டும். பீடத்திற்கு முன்பாக ஓலைப்பாயை விரித்து, அதன் மீது தலைவாழை இலையைப் பரப்பியிருப்பார்கள். பொங்கி வைத்தச் சோற்றைச் சுடச்சுடக் கொட்டி, ஆடு அறுத்து அதன் கறியில் வேகவைத்தக் குழம்பை மணக்க மணக்க ஊற்றி, கிளறி, அவித்த முட்டைகளைச் செருகி, பொரித்த அப்பளங்களைப் போட்டு, கறிக்குழம்புச் சோற்றுடன் படப்பு தயார் செய்வார்கள்.

படப்புப் போடுபவர்கள் எட்டு தினங்கள் விரதம் இருந்து, வாயையும், மூக்கையும் வெள்ளைத் துணியால் கட்டி, பயபக்தியோடு செய்வார்கள். பெரும்பாலும், வேளார் சமூகத்தினரே படப்புப் போடுவது வழக்கம். கணியான் தனது கையைக் கீறி, சில துளி இரத்தத்தைப் படப்பில் விடுவதும் வழக்கம். சில ஊர்களில், இது ‘கணியான் கைவெட்டு’ என்றும் சொல்லப்படுவதுண்டு. சாமி காடுசுத்தி வருவதற்குள் படப்புப் போட்டு முடித்துவிட வேண்டும். சில கொடைகளில், முன்னதாகவே திரும்பி விடும் சாமியைத் தாக்காட்டுவது மிகவும் சிரமம்.

சாமி, காடுசுத்தக்கிளம்பியது முதல், திரும்பி வந்து சோற்றுப் படப்பை ஏற்கும் வரையிலும் எவ்வித அரவமும் இருக்கக்கூடாது. பச்சைக்குழந்தையின் அழுகுரல்கூட கேட்கக்கூடாது, கேட்டதும் இல்லை. மேளம், வில்லுப்பாட்டு உள்ளிட்ட அனைத்தையும் நிறுத்தி விடுவார்கள்.

நள்ளிரவில் காடுசுத்தி வரும் சாமிக்கு எதிரில் தற்செயலாகக்கூட யாரும் வரக்கூடாது, வந்ததும் இல்லை. அதையும் மீறிவருபவர்களை எட்டாம் பூசைக் கழிவதற்குள் சாமி பலி வாங்கிவிடும் என்பது நம்பிக்கை.

சடையன், சுடலை அருள்வந்து ஆடுவது இதுவே முதல்முறை. முழு அலங்காரத்துடன், வேட்டைக்குக் கிளம்பி, சுடலையாகவே மாறி, ஆடி ஆடி நடந்து வரும் வழியில் ஊரே அடங்கி அமைதி காத்த அந்த வேளையில் நடக்கக்கூடாதது நடந்தது. குடிபோதையில் இருந்த சப்பாணி என்னும் இருபது வயதான இளைஞன் காடுசுத்தி வந்த சாமியை வழிமறித்தான். நீ என்ன சுடலைமாடனா? இல்லை சடையனா?” என்று கேட்டான். அதோடு நிற்காமல், தீவெட்டியில் ஒரு பீடியையும் பற்ற வைத்தான். பிறகு, ‘போ’ என்று

சொல்லி சாமியை அனுப்பி வைத்தான். சாமி காடு சுத்தி வருவதைக் கண்டு, தெரு ஓரமாக ஒதுங்கி நின்ற சிலர் இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்

சாமி காடுசுத்தி வந்தது. படப்பிற்கு முன்பு கட்டப்பட்டிருந்த திரை விலக்கப்பட்டது. சாமி அங்கும் இங்கும் நகர்ந்து, நுகர்ந்து படப்பை ஏற்றது. கோயிலுக்கு வெளியில் சென்று மூன்று கவளம் சோற்று உருண்டைகளை சாமி விண்ணில் வீசியது.

அப்படி விண்ணில் வீசப்படும் சோறு மீண்டும் தரைக்குத் திரும்பி வராது என்பது நம்பிக்கை. அதற்கு, 'திரளைச்சோறு கொடுத்தல்' என்று பெயர்.

வானத்தில் உள்ள வாதைகள் அந்தச் சோற்று உருண்டைகளை ஏற்றுக்கொள்ளும் என்பது நீண்டகால நம்பிக்கை. இது சங்க காலத்தில், வேலன் வெறியாட்டில் நிகழ்த்தப்பட்டப் பலிச்சோறு கொடுக்கும் நிகழ்வின் தொடர்ச்சி என்றும் சொல்லலாம். வழக்கமாக, அதன் பிறகுதான் சாமக்கொடை உயிர்பெறும். ஆடுகள் வெட்டப்பட்டன. கோழிகள் அறுக்கப்பட்டன. திடீரென மேளங்கள் முழங்க, நாதசுரங்கள் ஒலிக்க மற்ற பீடங்களுக்கான சாமிகளும் ஆட ஆரம்பித்தன.

இந்த சாமியாட்டம், இரண்டு மணி நேரம்கூட நீடிக்கும். அனைத்து சாமிகளும் ஆள் பார்த்து திருநீறு கொடுக்கும். பெண்கள், கடந்த கொடையில் சாமி சொன்ன அருள்வாக்கு நடக்கவில்லை என்று சொல்லி, சாமிகளுடன் சண்டையிடுவார்கள். மாமன் மைத்துனர் முறை உள்ளவர்கள் சாமியாடிகளுக்குக் கோடி வேட்டியும், கோடித்துண்டும் அணிவிப்பார்கள். அத்தோடு கொடை முடிந்துவிடும். பொழுதும் விடிந்துவிடும். சோற்றுப் படப்பைப் பிரித்து வரிதாரர்களுக்குக் கொடுப்பார்கள்.

ஆனால் அந்த ஆண்டு இரண்டாவது சாமக்கொடை நிகழ்ந்தது. காடுசுத்தி வந்த சாமியை வழிமறித்த இளைஞன் சப்பாணியை அடித்து, மிதித்து நொறுக்கிவிட்டார். சடையன். சாமி அடிக்கிறதோ இல்லையோ, சடையன் அடித்தார். சடையன் அந்த ஊரில் ஒருசண்டியர் என்பது ஊர்மக்கள் அறிந்த செய்திதான் அப்போதுதான் சப்பாணி, சாமியை வழிமறித்த செய்தி அனைவருக்கும் பரவியது.

கொடை நடந்த வெள்ளிக்கு மறுவெள்ளி எட்டாம் பூசை மாலையில்தான் சுடலைக்குப் பூசை நடைபெறும். அன்று காலையிலேயே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டது. ஊருக்குக் கிழக்கில் சுடலையை வழிமறித்த சப்பாணி வீடு இருந்தது. அந்தத் திசையிலிருந்து பெண்களின் கூக்குரல் கேட்டது. சுடலை சப்பாணியைப் பலிவாங்கி விட்டது என்று சொல்லிக்கொண்டே ஆண்களும் பெண்களும் சப்பாணி வீட்டை நோக்கி வேகமாக ஓடினார்கள்.

அப்படி ஓடிய அனைவருக்கும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. நடுமுற்றத்தில், வேரற்ற மரமாக வீழ்ந்து கிடந்தது, சுடலையை வழிமறித்த சப்பாணி அல்ல, மாறாக சுடலை அருள் வந்து ஆடிய சடையன்தான். சடையன், சப்பாணி இருவர் வீடுகளும் அருகருகே இருந்ததால், சாமியை வழிமறித்த சப்பாணியைத்தான் சுடலை பலி வாங்கிவிட்டது என்று மற்றவர்கள் நினைத்து விட்டார்கள். எட்டாம் பூசை முடிவதற்குள் காடுசுத்தி வந்த சுடலை ஏன் இறந்தார் என்று தெரியாமல் மக்கள் குழம்பி நின்றனர்.

புதிதாக சாமி ஆடிய சடையனின் இழவு வீட்டில் குழுமியிருந்த பெண்கள் சாடையாக, மெல்லிய குரலில் "ஆனாலும், சுடலை துடியான சாமிதான்" என்று பேசியதைக் கேட்க முடிந்தது. ஏதோ ஒரு அந்தரங்கம் அந்தப் பேச்சில் பொதிந்திருப்பதையும் உணர முடிந்தது.

சுடலையை வழிமறித்த சப்பாணி என்ன ஆனான்? முதல்நாள் இரவு சாமியாடி சடையனிடம் வாங்கிய அடியில் கதிகலங்கிப் போன சப்பாணி, இரவோடு இரவாக ஊரைவிட்டே ஓடிவிட்டான். அந்தச் செய்தியும், சாமியாடி சடையன் இறந்தபிறகுதான் தெரியவந்தது. சேலத்திற்கு ஓடிப்போன சப்பாணி, அங்கு ஒரு ஏட்டுவின் ஒரே மகளைத் திருமணம் செய்து, பிள்ளைகளைப் பெற்று வளமுடன் வாழ்வதாக, சில ஆண்டுகளுக்குப் பிறகு தெரியவந்தது.

*(உண்மைக்கதை 1972இல் என் கண்முன் நிகழ்ந்தது)*

●

# புறநானூறு - தமிழரின் வேர்களைத்தேடி...



ஆரவாரித்து நிற்கிறது
அடு களம்..

சேரனும் சோழனும்
செருகளம் அஞ்சி...
எருமை ஊரன்,
எழினி, திதியன்
இருங்கோ வேண்மான்,
பொருநன் என்னும்
வேளிர் ஐவரை
வேண்டிச் சேர்த்து
பொருட்டை கட்டி
போர்ப்பறை கொட்டினர்...

திரள்படைச் செறிவால்
திணறிய நிலமகள்
முதுகு நெளிந்து
முனகி வியர்த்தனள்...

எழுவரின் தானையும்
எதிர்க்க இணைந்ததோ
இளையோன்; இலைவிடா
முளையோன்; பாலகன்

அவன்...
களத்தினில் குதிக்கும்
காரணம் காட்டி...

காலின் சலங்கை
கடிது கழற்றினான்
வீரக் கழலினை
விரைந்து பூட்டினான்..

குடுமியைக் களைந்து
கொடி உழிஞையில்
தொடுத்த வேம்பினை
தலைமேற் சூடினான்..

சிணுங்கிடும் வளையலை
நீக்கிய கைகளில்
சீறிடும் வில்லினை
சினந்தே ஏந்தினான்...

ஐம்படைத் தாலி
அகற்றா மார்பினன்
பால் மறந்து இன்றுதான்
உணவினை ஏற்றவன்...

சிறுவன் பொடியன்
சமரினில் மடிவான்
கருதியே வந்து
செருவில் வீழ்ந்த
எதிரியின் படையினை - இவன்
இகழ்தலும் இல்லை..
வரிசை வரிசையாய்
வந்த பகைவரின்
வீரரைக் கண்டிவன்
வியத்தலும் இல்லை..

இளையோன் அவனே
எழுகதிர் பாண்டியன்
தலையாலங் கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியன்

புரிந்துகொள் தமிழா
புறநானூறு சொல்லும் பாடம்
பைந்தமிழர் உயிரின் நாதம்..



சமநிலை காப்பவனே
சரித்திர நாயகன்.

‘‘கிண்கிணி களைந்த
கால்ஒண் கழல்தொட்டு
குடுமி களைந்த
நுதல் வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப்
பலரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்த
கைச்சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி
பொலிய நின்றோன்

யார் கொல்? வாழ்க
அவன் கண்ணி! தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே;
பால்விட்டு
அயினியும் இன்று
அயின்றனனே; வயின்வயின்
உடன்று மேல்வந்த
வம்ப மள்ளரை
வியந் தன்றும்
இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி
அகல்விசும்பு ஆர்ப்புஎழ
கவிழ்ந்து நிலம்
சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும்
அதனினும் இலனே’’

புறநானூறு 77

மன்னன்: பாண்டியன்
தலையாலங்கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியன்
புலவர் : இடைக்குன்றூர் கிழார்

**இலரா மோகன்**

நெஞ்சுக்குள்

# மலரு... பாரதி வந்திருக்கான்!

## கலைபாரதி

அவர் கைத்தொழில் ஆசிரியர்தான். மிக நீண்ட காலம் வரை தமிழ் ஆசிரியர் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் அவரது உரையாடலின் நீட்சி அவரை அப்படியே நினைக்க வைக்கும். பேராசிரியர் அ.மார்க்சின் மகள் திருமணத்தில் வாழ்த்துரை பேசிய பேரா. திருமாவளவன் அவர்கள் அவரை பேராசிரியர்க்கு எல்லாம் பேராசிரியர் என்று விளித்துப் பேசியது இப்போதும் நிழலாடுகிறது. சமூக நகர்வு ஒவ்வொன்றையும் அரசியலாகவே பார்ப்பவர் அவர். அந்த அரசியலும் அடித்தட்டு மக்களுக்கான அரசியலாகவே இருக்கும். அவரை தோழர் என்றோ ஆசிரியர் என்றோ சிந்தனையாளர் என்றோ அழைப்பதைக் காட்டிலும் புரட்சியாளர் என்று அழைப்பது தான் பொருத்தமானது என்று தோன்றுகிறது.




இலக்கியம் படிப்பார்; தத்துவம் படிப்பார்; பொதுவுடைமை, தலித்திய கொள்கைகள் தாண்டி மக்களைப் படித்தவர் அவர். மக்களை எப்படி பார்க்க வேண்டும் என்று கற்றுத் தந்தவர் அவர்.

தான் பணியாற்றும் பள்ளிக்குப் பேருந்தில் சென்று கொண்டிருக்கிறார். பேருந்து தெப்பக்குளத்தைக் கடந்து செல்கிறது. பேருந்துக்குள் வயதான அம்மா ஒருவர் விற்பனைக்கான கருவாட்டுக் கூடையோடு; ஒரே கருவாடு நாற்றம். நடத்துநர் சத்தம் போட்டு விசிலடித்து அந்த அம்மாவை இறக்கிவிட முற்படும்போது குறுக்காலே புகுந்த அவர் தடுக்கிறார்.

“ஏன் அந்த அம்மாவை எறக்கி வுடுறீங்க...?

‘என்ன சார் இப்படி கேட்குறீங்க. பார்க்க டீசண்ட்டா இருக்கீங்க?”

“நான் டீசண்ட்டா இருக்கிறது இருக்கட்டும். மொதல்ல அந்த அம்மாவை ஏன் எறக்கிவுடுற அதச் சொல்லு.”

சற்று கடுமையாகக் குரலுயர்த்துகிறார்.

“என்ன இப்படி பேசுறீங்க. ஒரே கருவாடு நாற்றம் குடலைப் புடுங்குது. இறக்கிவிடாமல் என்ன பண்றது..”

“பஸ்சுல சாராயம் குடிச்சுட்டு வாந்தி எடுத்தான்னா மண்ணள்ளி போடுற. இவங்கள இறக்கிவிடுற. அப்ப நாறல... இப்ப நாறுதோ? கருவாடு தானய்யா... வறுத்து வச்சா நீயும் தின்ப.. நானும் தின்பேன். இவங்கள இறக்கிவிட்டு பஸ்சை ஒரு அங்குலம் கூட நகர்த்த முடியாது.. அதை நானும் பார்க்கிறேன்’’.

அது. அதுதான் அவர்.

தன்னுடைய பிரச்சனைகளைப் பொதுப் பிரச்சனையாக மாற்றுபவர்கள் மத்தியில் பொதுப் பிரச்சனையைத் தன்னுடைய பிரச்சனையாகப் பார்ப்பவர் அவர். வாடிய பயிருக்காக வாடி நின்ற இராமலிங்கரைக் காட்டிலும் வாடிய வயிற்றுக்காக வாடி நின்ற இராமலிங்கரை சிலாகித்து நின்றவர் அவர். காரல்மார்க்சும் அம்பேத்கரும் பெரியாரும் படித்த அவர் தன்னுடைய கடைசி காலங்களில் காந்தியம், தமிழ்த்தேசியம் நோக்கியும் சிந்திக்கத் தொடங்கினார்.

இன்குலாப்பை தாண்டிய கவிஞன் கிடையாது; அ.மார்க்சை தாண்டிய மனிதன் கிடையாது என்று அழுத்தமாக நம்பியவர் அவர். அவரது திருமணத் தலைமை கூட மக்கள் பாவலர் இன்குலாப் தான். சுப்பையன், சின்னையன், மாசி,பூபாலன், அரங்க.குணசேகரன், காளியப்பன், சிவ. இராசேந்திரன், உஞ்சை அரசன், இரவிக்குமார்,

இளம்பிறை, பேரா.அ.மார்க்சு, பேரா. கல்யாணி, பேரா.இராம சுப்பிரமணியன், பேரா.கோச்சடை பேரா.ச.மணி, பேரா. சிவக்குமார், தய்.கந்தசாமி, தகடூர் இரவி, பாப்லோ அறிவுக்குயில் போன்ற இயங்குதள தோழமைகள் எப்போதும் அவர் கூடவே.

என் கல்லூரிக் கால ஆரம்பக் காலகட்டங்களில் காதல் கவிதை எழுதி அவரிடம் காட்டுவேன். அவரைக் கிளறிவிட வேண்டும் என்பதற்காக.

“கவிதைன்னா இன்குலாப் மாதிரி எழுதணும். இப்ப கவிதை எழுதுவது குடிசைத் தொழில் மாதிரி ஆயிட்டு இந்த தலைமுடிக்காக கவிதை எழுதுபவன எல்லாம் துப்பாக்கியால் சுட்டுடணும் பூபாலன்” என்பார் அவர்.

“என்னைத் திட்டுவதில் அலாதியான பிரியம் அவருக்கு. அவர் திட்டுவதில் நிரம்ப மகிழ்ச்சி எனக்கு.

“என்னடா குடலு உருவுன மாடு மாதிரி வர்ற. சாப்ட்டியா? இல்லையா? என்பதில் தாய்மையின் கரிசனமும், ‘நாட்டோட ஒட்டு மொத்த சோகமும் உன் முகத்தில இருக்கு’, என்பதில் அவர் ஊருக்கே உரித்தான கிண்டலும் கலந்து இருக்கும்.

ஒரு முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிராமங்களில் போலீஸ் என்றாலே நிரம்ப பயம். குப்பான் என்பவர் வரும்போது போலீஸ் ஒருவர் எதிர்க்க வந்திருக்கார்.நமக்கேன் வம்பு என்று குப்பான் கிளுவை மரத்தில் மறைந்து ஒளிஞ்சிருக்கார். பார்த்த ஒருவர், மறுநாள் தேநீர்க்கடையில்,

“இயேசு சிலுவையில் மறைஞ்சாரு...

நம்ம குப்பான் கிளுவையில் மறைஞ்சாரு.

என்று பேசினான் பாரு அந்தத் தேநீர்க்கடை உரையாடல்களில் இருக்கிறது நமக்கான கவிதை’’ என்பார்.

விருந்தினர்களை உபசரிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைபவர் அவர். செல்விருந்து, வருவிருந்து ஓம்புவதற்கான இல்லறச் சான்று அவரும் அவருடைய துணைவியார் மலர்விழி டீச்சரும். அவர் வீட்டில் உணவு உண்டதை இன்றும் சொல்லிக் கொண்டே இருப்பார் பேராசிரியர் இராமசுப்பிரமணியன். அவர் வீட்டுக்குப் பேராசிரியர் கல்யாணி வந்தபோது அவர் கெண்டைக் குஞ்சு விரும்பி சாப்பிடுவார் என்பதற்காக வண்டி எடுத்துக்கொண்டு நீடாமங்கலம் வரை தேடிச் சென்று வாங்கி வந்து சமைத்ததும் உண்டு.

ஒருமுறை அவர் என்னிடம் வயல் நண்டு சாப்பிடணும் போல் இருக்கு என்றார். வண்டியை எடுங்க பேரையூர் பக்கம் போவோம் என்றேன். சாலையோர கதிர் வயலில் இறங்கித் தடவிப் பிடித்த வயல் நண்டுகளை டீச்சர் சமைத்து தர ஒரே மகிழ்ச்சி அவருக்கு.

ஓர் இளைஞர் பட்டாளம் எப்போதும் அவர் கூட உண்டு. எழுத்தாளர் காமராசு, ஆசிரியர் கோபால், அண்ணன் அற்புதம், நண்பர் ராசா, மாசி. பூபாலன், சிவ.வீரையன், புலவர் கலியபெருமாள் இவர்களுடன் கூடவே அவர்களது வாய் பார்க்க நானும். அவர்களது கூர்மையான உரையாடலில் வீடு களைகட்டும். எல்லா கருத்துகளையும் அடித்து நிரவி மேலே செல்பவராக அவர் தான் இருப்பார்.

இன்று ஏப்ரல் 9

அவரது நினைவு நாள்.

காலையில் ஒரு மாலை வாங்கிச் சென்று அவரது படத்தில் போட்டு வணங்கி நின்றேன்.

“மலரு... பாரதி வந்திருக்கான் டீ போடு” என்று சொல்ல அவர் இல்லை.

“அம்மா அண்ணன் வந்து இருக்காங்க டீ போடுங்க” என்றான் அவரது மகன் திலீபன்.

அவர்...

இயக்கத்தினரால் தோழர் என்றும் சக ஆசிரியப் பெருமக்களால் யூ.ஆர் என்றும் எங்களால் சார் என்றும் அறிஞர் பெருமக்களால் சிந்தனையாளர் என்றும் அழைக்கப்பட்ட மன்னார்குடி உ.இராசேந்திரன். இன்று முழுவதும் அவரது நினைவுகளைத் தவிர வேறென்ன இருக்கப் போகிறது என்னிடம்.

(9.4.2022 சிந்தனையாளர் மன்னை உ.இராசேந்திரன் நினைவு நாள்) ●

# அவன்

# ஆறாம் விரல் விற்பவன்!

அவன்
ஆறாம் விரல் விற்பவன்...!

விதவிதமான பேனாக்களை
விற்றுவிடத் துடிக்கிறான்
சிக்னல் நாற்சந்திகளில்...!

"நில்" என்பதுபோல்
சிவப்பு விளக்கு காட்டாமல்
நின்றுகொண்டே இருக்கிறது;
அவன்
விற்பனையும் வறுமையும்!

"சரித்திரத்தைப்
புரட்டிப்போட்டது ஆறாம்விரல்"
இது அறிவாளிகளின் குரல்.....
ஆனால்
அவனது தரித்திரத்தைப்
புரட்டிப்போட்டதாகத் தெரியவில்லை...!

மாணவர்கள்
ஆறாம் விரலை அடிக்கடி மாற்றுபவர்கள்.
விரல்கள் அங்கே விரைவாய் விற்பனை
ஆகும்..

பள்ளிக்கூட வாசம் அறியாதவன்..
ஆனால்;
பள்ளிக்கூடவாசல்கள் கொஞ்சம்
அள்ளிக்கொடுக்கும் அவனுக்கு....
அரை வயிறு நிறையும்......!

பேனா எழுதுகிறதா...
எழுதிக்காட்டத்தெரியாது.....
கிறுக்கிக்காட்டுவான்...!
கிறுக்கலே;
அவன் வாழ்க்கை...!

அவன் கையில் சின்னதாய்
பிஞ்சுபோல்
ஆறாம் விரல்....!

அதிஷ்ட விரலாம்...
அதிஷ்டக்காரனாம்...!

தன்னம்பிக்கையுடன்
அவன்...
ஆறாம் விரல் விற்பவன்...!

**ஆர்.ஏ.பி.ஆரோக்கியதாஸ்**
காமேஸ்வரம்.





சிறுகதை

# ஊர் முழ வேட்டி

## அண்டனூர் சுரா

குகன் கொலைக்குத் தானுமொரு காரணமென நினைத்தாள் சுமந்தி. அவளது உள்ளக்கிடக்கை அப்படியாகச் சொல்லி உரல் உலக்கையாக இடித்துக் கொண்டது. அவளது மன அசை உள்ளுக்குள் வெந்து வெளியில் அழுகையாக முட்டியது.

குகன் கொலையை விடவும் கொலைக்கான காரணம் அவளை நிறையவே வதைத்தது. அவளது நெஞ் சாங்கூட்டுக்குள் அனல் மூட்டி, நாசித்துளைகள் வழியே வெங்கனல் கழன்றது. அக்கொலை குறித்து உள்ளுக்குள் புழுங்கி, ஊமையாக அழுதவள், மனதால் அழுகிக் கொண்டிருந்தாள். மன அழுகலின் முடை நாற்றம் கபாலத்திற்குள் வேகு கட்டியது.

குகள் மரணம் குறித்து யாரிடமேனும் சொல்லி அழ வேண்டும் போலிருந்தது. யாரிடம் சொல்வதென அவள் வாசலில் நின்றபடி, வீட்டையொட்டி ஒடுங்கியோடும் ஒழுங்கையில் போகிறவர், வருகிறவர்களைப் பார்த்தாள். கொலைக்குக் காரணம் தானெனத் தெரிய வருகையில் தன் அப்பன் என்னாவார், என்பதை அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அதை நினைக்கையில் நாக்கில் எச்சிலோடு எச்சிலாகச் சுரந்த சொற்கள் நாக்கு அடியில் கரைந்து, பனித்து தொண்டைக்குள் இறங்கின.

குகனை அவள் ஒருதலைகாதலாக விரும்பியது, அவளுக்கும் அவளது நிழலுக்கும் மட்டும் தெரிந்த ரகசியமாக இருந்தது. இதயம் என்ன விரும்புகிறது, என்று பல நேரம் மூளைக்குத் தெரியாததைப் போலக் குகன் மீது அவள் கொண்ட காதல் இருந்தது. அவன் மீதான மன ஈர்ப்பு காதலா, அன்பா, பாசமா அல்லது இதற்குள் அடங்காத வேறொன்றா, என்கிற முடிவுக்கு அவளால் வரமுடியவில்லை. இன்னதென்று பிரித்தறிய முடியாத அந்த ஈர்ப்பை அவள் காதல் என்றே நம்பினாள். அவளது மனத்திரையில் குகனின் முகம் விழுந்ததும் அவளையும் அறியாமல் காதல், செடியாக முளைத்து வளர்ந்து விழித்திரையின் வழியே எட்டிப் பார்த்தது.

கண்கள் வெளிப்படுத்தும் காதல் உணர்வை அவளால் உதடுகளின் வழியே வெளிப்படுத்த முடியவில்லை. அப்பன் வெளுத்தத் துணிகளுக்குக் கூலி வாங்கச் செல்கையில், அவன்முன் வெட்கமுற்றவளாக நிற்பதும், கால் கட்டை விரலால் வட்டங்கட்டி காதல் சமிக்ஞை செய்தாள். இந்த சமிக்ஞை அவளைத் தவிர வேறொருவர் கண்களில் விழுந்திருக்கவில்லை,

குகன் இப்போது உயிரோடு இல்லை, என்பதை அவளால் நினைக்கவோ, மனதிற்குள் உருட்டவோ முடியவில்லை. அவன் மீதான அவளது காதலை,

வாயுடைத்துச் சொல்வதற்குள்ளாக சூனிய மாகிப் போனதை நினைக்கையில் நெஞ்சு மேட்டில் பாறாங்கல் ஏறி இறங்கியது.

குகன் குறித்து யாரிடமேனும் சொல்லி அழுதிட நினைத்தாள். அவளாக இதை யாரிடம் போய் சொல்வது? யாரும் இது குறித்துக் கேட்காமல் தான்தோன்றியாக இதைச்சொல்லிட முடியுமா,என மனதிற்குள் அசைபோட்டவள், குகனது முகத்தையும் அவனுடனான கடைசி தருணத்தையும் நினைவுக்குக் கொண்டுவந்தாள். அவனது பரந்து விரிந்த கருத்த முகம் குதிரைக்கால் குளம்படியில் பட்டு, கருப்புக் குடைக் காளான் உடைவதைப் போல உடையச் செய்தது.

குகனின் கொலை அவளுக்குப் பெருஞ் சுமையாகக் கனத்தது. சுமை தலையில் ஏறிக்கொண்டு தலையோடு சேர்த்து உடம்பைத் தரைக்கு அழுத்துவதற்குப் பதிலாக, புவியீர்ப்பு விசைக்கு எதிராக முளைத்து வளரும் செடியைப்போல தலைக்கும் மேலே முட்டியது. அவன் குறித்த நினைவுகளால் அவளது தலை வெடித்துவிடுவதைப் போலிருந்தது. சுமந்தி வீட்டிற்குள்ளாக முடங்கிக் கிடந்தாள். அவள் வீட்டுச் சேவலின் கூவல், நச்சுப்பாம்பைத் தின்றுவிட்டு அகவும் மயிலின் அரவமாகக் கேட்டது.

ஊர்ப்பல் குகன் கொலையுண்ட கதையை மூச்சுக்கட்டி பேசியது. யாரும் அக்கொலையுடன் சுமந்தியைத் தொடர்புப்படுத்தி பேசுவதாக இல்லை. ஆனாலும் அக்கொலையுடன் அவளுக்கு அவளே தொடர்புப்படுத்திக் கொண்டாள், முடுக்குத்தெருவில், முச்சந்தியில் பலரும் அவளது பெயரைச் சுட்டி உரக்கப் பேசுவதாக கற்பனை செய்தாள். அதனால் அவளது தூக்கத்தின் மென்னிழை அறுந்து, இமை குருத்துகளில் முட்கள் முளைத்தன.

குகன், மேலத் தெரு குடிவளைவில் இரத்தமும் சகதியுமாக இறந்துகிடந்ததைக் கீழத்தெரு ஜனங்கள் கண்களில் வயிற்றைக் கட்டி பார்த்து வந்தார்கள். தன் குஞ் சில் ஒன்றை இழந்துவிட்ட காக்கைகளின் கரை ஓலமாய் அத்தெரு சஞ்சலத்தது. ஒரு தலைமுறை தூக்கம் துக்கம் கட்டிக்கொண்டு, இமைகளுக்குள் வருத்தி, உருட்டியது.

வாங்கரிவாளால் அவன் முதுகில் வெட்டுப்பட்டு கிடந்தான். அரிவாளின் மூக்கு முதுகில் ஆழமாக இறங்கியிருந்தது. கொத்திய அரிவாளைக் கொத்தியவனால் கூட உருவி எடுக்க முடியவில்லை. அரிவாள் அவனது முதுகில் முளைத்த வாலாக இருந்தது. இரத்தம் பீறிட்டுக் கிடந்தது. குப்புற விழுந்ததில் தாவங்கொட்டை கல்லில் அடிபட்டு, இரண்டு பற்கள் உதிர்ந்து தாவு அமுக்கடி வாங்கியிருந்தது. கண்கள், நெற்றி, தலையில் இரத்தக்களறி, அவனது நாக்கு கடாப் பற்களுக்கிடையில் வெளியே தள்ளியிருந்தது.

தன்னை பின்புறமாக மறைந்து நின்று கொத்தியவன் யாரென்று குகன் பார்த்திருப்பானோ, இல்லையோ! ஆனால் இந்தக் கோழைத்தனமான வேலையை யார் செய்திருப்பாரென்று அவன் ஊகித்திருப்பான்.

அவன் இறந்து பல மணி நேரம் கழித்தே, நாய்கள் தெருவுக்குள் ஊளையிடுவதாக இருந்தன. காக்கைகள் வட்டங்கட்டி கரைந்தன.

சுமந்தி அப்போது குழம்புச் சட்டி அடியில் படிந்து போயிருந்த கடுப்பானில் ஒரு ஆப்பைச் சோற்றைப் போட்டு, பிசைந்து, உருட்டி வாய்க்குக் கொண்டு சென்றாள்.

“அய்யோ, நம்ம குகன் நம்மள விட்டு போய்ட்டான்டியோ'' என ஒருவர் ஓலமிடுகையில் வானம் இரத்தக் களறியாக மேற்கில் சுருண்டுக் கொண்டிருந்தது.

“ என்னடியே சொல்றே?” என்ற ஊரும் வாயும் நெஞ்சுப் பதறி கேட்டன.

அவனது தாய் கடம்பி மார்பிலும், வயிற்றிலும் குத்திக்கொண்டு ஈரக்குலை நடுங்க, பைத்தியம் கொண்டவளாட்டம் அலறி அடித்துக்கொண்டு, அவன் இறந்து கிடந்த திசையை நோக்கிக் குறிப்பறிந்து ஓடினாள். அவள் பின்னே மொத்த கீழத்தெரு ஜனங்களும் அரிக்காடாய் ஓட்டமெடுத்தார்கள்.

கையில் கடுப்பான் உருண்டை வைத்திருந்த சுமந்தி, கடுப்பானை வாசலில் எறிந்துவிட்டு, வெளியே ஓடி வந்தாள். தெருவே ஈரக்குடலைக் கையில் பிடித்துக்கொண்டு மேலத்தெருவை

நோக்கி ஓடியது. குகனுக்கு என்னாச்சு, எப்படியாச்சு,? குற்றுயிரும் கொலை உயிருமாகக் கேட்டாள் சுமந்தி.

''செத்துப் பொயிட்டான்டி'' என்றதும் சுமந்தியின் தலையில் கோடை இடி இறங்கியது. அவளால் ஓடவோ, பாயவோ முடியவில்லை. 'அவன் மீது நான் வச்ச ஆசையில கொள்ளி விழுந்துருச்சே என்றவளாய்' தலையில் அடித்துக்கொண்டு, அதே இடத்தில் சரிந்தாள்.

குகனுக்கும் ராயனின் அக்கா மகள் குண்டலிக்கும் தொடுப்பு என்பதாக ஊருக்குள் அரசல்புரசலாக பேச்சு இருந்தது. மேய்ச்சல் தரிசுக் காட்டில் சப்பாத்திக் கள்ளிகளில் குகன் குண்டலி இருவரின் பெயரும் எழுதப்பட்டிருந்ததைச் சுமந்தி ஒரு நாள் பார்த்திருந்தாள். குண்டலி என்கிற பெயரைச் சப்பாத்தி முள்ளால் கிறுக்கி அழித்துவிட்டு, அவன் பெயரையொட்டி அவளது பெயரை எழுதிக் கொண்டாள்.

குகன் குண்டலி பெயர்களைக் கள்ளிக்குக் கள்ளி எழுதிச் சென்றது குகனோ, குண்டலியோ அல்ல. அவர்களுடன் ஆடு, மாடுகள் மேய்க்கும் அவன் சோட்டுப் பையன்கள்தான். சாரையோடு, நாகத்தை இணைத்தும் புனைத்தும் பேசிப் பழகிய இவர்களுக்கு, குண்டலியோடு குகனை முடிச்சிட்டுப் பேசி ஊருக்குள் கிடுக்கிட்டி அடித்தார்கள்.

குகன் குண்டலி என எழுதியிருந்த கள்ளிகளைப் பார்க்க வந்த ராயன், வாங்கரிவாளால் ஒரே வெட்டாக வெட்டி, கள்ளிகளைச் சாய்க்கச் செய்தான். அவனது கோபம், கள்ளியின் மீதோ இதை எழுதியவர்கள் மீதோ இருந்திருக்கவில்லை. மாறாக, குண்டலி பெயருக்கும் அருகிலிருந்த குகன் மீதே இருந்தது.

மேய்ச்சல் காட்டுக் கள்ளியோடு அப்பெயர் நின்றுவிடவில்லை. ஊர்க் குளத்தங்கரை. கோவில், பாலக்கட்டை களிலும் அப்பெயர் எழுதிக் கிடந்தன. அப்பெயர்கள் ராயனின் கோபத்தை மேலும் முடுக்கி விடுவதாக இருந்தன.

குகன் எருமைகள் மேய்ப்பவன். குண்டலி பசுவும் காளைகளையும் மேய்த்தாள். எருமை மேயும் தரிசுக்காட்டையே அவள் தேடி வந்தாள், பசுவும் காளையும் மேம்புல் மேயவும், எருமைகள் புற்களைக் கரண்டுவதுமாக இருந்தன. இரு வகை மாடுகளும் புல்லைத் தின்று, வீடு திரும்பி ஒன்றுபோல அசைபோடுவதாக இருந்தாலும் பசுவும் எருமையும் ஒன்றல்ல, என்று எருமைக்குத் தெரிந்ததைப்போல குகனுக்குத் தெரியவே செய்தது. குகன், தான் கீழத்தெரான் என்பதை நினைத்து, அவளிடமிருந்து அவன் விலகவே செய்தான். அவன் விலகும் தூரத்திற்கு அவள் அத்தனை வேகமாக நெருங்கச் செய்தாள்.

மேய்ச்சல் காட்டில் காளை பசுவின் மீது ஏறித் தாவிக் கனைப்பதை அழைத்துக் காட்டிச் சிரிப்பாள். அதை அவன் கடைக்கண்ணால் பார்த்து முன் பற்களால் சிரிக்கச் செய்வான். அவனது சிரிப்பில் இவள் வெட்கி வழிவாள், அவள் மேய்க்கும் காளையை எருமைகள் மேயும் பக்கமாகத் திருப்பி, எருமையின் மீது தாவ ஏவுவாள். எருமை அமைதியின் சொரூபமாய், இரண்டடிகள் ஓடி, அதன் போக்கில் மேய்வதாக இருக்கும். எருமையைப் போலவே அதை மேய்க்கும் குகன் குணாம்சம் கொண்டவனாக இருந்தான். அவனுக்கு அவனே ஓர் எல்லை வகுத்துக்கொண்டு, அதைத் தாண்டாது எருமைகளை மேய்த்து வீடு திரும்பினான்.

குகனுக்குக் குண்டலியின் மீது ஈர்ப்பு இருக்கவே செய்தது. ஆனால் அதை வெளியில் காட்டக்கூடாதவனாக இருந்தான். அவள் என்ன சொன்னாலும், அதை ஒரு காதில் வாங்கி, வீட்டில் அசைபோடுகிறவனாக இருந்தான். இரவில் அவனுக்கு அவனையும் மீறி இச்சைகள் பிரவாகமெடுக்கும். நாக்கு சொட்டாரமிடும். அவளை வாஞ்சோடு அணைக்கவும், எல்லை மீறவும் உடம்பால் தூண்டப்படுவான், அவள் குறித்த நினைவுகள் அவன் மீது பனியைப்போலப் படர்ந்து அவனைத் திக்குமுக்காடச் செய்யும். இரவு வதைகளை மறுநாள் மேய்ச்சல் தரிசில் நேரில் காட்டிவிட எத்தனிப்பான். ஆனால், பொழுது விடிந்ததும் எருமையின் குணாம்சத்தைக் கொண்டவனாக மாறிவிடுவான். அவள் மீதான ஏக்கத்துடுப்புகள் பெட்டிப்பாம்பாய்

அடங்க, எருமைகளின் தலைக்குனிவு அவனுக்கு வந்துவிடும்.

ஊர்த்துணியை வெளுக்க, கீழத்தெரு குடிகளால் குடி வைக்கப்பட்டிருந்த வண்ணார் சடையன், ஊர்த் துணியை எடுத்து, செங்குளத்தில் வெளுத்துக் கொடுப்பவராக இருந்தார். செங்குளம் என்பது செம்மண் குளம். குளத்திற்குள் யாரேனும் இறங்கினால் குளம் செம்புலமெடுக்கும். வெள்ளை சட்டை, வேட்டிகளை அதில் நனைத்து எடுத்தால் நீலம் ஒட்டுவதைப்போல செம்மண் புலம் ஒட்டிக்கொண்டு வெள்ளை வேட்டி காவி வேட்டியாகிவிடும். மேலை, நடுத்தெருவிற்கென்று தனி வண்ணார் இருந்தார். இவர் ஊர்த்துணிகளை மாரியம்மன் குளத்தில் வெளுப்பதாக இருந்தார். மாரியம்மன் குளம் அல்லி, தாமரை, தண்டை, நாணல், எனப் பூத்துக் குலுங்கும் குளம், பாலைப் போன்ற தெளிந்த நீர்க்குளம் என்பதால் அக்குளம் ஊரார்களால் வெங்குளம் என அழைக்கப்பட்டு வந்தது. ஊர்க் குடியானவர்கள் வேட்டியை அத்தண்ணீரில் நனைத்து, பிழிந்தால் வேட்டியிலிருந்து பால் ஒழுகுவதைப்போல தண்ணீர் ஒழுகும். மேலை, நடுத்தெரு மக்கள் மட்டுமே இந்தக் குளத்தில் புழங்குவதாக இருந்தார்கள்.

சடையன், வாரம் ஒரு நாள் கீழத்தெரு துணிகளை எடுத்து, உவர்மண்ணால் ஊற வைத்து செங்குளத்தில் துவைப்பார். அவரைப் பொறுத்த வரைக்கும் தூய்மை என்பது செம்மை கலந்த ஓரளவு வெண்மை, என்றளவிலேயே இருந்தது. துணிகளைத் துவைத்து, உலர்த்தி, உரியவரிடம் ஒப்படைப்பது மட்டும்தான் அவரது வேலை. வெளுத்தத் துணிகளுக்குக் கூலியைக் கேட்டுப்பெறுவது, அவரது மகள் சுமந்திதான். தமிழ் மாதம் பிறக்கும் ஒவ்வொரு மாதமும் முதல் தேதி அன்று, கோணிச்சாக்கை எடுத்துக்கொண்டு கூலி வாங்க வீடு வீடாகச் செல்வாள் சுமந்தி, ஐயா, அம்மா, அண்ணே என்றபடி வாசலில் நிற்பாள். இரட்டைச் சடை, நேர் வகிடு, மேலுதட்டில் சின்னதாக ஒரு மச்சம், யாவும் அவளுக்கு முன் செல்லும்.

வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கும் அவளுக்கு அந்த ஒரு நாள் அவளது முகத்தில் பன்னீர்த் தெளிக்கும். அவள் கூலிக்கேட்டுச் செல்லும் வீடுகளில் கஞ்சியோ, நீராகாரமோ தருவார்கள். கஞ்சி ஊற்றும் பெண்களிடம் அவளையும் அறியாமல் அன்பு வழியும். ஒட்டுத்திண்ணையின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு, அவளது அம்மா வயதொத்த பெண்களிடம் பேச்சுக்கொடுப்பாள். அந்த வீட்டில் குழந்தைகள் இருந்தால் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சுவாள். அப்பன் வெளுத்தத் துணிக்குக் கூலி வாங்குவது இரண்டாவது பட்சம், ஊர்த்தெருவைச் சுற்றி வருவதும், குழந்தைகளை வாரியள்ளி கொஞ்சுவதுமே அவளது முதல் வேலையாக இருக்கும். கொடுக்கும் கூலியை வாங்கிக்கொள்வாள். சிலர் கிள்ளிக்கொடுப்பர். சிலர் அள்ளிக்கொடுப்பர். அவளது கைக்கு வரும் பணம், சில்லறைக் காசுகள் அவளுக்குப் பெரிதாகத் தெரியும். சிரித்து, குறுநகை பூத்து நன்றி தெரிவிப்பாள். கொடுக்கும் கூலியை நோட்டில் எழுதிக்கொள்வாள்.

ஒவ்வொரு வீடாகக் கூலி வாங்கிக்கொண்டு, குகன் வீட்டுக்குச் செல்கையில், அவளையும் அறியாமல் வெட்கம் சூழ்ந்து கொள்ளும், குகன் அவளைக் கண்டுவிட்டால், மேய்ச்சலுக்குச் செல்லும் எருமைகளின் அலாதி தொற்றிக்கொள்ளும், அவளுடன் அத்தனை வாஞ்சையோடு உரையாடுவான். சில நேரம் இரட்டை அர்த்தத்தில் கதையாடுவான். அவளுக்கான கூலியை அவன் அத்தனை சடுதியில் கொடுத்துவிட மாட்டான். மச்சான் கூலி கொடுங்க'' எனக் கேட்கச் சொல்லி அவளிடம் பிடிவாதம் செய்வான். அவள், வெட்கத்தில் சிவந்தவளாய், ''கூலியக் கொடுங்கணணே, நான் அடுத்த வீட்டுக்குப் போவணும்'' என்பாள். ஆனாலும் அவளது ஆழ்மனம், இன்னும் சத்தவடம் இதைப்போலப் பேசச்சொல்லி கெஞ்சுவதாக இருக்கும்.

“சரி வீட்டுக்குள்ளே வா, நீ எதிர்பார்க்காத கூலியத் தர்றேன்'' என்பான்.

''உங்க அம்மா இருக்கிறப்ப, கூப்பிடுங்க வர்றேன்'' என்பாள்.

இதுபோன்ற உரையாடல் அவளுக்குப் பிடிக்கவே செய்யும். ஆனாலும் ஊர்க்கண் பார்த்துவிட்டால், பார்க்கும் கண்களில்

பரு முளைத்துவிடுமே, எனப் பயந்தவளாய் அவனிடம் பேசச் செய்வாள். அவளுக்குள் எழும் அச்சத்தில் ஒரு காலை மற்றொரு கால் மிதித்துக் கொள்ளும். கைகள் ஒன்றையொன்று பிசைந்துகொள்ளும். அவளது கால்கள் அடுத்த வீட்டுக்குச் செல்ல எத்தனித்தாலும், மனம் அவனையே சுற்றி வட்டமிடும்,

கடைசியாக சுமந்தி குகன் வீட்டு வாசலில் நின்று, “அண்ணே சுமந்தி வந்திருக்கே'' என்கையில், “மச்சானுக்கிட்ட கூலி வாங்க வந்திருக்கே” என பின்னொட்டைச் சொல்லிச் சிரித்தான் குகன்.

சுமந்தி, நத்தை ஓடுகளாய் சிரித்தவள், ''அண்ணனுக்கிட்ட'' என்றாள். குகன் வீட்டுக்குள் சென்று, அவனது நாலு முழம் வேட்டியை எடுத்து வந்து அவளிடம் விரித்துக் காட்டினான்.

''உன் அப்பன் அதான் என் மாமன் வெளுத்த வெளுப்புல வெள்ளவேட்டி காவி வேட்டியாயிருச்சு” என்றவன் விரித்திருந்த வேட்டியைச் சுருட்டி, அவளது கைக்குள் திணித்தவனாய் அவளது பின் கையைத் தடவிப் பார்த்தான். அவள் கையை முறுக்கிக் கொடுத்தான். அவனது தொடுதலில் அவளது உடம்பு வியர்த்துக் கொட்டியது. பதிலுக்கு அவனது கையைத் தடவிக் கொடுக்கணும் போலிருந்தது. சுமந்தி, அவனது வேட்டியை எடுத்து விரித்துப் பார்த்தாள். வேட்டியில் வெளீர்த்தனம் மறைந்து, காவிப்போன்ற நிறத்தால் சாயந்திரப் பொழுது தெரிந்தது.

குகன் அவளை வெறிக்கப் பார்த்தபடி இருந்தான். அவனை வெட்கம் கலந்த தொனிப்பில் பார்த்தவள். ''ஏ அப்பன் என்ன செய்யும், ஊர்த்துணிய வெளுக்குற குளம் அப்படி “ என்றவளாய் வேட்டியை அத்தனை அழகாக மடித்து, கன்னத்தில் அணைத்தாள். அவளது செய்கையால் குகன் முகம் மலர்ந்து குறுநகை புரிந்தான்.

''அது எனக்குத் தெரியாது. என் வேட்டி எனக்கு வெள்ளையா வேணும். நீ இதை வெளுத்துக்கொடு' என எகடாசி பேசியவன் அவளது கண்களை ஊடுருவிப் பார்த்தான். அவளது கொடும்புகள் வெட்கத்தால் சிவந்தன.

''இந்த வேட்டிய வெங்கொளத்துல வெளுத்தாத்தே உண்டு''

'எந்த கொளத்துல நீ வெளுப்பியோ என் வேட்டி எனக்கு வெள்ளையா வேணும்''

சுமந்தி வேட்டியை நூலாம்படையைப் போல கையில் சுருட்டினாள். நீங்க மேய்க்கிற எரும மேய்ச்சலுக்கு இந்த வெளுப்பு பத்தாதாக்கும்?” என்றவள் 'க்கும்' என்பதை அழுந்த உச்சரித்தாள். இந்த வேட்டியக் கட்டிக்கிட்டு எருமெதே மேய்ப்பாங்கலா?''

''பின்னே, மேலத்தெரு ஆம்பளைங் களாட்டம் வேட்டிய முழங்காலுக்கும் மேலே தூக்கிக் கட்டிக்கிட்டு போவீங்களாக்கும்'' என்பதை அவள் சிரிக்காமல் சொல்லியிருந்தாள்.

சுமந்தியிடமிருந்து இப்படியான ஒரு பதிலைக் குகன் சற்றும் எதிர்பார்க் காதவனாய், தலைச்சுற்றி நின்றான்.

**''நீங்க சொல்றதாட்டம் இந்த வேட்டிய நான் வெளுத்துத் தாரேன். அப்படி வெளுத்துத் தந்தா நீங்க மேலத்தெரு ஆம்பளயாட்டம் வேட்டிய மடிச்சித் கட்டிக்கிட்டு நடப்பீங்களா?''**

''வேட்டிய வெளுப்பா வெளுக்கச் சொன்னா, இப்படி ஜால்சாப்பு பேசுற நீ''

“நீங்க சொல்றதாட்டம் இந்த வேட்டிய நான் வெளுத்துத் தாரேன். அப்படி வெளுத்துத் தந்தா நீங்க மேலத்தெரு ஆம்பளயாட்டம் வேட்டிய மடிச்சித் கட்டிக்கிட்டு நடப்பீங்களா?''

குகன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண் டான். அவன் கடி அவனுக்கு வலித்தது. அந்த வலியினூடே சொன்னான். “நீ வெளுத்துக்கொடு, நான் தினமொரு வேட்டியில் நடந்துகாட்றேன்'' என்றவன் விரல்களைச் சொடுக்கிக்கொண்டு அவளை அனுப்பி வைத்தான்.

குகன் நடுத்தெருவில் வெட்டுண்டு இறந்த செய்தி மூன்றாம் நாளும் அவனை வெட்டிக் கொன்ற ராயனின் வாக்குமூலம் அடுத்த நாளும் பத்திரிக்கைச் செய்தியாக வந்தன.

ராயனின் வாக்குமூலத்தைச் சுமந்தி உள்ளூற அசைபோட்டுப் பார்த்தாள். வாக்குமூலம், அவளது தொண்டைக்குள் சிக்கின. "எங்கத் தெரு ஆம்பளையாட்டம் அவன் விதம் விதமாக வேட்டிய வெளுத்துக் கட்டினான். கட்டிய வேட்டிய மரியாதயில்லாம முழங்காலுக்கும் மேலே தூக்கிக்கட்டினான். அவன் செய்தது, என்னைக் கோவப்படுத்தியது. அதனாலே அவனை நான் வெட்டினேன்" என ராயன் சொல்லியிருந்த வாக்குமூலத்தை கீழத்தெரு ஜனங்கள் மெல்லாமல் விழுங்கி, அதை மறுக்கச் செய்தார்கள். குண்டலையும் குகனும் மேய்ச்சல் தரிசில் பேசிக்கொண்டதை, தொடுப்புப் பழக்கமென நினைத்து, வெட்டிக்கொன்றதாக காவல்துறையிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

மேலத்தெரு ஜனங்கள் ராயன் சொன்னதையே சொன்னார்கள். மயில்கண் வேட்டி, சரிகை வேட்டி, சார வேட்டி, குச்சு வேட்டி, முண்டு வேட்டி, என எங்களுக்குப் போட்டியாக கட்டினான். அதையும் முழங்காலுக்கும் மேலாகத் தூக்கிக்கட்டினான். அதனாலேயே அவன் கொலையுண்டான், என்பதாகச் சொல்லி, குண்டலியின் கற்புக்குக் களங்கம் வராமல் பார்த்துக்கொண்டார்கள்.

சுமந்தியின் மனத்தராசில் குகனும் அவனது கொலைக்கான காரணமும் ஏறி இறங்கின. அவனது மரணத்திற்குக் காரணம் தான் வெளுத்த வேட்டியா, குண்டலியா எனத் தெரியாமல் இருதலமணியமாகத் தவித்தவள், ஓரிரு நாளில் தானே காரணம், என்கிற முடிவுக்கு வந்தாள். அப்படியாகவே அவளது மனப்பல்லி கவுளி சொல்லியது. குகனை அவள் மனதிற்குள் பதியமிட்டு அவன் குறித்த நினைவுகளை மீட்டெடுத்தாள். ஆழ்மன ஈரத்தில் குகன் முளைத்து, நாசி, கண்களின் வழியே எட்டிப் பார்த்தான்.

ஒருநாள் சுமந்தியின் அப்பன் சடையன், அவளது நடத்தை மாற்றத்தைக் குறிப்பறிந்து கேட்கையில், குகன் சாவுக்குத் தானே காரணமென்கிற செய்தியைச் சொன்னாள். அதைக்கேட்டு அவர் அதிர்ந்து போனார். மகளது வாயை இறுகப் பொத்தி, அவளைக் குலுக்கி எடுத்தவர், சொன்ன வாயில் நான்கைந்து அடிகள் கொடுத்தார். மகள் பகிர்ந்து கொண்ட செய்தி அவரைக் கலவரத்தில் ஆழ்த்துவதாக இருந்தது. தனக்குத் தெரியாமல் குகனின் வேட்டியைக் குடியான ஜனங்கள் புழங்கும் குளத்தில் துவைத்த செய்தியை உள்வாங்குகையில், மென்மெல்லிய பயம் அவரைக் கவ்வியது. ஊர்க் குடியானவர் தெருவின் கோபத்திற்கு மகள் ஆளாகிவிட்டதாக நினைத்தவர், இச்செய்தி, மேலத்தெருவுக்குத் தெரியக் கூடாதெனக் கெஞ்சி. மன்றாடி கேட்டுக்கொண்டார்.

சடையன், ஊர்த்துணி எடுப்பதை முற்றிலும் நிறுத்தியிருந்தார். தன் மகள் வெளுத்த வேட்டியால் ஒருவன் கொலையானதை நினைக்கையில் அவரது ஆழ்மனம் குற்ற உணர்வு கொண்டது. அவர் நெஞ்சுக்குள் வெந்து, கண்களில் கனன்றார். தன் மகளை அழைத்துக்கொண்டு, சொந்த ஊருக்குப் போய்விட நினைத்தார்.

கீழத்தெரு ஜனங்கள் அவரிடம் எப்படியெல்லாமோ கேட்டுக்கொண்டும் அவரது செவி மடல்கள் தாழ்வதாக இல்லை. ஊரார்கள் அவரவர் துணிகளைக் செங்குளத்தில் துவைத்துக் கட்டுவதாக இருந்தார்கள். அவர்களது வேட்டிகளைப் பார்த்தாள் சுமந்தி. வேட்டிகள் அவர்கள் யாரென்றும் எந்தத் தெருவாசிகள் என்றும் சொல்லாமல் சொல்வதாக இருந்தன.

சுமந்தி, அப்பன் சடையனிடம் ஊர்த்துணி எடுக்கச் சொல்லி பிடிவாதம் செய்தாள். அவளது வேண்டலைச் சடையன் துவைத்தத் துணியைக் காற்றில் உதறுவதைப்போல உதறச் செய்தார். கீழத்தெரு ஆண்கள் காவி வேட்டியைப் போல வெள்ளை வேட்டியை உடுத்திச் செல்வது, சுமந்தி கண்களை உறுத்தச் செய்தது. தன் அப்பன் வெளுக்காத ஊர்த்துணியை இனி நான் வெளுக்கிறேன், என்கிற முடிவுக்கு வந்தாள். கொலையுண்டு மாய்ந்துபோன குகன் நினைவாக இதை நான் செய்கிறேன், என்றாள். இதைத் தொண்டூழியமாகச் செய்யாமல், ஒரு தொழிலாகச் செய்ய சபதமேற்றாள். வெளுக்கும் கூலிக்குத் தினை, தவசம் பெறாமல் பணத்தை மட்டுமே பெற முடிவெடுத்தாள். துணிகளை வீட்டுக்கு வீடு போய் எடுக்காமல், அவர்களே வீடு

தேடி வந்து தந்தால் வெளுத்துத் தருவதாகச் சொன்னாள்.

அவளைத் தேடி கீழத்தெரு துணிகள் வந்து சேர்ந்தன. துணிகளைப் பொதியாகக் கட்டிக்கொண்டு குளத்தங்கரைக்குச் சென்றாள். அவளது அப்பன் வழக்கமாகத் துவைக்கும் செங்குளத்திற்கு செல்லாமல், மேலத் தெருவையொட்டியிருக்கும் வெங்குளத்தடிக்குள் இறங்கினாள்,

துணிகளை உவர்மண்ணில் ஊற வைத்து, தெப்பளங்கட்டி அடித்துத் துவைத்து வெளுத்தாள். அவள் துணிகளை அடித்துத் துவைக்கையில், குகனும் அவனுடனான உரையாடலும் நினைவுக்கு வந்தன. அவனுடன் பேசுவதைப்போல, அவளுக்கு அவளே பேசிக்கொண்டு துணிகளை வெளுத்தவள், வெளுத்த வேட்டிகளுக்கு நீலச் சாயமேற்றி கொடிக் கயிற்றில் காயப்போட்டாள். வேட்டிகள் காற்றில் அளாவிக் காய்ந்தது, கொக்குகள் நீல வானத்தில் சரம் சரமாகப் பறப்பதைப் போலிருந்தன.

●

---

# குளக்கரை

குறிபார்த்து எறிந்த
கூழாங்கற்கள்
ஏற்படுத்திய
வட்ட வளையங்கள்
ஆக்கிரமித்த
குளக்கரையில் நான்.

இரை விழுந்ததோ
எட்டிப்பார்த்து
ஏமாந்துபோகும் மீன்கள்!

வளைய அலைகளில்
சுருக்கி விளையாடும்
பழுத்த முருங்கைக்கீரைகள்!

வரம்வாங்கி வந்ததோ
வியப்பில்
தண்ணீரில் நடக்கும் பூச்சிகள்!

தென்றலின் தாலாட்டில்
தலையாட்டும்
கோரைப்புற்கள்

நிலம்நின்று தாவி
தண்ணீரில்
தம்பட்டமடிக்கும்
தவளைகள்!

ஊடுருவும் கண்களில்
மீன்கள் புலப்படுகிறதா
நோட்டமிடும்
மீன்கொத்திகள்!

இப்படி
திகட்ட திகட்ட
அனுபவம் தந்த குளக்கரையில்
கட்டி எழுப்பப்படுகிறது
மாடிவீடு!

**சு.சரவணன்**
**கோவில்பத்து**

# நறுக்குகள்

குற்றம்
எதுவும் செய்யாமலேயே
ஆயுள்தண்டனைக் கைதிகளாயின
கண்ணாடித் தொட்டிக்குள்
வளர்க்கப்படும் மீன்கள்!

தொடர்புகொள்ள
ஆயிரம் வழிகளிலிருந்தும்
தொடர்புகொள்ள யாருமில்லை...
இப்படிக்கு தனிமை!

இலட்சரூபாய் வாங்கும்
அரசு வேலைக்காரர்
பதறிப்போய் ஓடினார்
'குண்டு அரிசி தீர்ந்துவிடுமோ'' என்று
ரேசன் கடைக்கு!

பூக்கள் இருந்தும்
தேனெடுக்காத தேனீக்கள்...
சமூகத்தின்
வேலிச்சட்டங்கள்
முட்களாய்!

**இரா.திலீபன்**

# காவல்காரனின் இரவு



வெவ்வேறு
முகங்களின்
இரவுகளுக்குச்
சொந்தக்காரன் அவன்.

சாத்தப்பட்ட
கடை வாசல்களில்
சணற்பை விரித்து
உறக்கம் தேடும்
ஏதுமற்றவர்களுக்கும்
சேர்த்தே தொடங்குகிறது
காவல்.

முன்னிரவு
போதையர்களின்
சொல்லமறந்த
கதைகளில்
நிரம்பி வழியும்
செவிகள்.

தூங்கி வழியும்
தாய்
மடியில் விளையாடும்
பிள்ளை.

கடைசிப் பேருந்தையும்
விட்டுவிடக் கூடாதென
தவிக்கும் கண்கள்..

கடைசி நுகர்வோரின்
தொண்டையில்
இறங்க மறுக்கும்
காய்ந்த இட்டிலியும்
காலம்சென்ற துவையலும்
இரக்கம் கொடுக்கும்...

உணவக வாசலில்
எச்சில்இலை
எதிர்பார்த்து
சவ்வுதாள் மெல்லும்
மாடுகளை
விரட்டுவதா
விட்டுவிடுவதா
தவிக்கும் மனம்...

பைத்தியங்களால்
ஒதுக்கப்பட்ட
கந்தல் மனிதனின்
பாடல் ஒன்றே
துணை
அவனுக்கும் இரவுக்கும்...

கண்ணயரும் இரவைத்
தூக்கி எறியப்படும்
செய்தித்தாள் கட்டுகள்
கொசுக்களாய்க் கடிக்கும்...

காய்கறி வண்டிகள்
சத்தத்தில்
தேநீர்க்கடைகள்
இமைகள் திறக்கும்.
விலை கூவல்களில்
இரவு துயில் எழும்..

ஒரு
குவளைத் தேநீரில்
எல்லோருக்கும்
பொழுது விடிகிறது...
காவல்காரனுக்கோ
முடிகிறது...

த.ரெ.தமிழ்மணி

# மருந்துசீட்டு இலக்கியமாக மாறுமா...?

## சின்னப்பயல்

**நல்லெண்ணெய்**

இன்று காலையில்,

''கடைக்குப் போற நீங்க அப்படியே எண்ணெய் வாங்கிட்டு வந்துடுங்க'' என்றாள்.

''என்ன வாங்கணும்?'' என்றேன் நான்.

''எண்ணதான் வாங்கணும்'' என்றாள்.

மனசுக்குள் நகைச்சுவை மருத்துவர் வடிவேலு வந்துபோனார்!

''கோல்டுவின்னர்'' என்றாள். மறந்தும் நல்லெண்ணெய் என்று சொல்வதில்லை.

சனிக்கிழமை தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து, ஆட்டுக்கறி எடுத்துச் சமைத்துச் சாப்பிட்ட காலம் என்ற ஒன்றும் இருந்தது. இப்போதெல்லாம் தஞ்சை மாவட்டப் பகுதிகளில் சனிக்கிழமை கறிக்கடைகள் ஈயாடிக் கொண்டிருக்கின்றன. சனிக்கிழமை அசைவத்தை அனுமன் பறித்துக் கொண்டார். வியாழக்கிழமை என்றால் சாய்பாபா. வெள்ளி, செவ்வாய் எப்போதும் கிடையாது. மற்ற நாட்களில் கார்த்திகை, அமாவாசை, பிரதோஷம் என்றால் அதோ கதிதான். ஆனால், நமக்கு கவுச்சி இல்லேன்னா இறங்காது. ஒரு கருவாட்டுத் துண்டாவது வேணும்.

தீபாவளி என்றால் கறிக்கடைகள் கூட்டத்தில் குமுறும். ஆனால், என் நண்பர் ஒருவர் தீபாவளியன்று கறி எடுக்கமாட்டார். அமாவாசை என்றால் கறி எடுத்துச் சமைத்துச் சாப்பிடுவார். ஏனென்றால் தீபாவளி கூட்டத்தில் கறி சுத்தமாகக் கிடைக்காதாம். கறியின் அளவு குறையுமாம். அமாவசை என்றால் அன்று சுத்தமாகக் கிடைக்குமாம்.

அது இருக்கட்டும். இப்பொழுது நல்லெண்ணெய்க்கு வருவோம்.'ஆமாம்.. இதற்கு மட்டும் ஏன் நல்ல எண்ணெய்-நல்லெண்ணெய். மற்றதெல்லாம்? கேள்வி எழும் அல்லவா...

எண்ணெய் என்றவுடன் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் போகிறேன் நான். அது, நான் 11,12வது படித்துக் கொண்டிருந்த காலம். அப்போது நான் கோமளாக்கா வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் வீட்டில் இருந்த நேசனல் பானாசோனிக் டேப் ரெக்கார்டரில் ஒரு கேசட்டைத்திரும்பத் திரும்ப போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பேன். கலைஞரின் கரகரத்தக் குரலில் ஒருவர் பேசுவார். அந்தப் பேச்சு மனசுக்குள் காந்தம் போல ஒட்டும். அதுவும் எண்ணெய் பற்றியதுதான்.

''மண்ணெண்ணெய் வாங்க
கடைதன்னை அடைந்தேன்
கடைக்காரர் என்னைப் பார்த்து
ஐயா என்ன எண்ணெய் வேண்டும்
நல்லெண்ணெய்யா?
கடலெண்ணெய்யா? என்றார்.
நல்லெண்ணெய் நமக்கு ஆகாது
கடலெண்ணெய் கட்டுப்படி ஆகாது
மண்ணெண்ணையே வேண்டும் என்றேன்
எந்த எண்ணெய் கேட்டாலும் தருவேன்
ஏன் என்னையே கேட்டாலும் தருவேன்
என் மண் அன்னையை மட்டும்
தரமாட்டேன் என்றார்
அந்த மண்ணை மதித்த மறத்தமிழர்!''

என் நினைவு அடுக்குகளில் பதிந்துபோன அந்தக் கரகரத்தக் குரல் இப்போதும் மனசுக்குள் பளிச்சிட்டது.

அன்று எழுத்தாளர் இராமசுப்பிர மணியனுடன் வாயாடிக் கொண்டிருந்த போது, பேச்சு நல்லெண்ணெய் நோக்கித் திரும்பியது. இது மட்டும் நல்லது செய்யும். மற்றதெல்லாம் கெடுதல் செய்யுமா?' என்றார். அப்புறம் என்ன அதுமட்டும் நல்ல பாம்பு. ஓங்கி சாய்வாபோட்டா அது நல்லதா? உடனே நுரைத்தள்ளி மேலே போனா கெட்டதா?' என்றார். தமிழில் நல்லம்கருப்பு. கருப்பாக உள்ள நல்லம் + பாம்பு=நல்ல பாம்பு. அந்தக் காலத்துல நம்ம மண்ணுல நாகம் கருப்பாய் இருந்துச்சு. கருநாகம்தான். கருப்பாக உள்ள நல்லம் + பாம்பு=நல்ல பாம்பு. இருபது, முப்பது வருடத்திற்கு முன்னர் குமுதத்தில் படித்ததாக ஞாபகம் இருக்கு'' என்றார்.

நல்லம்-கருப்பு. கருப்பு எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட நல்லம்+எண்ணெய்– நல்லெண்ணெய். ஒத்த பண்புடைய இரண்டை ஒற்றுமைப்படுத்துவது மரபு. அந்த வகையில் காளமேகமும்,

''ஆடிக் குடத்தடையும்
ஆடும்போதே இரையும்
மூடித்திறக்கின் முகம் காட்டும்
ஓடி மண்டைப் பற்றி
பரபரனும் உற்றிடும்
பாம்பெள்ளனவே யோது''

*பாம்பையும், எள்ளையும் ஒற்றுமைப் படுத்தி இருப்பார்.*

*இன்னும் சொல்லப்போனால் நாகம் என்றாலே கருப்பு. தமிழர்கள் நாகர்கள். நாகர்கள் வாழ்ந்த இடம் நாகப்பட்டினம், நாகர்கோவில், நாக்பூர், நாகலாந்து என்று பரந்து விரிந்திருக்கிறது. ஒன்றுபட்ட இந்தியாவை நம் பழந்தமிழ் இலக்கியங்கள் நாவலந்தீவு என்றே கூறுவதாகக் கருதலாம். நாகம் பாம்பு–நாகப்பாம்பு. நல்லா கருகருன்னு இருக்கின்ற நாவல்பழம்-நாகம் பழம்-நாகப்பழம் – நாவற்பழம் ஆகி இருக்கிறது.*

''தேனுகர் வண்டு மது
தனை உண்டு மயங்கியே
கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்புவின் கனியென்று
தடங்கையில் எடுத்து முகம் பார்த்தாள்
மலர்க்கரங் குவியும் என்று
அஞ்சிப் போனது வண்டோ
பறந்ததோ பழம்தான்
புதுமையோ இது எனப் புகன்றாள்''

*மதுவுண்டு மயங்கிய வண்டை நாவற்பழம் என நினைத்து மயங்கிய தலைவியை விவேக சிந்தாமணி கூறும். சம்புவின் கனி –நாவல்கனி–நாவலந் தீவில் வளர்ந்தது. நாவலந் தீவில் வாழ்ந்த சம்பு–சாம்பான்–சம்பூகன் கருத்த நிறமுடையவனே.*

*மையோ மறி கடலோ மழைமுகிலோ ஐயோ... என்று வர்ணிக்க வார்த்தைகள் கிடைக்காமல் கம்பனையே திக்குமுக்காட வைத்த இராமன் திருமாலின் அவதாரமாக இருக்கிறார். அந்தத் திருமால் பெருமாளாக நல்ல பெருமாளாக நல்லம் பெருமாளாக கருப்பு பெருமாளாக காட்சித் தருகிறார்.*

*"என்னங்க எண்ணெய் வாங்கிட்டு வரச் சொன்னா.. சும்மா மசமசன்னு நிக்கிறீங்க.. போயி சீக்கிரம் வாங்கிட்டு வாங்க''*

*"என்னது.. எண்ணெய் வாங்கணுமா? நல்லெண்ணெய்யா? கடலெண்ணெய்யா?" என்றேன் நான்.*

**மருந்து சீட்டு**

*ஒரு மருந்து சீட்டு இலக்கியமாக மாறுமா? மாறும். பேராசிரியர் மதார்மைதீன் பாடம் நடத்தும்போது ஒரு மருந்து சீட்டு இலக்கியமாக மாறும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் மன்னை இராசகோபாலசாமி கலைக் கல்லூரியில் இளங்கலை தமிழ் இலக்கியம் படித்துக் கொண்டிருந்த காலகட்டம் அது. இளங்கலை தமிழ் இலக்கிய முதல் வகுப்பை எடுத்தவர் பேரா. மதார்மைதீன். பயன்முறைத் தமிழ் என்ற அற்புதமான நூலை எழுதியவர். அவர் பாடம் நடத்தும்போது கையில் எந்தக் குறிப்புகளும் இருக்காது. புத்தகங்கள் இருக்காது. இன்றைக்கு என்ன பாடம் என்று கேட்பார். பாடத்தின் தலைப்பை சொல்வோம். மேசையின் மீது அமர்ந்து கைகளை ஆட்டி ஆட்டி கண்களைச் சுருக்கிப் பேச ஆரம்பிப்பார். மடைதிறந்த வெள்ளமாய் தமிழ் அருவியாய்க் கொட்டும். அவர் ஓர் அறிவுச்சுரங்கம். பலதரப்பட்ட கருத்துகளும் வந்துவிழும்.*

*எங்களுக்கு இலக்கியத் திறனாய்வு நடத்தும்போது இந்தக் கேள்வியைக் கேட்டார். ஒரு மருந்துசீட்டு இலக்கியமாகுமா? என்றார். மருந்துசீட்டு எப்படி இலக்கியமாகும்? நாங்கள் விழித்தோம்! ஒரு சித்தர் பாட்டை சொல்ல ஆரம்பித்தார்.*

''திண்ணம் இரண்டுள்ளே சிக்கல் அடக்காமல்
பெண்ணின்பால் ஒன்றைப் பெருக்காமல்
-உண்ணும்போது
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்உருக்கி
உண்பார்தம்
பேர்உரைக்கின் போமே பிணி''

*என்று நடத்தினார். முதல் மூன்று வரிகள் மருந்து சீட்டுதான். அதாவது கழிவுகளை உடம்புக்குள் அடக்காமல், பெண்ணின் மீது தீராத பெருங்காமத்தைப் பெருக்காமல், அன்றாடம் தண்ணீரைக் காயவைத்து வெந்நீராய்க் குடித்து, உணவில் மோரினை அதிக அளவு எடுத்துக்கொண்டு, நெய்யினையும் சேர்த்து கொள்வாருக்கு எந்த நோயும் வராது என்பது செய்தி. இது சித்தர் பாட்டு. இப்பாடலின் முதல் மூன்று வரியும் ஒரு மருத்துவரின் பரிந்துரை; மருந்து சீட்டு. அவ்வாறு நாள்தோறும் எடுத்துக் கொள்வோரின் பேரைச் சொன்னால்கூட பிணி போய்விடும் என்கிற தமிழ்ப்புலவனின் கடைசி வரி கற்பனை ஒரு மருந்துசீட்டை இலக்கியமாக மாற்றி விடுகிறது.*

-பேசுவோம்

# மனைவி எனும் கவிதை!



நீ
உனைப் பற்றி
ஒரு கவிதை கேட்கிறாய்
என்னிடம்...

பலமுறை கேட்டிருக்கிறாய்
எழுதியதில்லை எதுவும்...
எழுத நினைத்து
எழுத நினைத்துப்
பார்க்கிறேன்
உண்மைக்கு
ஒப்பனை செய்து
என்னவென்று எழுதுவது?

கவிதை கேட்கிறாய் நீ
கவிதை
என்றெழுதுவதைத் தவிர
வேறென்ன எழுதுவது?

நீ என்னையே
எழுதிக் கொண்டிருக்கிறாய்
நான் உன்னை எழுதுவது
எவ்வாறு...?

ஏதேதோ கற்பனை செய்து
பார்க்கிறேன்
நீ இயல்பாக இருக்கிறாய்
நான் உனை
வருணிப்பதெப்படி..?

இரவைப் போல
கருப்பாக இருக்கிறாய்
எந்தப் பளபளப்பும்
சேர்த்துக் கொள்ளாத
ஆதி அழகை
நான் எங்ஙன்ம் எழுதுவது..?

வெள்ளை சீனியல்ல
நீ கருப்பட்டி.
இயற்கையாக இனிக்கிறாய்.
இனிப்பை இனிப்பென்று
எழுதினாலே போதுமே...
நாச்சுவையில் அறியலாம்
பாச்சுவையில் வடிப்பதெப்படி...?

ஓடைநீர்போல
எல்லாம் காட்டிவிடும்
உள்ளம் உனது!
கண்ணால் பார்த்துக்
களிக்காமல்
கவிதை எழுதுவது
எவ்வாறு...?

மனிதர் உருவாக்கிய
பூந்தோட்டமல்ல நீ
தானே விளைந்த
பூக்காடு...

இயற்கை உள்ளத்தில்
செயற்கை வண்ணம்
சேர்ப்பது எப்படி...?

வெகுவாய்ப்
புரட்சி பேசுவாய்
அது புதுக்கவிதை!
அடுத்து கொஞ்சம்
வெட்கப்படுவாய்
அது மரபுக்கவிதை!
வேறு ஒன்றைக்
கவிதை என்று
எப்படி எழுதுவது...?

ஆங்கிலம், இந்தி
எல்லாமும் பேசுகிறாய்
லண்டனிலிருந்து
இப்போதுதான் வந்து
இறங்கியதைப் போல,
நீ நடந்து காட்டினாலும்,
உன் குணம் சொல்கிறது
தமிழ் மண் மணத்தை...
நுகர்ந்து உணர்வதை
எழுதி உணர்வது எவ்வாறு...?

ஐம்பதாயிரம்
ஆண்டுகளுக்கு முந்தைய
கருப்புத்தமிழை
உன் முகம் பார்த்தே
உணர்ந்து கொள்கிறேன்.
தமிழைத்
தமிழ் என்பதைத்தாண்டி
வேறென்ன எழுதுவது.
பெருமைப்படுத்த...?
நீ உனைப்பற்றி
ஒரு கவிதை கேட்கிறாய்
என்னிடம்...
நான்
உனைப் பற்றிப் படர்கிறேன்
ஒரு கொடியாக...
உனைப் பற்றியிருக்கிறேன்
ஒரு குழந்தையாக...
உனைப் பற்றிக் கொள்கிறேன்
ஒரு சுடராக...
உனை நான் பற்றியிருக்க
நான் உனைப் பற்றி
என்ன கவிதை எழுதுவது...?

உன் பெயரையே எழுதுகிறேன்
உலகம் அதைக்
கவிதை என்கிறது.

- சா.சிவகுமார்
இடங்காண்கோட்டை

# மகமாயி நீ இருந்தா கேளு...

## கோ. அருணகிரி

''நாராயணதங்க... பாதாள வீரப்பா. இவ ஏ புள்ள இல்ல ஓம் புள்ள.. சகோதரனுக்கு ஆகாதுன்னு சாதகத்துல சொன்னாவோன்னு தெத்தம் பண்ணி புள்ளய கொடுத்துட்டு, என்னைக்கு தவுட்ட வாங்கிட்டு போனேனோ, அன்னையில இருந்து இது ஓம்புள்ளதா. காலு வலி, தல வலி இல்லாம கையை ஒதறி, கால உதறி இருக்க வை. ஒரு நேரம் இருந்தாப்ல ஒரு நேரம் இருக்க மாட்டேங்குறான். நோங்கு நோங்குன்னு இருக்கான். நோய்நொடி இல்லாம, சீக்குப்புணி இல்லாம இருக்கனுண்டியாயா...''ன்னு கண்ண மூடி சாமிக்கிட்ட பேசிவிட்டு என் நெத்தியில துன்னூர பூசினிச்சு அம்மா.

எனக்கு எப்பவெல்லாம் உடல்நிலை சரியில்லாமப் போகுதோ, அப்பவெல்லாம் அம்மா என்னைக் கூட்டியாந்து எங்க தெரு மொணங்குல இருக்குற இந்த மாரியம்மன் கோவில் வாசல்ல வச்சி கண்ண மூடி மேல்சொன்ன விசயங்களைப் பேசி துன்னுரு பூசிவிட்டு அழைச்சிட்டுப் போறது வழக்கம்.

அடுத்த நாள் முதல் எனக்கு உடல்நிலை சரியாயிடும்.

அப்படியும் சரியாகலைன்னா அந்தக் கோவில் பூசாரி தேசிகர் வீடு. அவர் பெயர் யாருக்கும் தெரியாது. தேசிகர் வீடு என்றுதான் அவர் வீடு அடையாளப்படுத்தப்படும். அவரையும் அப்படித்தான் அழைப்போம். அவருகிட்ட அழைச்சிட்டுப் போயி துன்னுரு போடும் அம்மா. அவரும் அம்மா சொல்லும் அதே வேண்டுதலை அம்மனிடம் நின்று பேசுவார். அவர் கற்பூரம் காட்டையில் அம்மா மீண்டும் அதே வேண்டுதலை அம்மனைப் பார்த்துப் பேசும்.

வெளியில் ஒரு பெண் அம்மனிடம், ''நாராயணதங்க நீ இருந்தா கேளு...'' என்று புகார் சொல்லிக் கொண்டிருப்பாள்.

தேசிகர், என் நெற்றியில் துன்னுரு பூசிவிட்டு வாயைத் தொரடான்னு வாயிலயும் கொஞ்சம் போட்டு விடுவார். ஒரு பொட்டலத்தக் கொடுத்து பாயி தலமாட்டுலேயே வச்சிக்க... அகாலத்துல ஏதும் வெரண்டு கத்தினா, இந்தத் துன்னுரப் பூசிவிடு... ம்... கௌம்பு'' என்று அனுப்பி வைப்பாள்.

பெரும்பாலும் இதுலேயே சரியாகிவிடும் எனக்கு. சரியாகாத பட்சத்தில் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் அம்மா.

''என்ன ராசம்மா... புள்ள ரெண்டுநாளா சொணக்கமா இருக்கான்..'' பொண்டுவ விசாரிப்பார்கள்.

''ஆமாண்டியாயா.. நானும் தேசிகர்கிட்ட அழைச்சிட்டுப் போயி துன்னுரு போட்டேன். நல்லருப்பே இல்ல. படுத்தப் படுக்கையா இருக்கான்..''

''நம்ம காக்கா சாயுபுகிட்டே தா போயி ஓதிக்கிட்டு வர்றியா?''

''நானும் அதாண்டியாயா நெனச்சேன். அவரு அல்லா கோவிலுக்குப் பொழுதோட வருவாரு, தா. இன்னைக்காவது அழைச்சிட்டுப் போறேன்''

காக்கா சாயுபு வீடு மன்னார்குடி அரிசிக்கடை சந்து கடைசியிலும், திருப்பாற்கடல் குளத்திற்குப் திரும்புற மொனையிலும் இருக்கும். அந்தக் காலத்து மன்னார்குடிவாசிகளுக்கு அவரைத் தெரியாம இருக்காது. நரைச்சத் தாடி. நெத்தியில தழும்பு. கையில ஒரு மணியை வச்சி ஏதோ முணுமுணுத்தபடி இருக்கும் அந்த உருவம். என் நெனைப்புல இன்னும் இருக்கு. நேரே போயி திரும்புனா காக்கா சாயிபு வீடு வரும். அத ஒட்டி ஒரு சந்து என்று அவர் வீட்டை அடையாளப்படுத்தி பேசுகிற பழைய மனிதர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

ஒரு சொம்பு தண்ணியை மடியில வச்சி ஏதோ முணுமுணுப்பார். ச்சூ... ச்சூ.. ச்சூ..ன்னு ஒரு ஊது ஊதுவார் தண்ணியில். பிறகு நம்ம தலையைக் குனியச் சொல்லி உச்சி மண்டையில அதே மாதிரி ஊதுவார். இப்படி மூன்று முறை செய்துவிட்டு அந்தத் தண்ணியைத் தன் உள்ளங்கையில் ஊத்தி பளிச்சுன்னு நம்ம மூஞ்சியில அடிப்பார்.

''ம்.. நல்லா பயந்து இருக்கான். தூங்குறப்ப பல்ல நறநறன்னு கடிக்கிறானா?''

''ஆமாம் வெறண்டு வெறண்டு கத்துறான்..!''

''இனிமே சரியாயிடுவான் போ'' எனச் சொல்லி அந்தத் தண்ணியை நம்மளக் கொஞ்சம் குடிக்கச் சொல்வார்.

அந்த ஓதுனத் தண்ணிய நம்மிடமே கொடுத்து விட்டுக்குக் கொண்டு போய் குடியெனக் கொடுத்து விடுவார்.

இதே விதமாய் ஓதி விடுகிற இன்னொரு பாய் இருந்தார். அவர் பெயர் தண்ணிவண்டிக்கார பாய். டீ கடைக்களுக்குக் க்ளப்பு கடைகளுக்குக் கிணற்றிலிருந்தும் குளத்திலிருந்தும் மாட்டு வண்டியில் தண்ணீர் எடுத்து வந்து ஊற்றுவதால். அவருக்கு அந்தப் பெயர்.

காக்காசாயிபு மாதிரியேதான் அவரது அணுகுமுறையும் இருக்கும். கூடுதலாய் ஒரு கட்டு மயில்தோகை வச்சிருப்பார். நம்ம கழுத்து, தலை வழியாக அடித்து வருடி விடுவார். அப்பொழுது நம்மை யாரோ கிச்சுகிச்சு மூட்டுவதாய் இருக்கும். அந்த செயலுக்காகவும், அந்த மயில்தோகையைப் பார்ப்பதற்காகவும் நான் அவரிடம் போக ஆசைப்படுவேன்.

மன்னார்குடியில் உப்புக்காரத்தெரு மாரியம்மன் கோவிலில் ஒரு தாத்தா இருப்பார். பக்கத்து கிராமமான பாமணியிலிருந்து வருவார். துன்னூரு போடுவது, ஆடு-மாடு காணாமல் போய்விட்டால் அது பற்றியும் குறி சொல்வார். எனக்கு அம்மாவாத்து (அம்மை நோய்) ரொம்ப முடியாமப் போனப்போ அந்த மாரியம்மன் கோவிலில் ராத்தங்குனா அம்மை எறங்குமுனு யாரோ சொன்னாங்கன்னு ரெண்டு மூனு நாள் ராத்திரி பகலா அங்கேயே தங்கி இருந்தோம். ஒருவேளை மட்டும் அக்காள்கள் சாப்பாடு கொண்டு வந்து தருவார்கள். மற்ற நேரங்களில் இங்க வந்து எங்களப் போலவே தங்கி இருந்த சனங்கள் ஏதாவது கொடுப்பார்கள். ஆரம்பத்தில் நானும் அம்மாவும் வாங்கிக் கொள்ள ரொம்பவே சங்கப்பட்டோம்.

''யாரோ எவரோன்னு நெனக்காத ஆயி... நானும் ஆலங்கோட்டதா... கோட்டயமூடு''ன்னு சின்ன சிரிப்புடன் அவர் கொடுத்த விதம் பிடித்து இருந்ததால் வாங்கிக்கனும் என்று அம்மா முகச்சாட காட்டியது. (இரண்டு நாளில் எந்த வூரு.. என்ன வீட்டு பேருன்னு எல்லாம் அம்மாவுடன் அவர்கள் கலந்து பேசி இருந்தார்கள்)

உள்ளிக்கோட்டை, ஆலங்கோட்டை பகுதிகளில் இருந்து ஆடு காணும், மாடு காணுன்னு குறி கேட்க வரும் சனங்களிடம்



பேசிக் கொள்வதில் அம்மாவிற்கு நல்லா பொழுது போனது.

''நான் பொறந்தது உள்ளிக்கோட்டை ஊசிமுத்தான் வூடுதான். எம் பொறந்தவன் வூட்டுல மாடு அவுத்துவுட்டா ஒரு மைலுக்கு வரிசையா போவுன்னும்...'' தான் பொறந்த வீட்டுப் பெருமை பேசிக் கொண்டிருக்கும்.

நான் குறி சொல்ற தாத்தாவ வேடிக்கை பார்த்தபடி இருப்பேன்..

தட்டில் பரப்பி வைக்கப்பட்ட துன்னூரில் கையால் கோடு போட்டுக் கொண்டே வருவார். ஓர் இடத்தில் அவர் கை நிற்கும்.

''ஒன் வீட்டுலேந்து தெற்குப் பக்கமா ஒரு கட்டுகழுத்தி பொம்பள வீட்டுல மாடு கட்டி கெடக்குமா'' என்று கூறிவிட்டு ஒரு இடைவெளி கொடுப்பார்.

பொண்டுவ குசுகுசுன்னு தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள். ''பாத்தியா... அந்த கண்டாறஓலிதான் புடிச்சி கட்டி இருக்கான்னு சொன்னேனே.. கேட்டியா?''

பாமணி தாத்தா கண்ணை மூடியபடி கேட்டார்.

''ம்... என்ன செய்யணும். அவ கையி கால மொடக்கிப் போடவா? மாடு வந்தா போறுமா?''

''அவ பாவம் எங்களுக்கு எதுக்குய்யா...? எங்க பொருளு வந்தா போதும்...''

''சரி போ.. கருக்கலோட மாடு ஒன் வாசலுக்கு வரும்'' என்று அனுப்பி வைப்பார். அவரிடம் கொடுக்கும் காசை கையால் வாங்க மாட்டார்.

''எங்கிட்ட எதுக்கு கொடுக்குற... அம்மனைக் கைகாட்டி, அவ உண்டியலில் போட்டுட்டு போ.. அவதானே ஒம் பொருள கொண்டு வந்து சேர்க்கிறா..''

ரெண்டு நா, ராத்தங்குன நாங்க மூணாநாள் வீட்டுக்கு கௌம்பையில், குளித்து முழுகி, ஈரப்புடவையுடன் ஒருத்தி கோயில் வாசலில் நின்னு,

''ஏண்டியாயா என்ன இந்தப் பாடு படுத்துற.. தெனம் செத்து செத்து பொழைக்கிற வாழ்வு. மகமாயி நீ இருந்தா கேளு...'' என மாரியம்மனுடன் பேசிக் கொண்டிருந்தது கேட்டது.

●

---


# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

கதை சொல்லி களிடமிருந்து கதைகள்

கவிஞர்களிடமிருந்து கவிதைகள்

கட்டுரையாளர் களிடமிருந்து கட்டுரைகள்

பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமி ருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.

தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்

**9659335462**

மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே 9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.



ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்
79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி
பொது 'இ' சேவை மையம்
அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்
AADHAAR
Pradhanmantri Fasal Bima Yojana
பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT
fssai
Passport Seva
G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com
'கண்ணாமூச்சி' இலக்கிய பணி தொடர வாழ்த்துகள்...

கண்ணாமூச்சி இலக்கியப் பணி தொடர
வாழ்த்தி மகிழ்கிறோம்...




VCRG IN
HOTEL
**CHURCH
PARK**

FEEL THE OCEAN

Free wifi | Amble car parking | Cooking facility | 24hours Hot water | 24hours power Backup

☎ 04365 - 263300

+91 94895 63300, +91 98425 67037

No. 126/14 Thonithurai road, Velankanni, Nagapattinam - 611111